
REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA
ஜூலை26 - ஆக.01, 2004 24 பக்கங்கள் 16.00
July 26 - Aug 01, 2004

# சுடர் ஒளி

THE SUDAR OLI සුඩර් ඔළි



## மறக்க முடியாத ஜூலைகள்!

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

சுடர் ஒளி

ஜூலை 26 — ஆகஸ்ட் 01, 2004

85, ஜெயந்த மல்லிமாராச்சி மாவத்தை,
கொழும்பு—14. டெலிபோன்: 011—4734401—6
பாக்ஸ் : 011 — 4734404
E-mail: editorial@sudaroli.com

## சிறுபான்மை அரசும் ஐ.தே.க நிலைப்பாடும்

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையை நிரூபிப்போம், சபாநாயகரை மாற்றுவோம், தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களைத் துரத்தி அடிப்போம் என்றெல்லாம் அரச தரப்பினர். கடந்த சில நாட்களாக வீறாப்புப் பேசி வந்தனர்.

இதனால், வழமைபோன்று இம் முறையும் நாடாளுமன்ற அமர்வு பெரும் குழப்பத்திலேயே முடிவடையப் போவதாக பலரும் ஊகம் தெரிவித்திருந்தனர்.

இவற்றை எல்லாம் எதிர்பார்த்து நாடாளுமன்றத்திலும் சில முன்னேற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன. நாடாளுமன்றத்தில் அன்று சத்தியப்பிரமாணம் செய்த எம்.பிக்களின் உறவினர்கள் தவிர வேறு எவரும் பார்வையாளர் கலரியில் அனுமதிக்கப்படவில்லை. நாடாளுமன்ற நிகழ்ச்சிகளை படப்பிடிப்பதற்குக் கூட ஊடகங்கள் அனுமதிக்கப்படவில்லை.

ஆனால், எதிர்பாராத விதமாக நாடாளுமன்ற அமர்வு அமைதியாக நடைபெற்றது. வீறாப்பு பேசினவர்கள் கப்சிப் என்று இருந்து விட்டார்கள்.

'பெரும்பான்மையை நிரூபிப்போம்' என்று சவால் விடுத்தவர்கள் பெரும்பான்மையை நிரூபிக்கும்படி எதிர்க்கட்சியினரிடமே பதிலுக்குக் கோரிக்கை விடுத்தனர். இடைக்கால தன்னாட்சி அதிகார சபை குறித்து எதிர்க்கட்சியினரின் நிலைப்பாடு என்ன என்றும் கேள்வி எழுப்பினர்.

இவை எல்லாம் கடந்த நாடாளுமன்றத்தில் படித்த பாடங்களின் விளைவுகள் தான்.

ஆட்சியில் இருக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு இன்னும் ஒரு சிறுபான்மை அரசாகவே இருந்து வருகிறது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸையும் வளைத்துப் பிடிக்கும் முயற்சிகள் இதுவரை வெற்றி அளிக்கவில்லை. இ.தொ.கா. தலைவர் ஆறுமுகன் தொண்டமான் கடுமையாக எதிர்த்து வரும் மேல் கொத்மலைத் திட்டத்தை அமுல்செய்யப் போவதாக அரசு தற்போது அறிவித்திருப்பதால் இ.தொ.கா.வுடனான கூட்டு இனிச் சரிவரமாட்டாது என்பதே பலரினதும் கருத்து.

தற்போதைய தேர்தல் முறையை மாற்றுவதற்கும் இ.தொ.கா. ஆதரவு இல்லை. இந்த தேர்தல்முறை மாற்றப்பட்டால் நாடாளுமன்றத்தில் இ.தொ.காவின் பிரதிநிதித்துவம் குறைந்துவிடும்.

இந்த நிலையிலேயே ஹெல உறுமயவை வளைத்துப் பிடிக்கும் முயற்சிகள் தற்பொழுது துரிதமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எதிர்க்கட்சியினரும் ஆட்சியைக் கவிழ்க்கும் முயற்சியில் தீவிரமாக இருப்பதாகத் தெரியவில்லை. ஹெல உறுமயவின் புதிய நிலைப்பாடும் இதற்குகாரணமாக இருக்கலாம்.

நாடாளுமன்றத்தை செயல் இழக்கச் செய்து தேர்தலுக்குச் செல்லும் எண்ணத்தில் எவரும் செயற்படத் தேவை இல்லை என்றும் —

கிராம மட்டத்தில் இருந்து மக்களை விழிப்பூட்டும் நடவடிக்கைகளை முன்னெடுக்குமாறும் ஸ்ரீ கோத்தாவில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் கட்சியின் மாவட்ட தொகுதி அமைப்பாளர்கள் மற்றும், உயர் பீடத்தினரிடம் எதிர்க்கட்சித் தலைவரும், ஐ.தே.க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியைப் பொறுத்த வரை ஆட்சியைக் கைப்பற்றுவதற்கு அது அவசரப்படாததுக்கு நியாயம் இருக்கியது. அது ஆட்சியைக் கைப்பற்றினாலும் நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி சந்திரிகாதான். மீண்டும் பொதுத் தேர்தல் நடத்தி வெற்றிபெற்றாலும் இதே நிலைமைதான்.

ஜனாதிபதியினதும் ஜே.வி.பியினரினதும்பெரும் பான்மை தென்னிலங்கை மக்களினதும் எதிர்ப்புகளுக்கு மத்தியில் புலிகளுடன் பேச்சு நடத்தவும் அவர்களின் கோரிக்கைப் படி தன்னாட்சி அதிகார சபையை உடனடியாக வழங்கவும் ஐ.தே.க.வுக்கு இனி துணிவு வரும் என்றும் கூறுவதற்கில்லை.

ஏனெனில் தெற்கில் ஜே.வி.பி. தன்னை நன்றாக வளர்த்துக் கொண்டுள்ளது. தன்னாட்சி அதிகார சபை என்றால் தனி நாடு தான் என்று தென்னிலங்கை மக்களை நம்பவைப்பதில் அது ஓரளவு வெற்றிகண்டு விட்டது.

இப்படியான ஒரு நிலையிலேயே தற்போதைய சிறுபான்மை அரசைக் கவிழ்க்காமல் அதனை ஆட்டிப்படைத்து, பலவீனப்படுத்தும் முயற்சியில் ஐ.தே.க. ஈடுபட்டு வருவது போன்று தெரிகிறது.

# அரசின் போக்கு மாறினாலே அடுத்த நகர்வு!

நாளுக்குநாள் நெருக்கடிகளை எதிர்நோக்கி தடம்புரண்டு போய் இருக்கும் இலங்கை இனப்பிரச்சினைக்கான சமாதான முயற்சிகளை மீண்டும் சரியான தடத்தில் நிறுத்தும் முயற்சிகளில் நோர்வேயின் ஈடுபாடு சமீப நாட்களில் அதிகரித்து வருகிறது.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவி ஏற்ற பின்பு, இன்று (25 ஆம் திகதி) மூன்றாவது தடவையாக இலங்கை வரும் நோர்வேயின் பிரதி வெளி விவகார அமைச்சர் விடார் ஹெல்கிஸன் முட்டுக்கட்டை நிலையை அகற்றுவதற்கான முயற்சியை தொடர்ந்து மேற்கொள்வார் என்று நம்பப்படுகிறது.

2003 ஏப்ரல் மாதத்தில் இருந்து இடை நிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியாக விடார் ஹெல்கிஸன் ஏற்கனவே இரு தடவைகள் இலங்கை வந்து ஜனாதிபதியுடனும், விடுதலைப்புலிகளுடனும் பேச்சுக்களை நடத்தி இருந்தார்.

அப்பேச்சுக்களில் ஓரளவு முன்னேற்றம் காணப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்ட போதிலும் எந்த வித நகர்வும் தெரியவில்லை.

2002 பெப்ரவரி 24 முதல் அமுலில் இருந்து வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தம் கூட உடைந்து போகும் நிலைமை உருவாகி வருகிறது.

தமிழ்த் தேசியத்துக்குப் பெரும் துரோகம் செய்த கருணா தரப்பைப் பயன்படுத்தி விடுதலைப்புலிகளுக்கு எதிராக கிழக்கில் இருண்ட யுத்தம் ஒன்றை அரசு நடத்தி வருவதே இதற்கு முக்கிய காரணம்.

கிழக்கில் ஆயுதக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகரித்துள்ளன. இது யுத்த நிறுத்த உடன்படிக்கையை மீறும் செயல். எனவே இந்தச் செயற்படுகளை உடன் கட்டுப்படுத்த வேண்டும் என்று கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் புறூக் ஹொவ்டேயிடம் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் கோரி உள்ளார்.

அரசு சூழ்ச்சிகரமான நிகழ்ச்சி நிரல் ஒன்றை வைத்துக் கொண்டு அதனை நடைமுறைப்படுத்துவதற்காக சமாதானப் பேச்சுக்களை இழுத்தடிக்க முயற்சிக்கிறது போன்று தெரிகிறது.

இப்படியான ஓர் இழுத்தடிப்பு மூலமே கிழக்கில்கருணாவை புலிகளுக்கு எதிராக குழப்பம் விளைவிக்க வைக்க முடிந்தது என்று அரசு நம்புகிறது.

சமாதான சூழல் நாளுக்கு நாள் மோசமடைந்துவரும் நிலையிலேயே விடார் ஹெல்கிஸனின் இன்றைய விஜயம் இடம் பெறுகிறது.

ஜனாதிபதி மற்றும் அரச சமாதான செயலகத்தின் பணிப்பாளர் ஜயந்த தனபால ஆகியோரே விடார் ஹெல்கிஸனுக்கு அழைப்பு விடுத்திருந்தனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

இன்று கொழும்பு வரும் ஹெல்கிஸன் உடனடியாகவே ஜனாதிபதியைச் சந்தித்து விட்டு நாளை 26 ஆம் திகதி கிளிநொச்சி செல்வார். பின்பு திரும்பி வந்து மீண்டும் ஜனாதிபதியைச் சந்திப்பார்.

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்கும் முயற்சியில் ஜனாதிபதி திறந்த மனதுடன் செயற்பட்டால் ஆக்க பூர்வமான சமாதான முயற்சிகளுக்கு ஆதரவு வழங்கப் போவதாக ஐக்கிய தேசியக் கட்சி கூறுகிறது. சமாதான முயற்சிகளில் தற்பொழுது ஏற்பட்டுள்ள முட்டுக்கட்டை நிலை குறித்து ஐ.தே.க கவலை தெரிவித்துள்ளது. இரண்டு வருடங்களுக்கு மேலாக கட்டிக் காத்து வரும் யுத்த நிறுத்த ஒப்பந்தத்துக்கு ஆபத்து ஏற்பட்டிருப்பதாகவும் அது கருதுகிறது.

பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிப்பதற்கான புலிகளின் நான்கு அடிப்படை விடயங்களில் ஒன்றான இடைக்கால தன்னாட்சி அதிகாரசபை குறித்த தனது நிலைப்பாட்டை ஜனாதிபதி இன்னும் தெளிவாகத் தெரிவிக்காமல் இழுத்தடிக்கிறார்.

புலிகள் கோரிவரும் தன்னாட்சி அதிகார சபை நாட்டுப் பிரிவினைக்கு வழி வகுக்கும் என்று பொதுத் தேர்தலுக்கு முன்பு ஜனாதிபதி கூறி வந்தார்.

பின்பு தமிழ்க் கூட்டமைப்பு எம்.பிக்களுடனான சந்திப்பின்போது தன்னாட்சி அதிகாரசபை குறித்து முதலில் பேசுவதற்குத் தயார் என்றார்.

இதன் பின்பு நேரத்துக்கு நேரம் ஒன்று கூறி வருகிறார்.

அரசின் முக்கிய பங்காளிக் கட்சியான ஜே.வி.பியும் தன்னாட்சி அதிகார சபை குறித்தும், நோர்வேயின் பங்களிப்பு குறித்தும் முரண்பாடான கருத்துக்களைத் தெரிவித்து வருகிறது.

ஆகவே, சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஜே.வி.பி. உட்பட அரசாங்கத்தின் பங்காளிக் கட்சிகள் அனைத்தும் இனப்பிரச்சினைத் தீர்[illegible] ஒன்றுபட்ட நிலைப்பாட்டுக்கு வரவேண்டு[illegible]

சமாதானப் பேச்சுக்கள் தொடர்பான ஜனாதிபதியின் குழப்பகரமான கருத்து[illegible]ளும், அரசின் ஸ்திரமின்மையும் [illegible] சேர்ந்து சமாதான சூழலை கேள்வி[illegible]யாக்கி வருகின்றன.

அரசின் இத்தகைய சமாதான சூழலுக்கு விரோதமான நிலைப்பாட்டில் மாற்ற[illegible] ஏற்படும் வரை நோர்வேயின் சமாதான முயற்சிகள் பலன் அளிக்கப் போவதில்லை.

-சஞ்சாரன்-

# மறக்கவே முடியவில்லை!

*21 வருடங்கள் போனாலும் இன்னும் மறக்கவே முடியவில்லை அந்த ரணங்களை.*

எத்தனைஎத்தனை கொலை, கொள்ளை, சூறை, வல்லுறவுகள், சொத்து அழிப்புக்கள். குத்திக் கிழிக்கப்பட்ட தமிழன் உயிரைக் கையில் பிடித்தபடி கப்பல் ஏறிய போது, இந்த நாட்டில் சேர்ந்து இருப்பது இயலாதது என்று ஞானம் வந்தது.

கொழும்புத் துறைமுகக் கரைவிட்டு அகதிக் கப்பல் மெல்ல நகர அகதியான தமிழன் இந்த நாட்டில் இருந்து தூரமாகிப் போனான். ஆழம் காண முடியாத இந்து மா சமுத்திரம் மாதிரி தமிழ் - சிங்கள உறவில் விரிசல் விழுந்தது.

1983 ஜூலைக் கலவரங்கள் தமிழனுக்குச் சொல்லித் தந்த பாடங்கள் ஏராளம்.

அடித்து, மிதித்து அடக்க நினைத்தது சிங்களம். திருப்பி அடிக்கவில்லை என்றால் பிழைக்க முடியாது என்று விழித்துக் கொண்டது தமிழ்த் தேசியம். பலமுள்ளவை தான் உலகில் பிழைக்க முடியும் என்பது தானே டார்வினின் சுவர்ப்புத் தத்துவம்.

இந்த நாடு உங்களுக்குச் சொந்தமில்லை என்று அன்று அவர்கள் சொன்னதால்தான், சொந்தமாய்ச் சுயமாய் எம்மை நாமே ஆள எமக்கொரு நிலம் வேண்டும் என்று தமிழன் தெளிந்தான். அதற்காகப் பேரினவாதிகளுக்கு நன்றி கூறத்தான் வேண்டும்.

அவர்கள் அடிக்கவில்லை என்றால் ஒரு வேளை இன்றும், பதவியும் கதிரையும் போதும் என்று நினைத்து, அதுவே சுகம் எனக் கண்டு தமிழன் சோம்பியிருந்திருக்கக்கூடும். ஆண்ட இனம் மீண்டும் ஆள வேண்டும் என்று சிங்களக் காடையர்களும் இனவாதிகளும்தானே நினைவு படுத்தினார்கள்.

ஜூலை, தமிழனால் எப்போதுமே மறக்க முடியாத மாதம். சிங்களவர்களுக்கு மட்டுமென்ன, அவர்களுக்கும்தான் இந்த மாதங்களை மறக்க முடியாது. இரண்டு வருடங்களுக்கு முன்பு வரை எங்கே விழும் அடி என்று கிலி கொண்டுதானே காத்துக் கிடந்தார்கள் அவர்கள்.



நெருப்புக்கு ஒரு பழக்கம் இருக்கிறது. தன்னில் இருந்து இன்னும் பல நெருப்புக்களை எந்தக் கலப்படமும் இன்றி உருவாக்கும் அது. 83 ஜூலையில் தலைநகரில் சிங்களவர்கள் மூட்டிவிட்ட நெருப்பு, பின்னர் ஒவ்வொரு ஆண்டு ஜூலையிலும் இந்த நாட்டின் எங்கோ ஒரு மூலையில் தன்னை இனம் காட்டியது.

தலைநகரில் குண்டு வெடிக்குமா?, வடக்கு -கிழக்கில் எந்த முகாமாவது தாக்கப்படுமா? எங்கே எது நடக்கும் என்று புரியாமல் சிங்களப்படைகள் மிரண்டு போயிருந்த காலம், இப்போது இரண்டு வருடங்களாகத்தானே அவர்களுக்கு மறந்து போயிருக்கிறது.

அவர்கள் மூட்டி விட்ட நெருப்பின் தீ நாக்குகள் இந்த 20 வருடங்களில் ஆயிரமாயிரமாய் உயிர்ப்பலியெடுத்தன. நெருப்பில் தீய்ந்து போனவர்கள் தமிழர்கள் மட்டுமா? நெருப்புக்கு சுத்தமாய் இனவாதம் கிடையாது. அது சிங்கள[illegible]ரையும் புசித்தது.

எத்தனை தாக்குதல்கள்? எத்தனை அழிவுகள்? எத்தனை சாவுகள்? எத்தனை எத்தனை அவலங்கள்? இரண்டு தசாப்தங்களாய் எரியும் இந்தத் தீ வெளிச்சத்தில் தானே இந்தத் தீவு இப்போது உலகில் இனம் காணப்படுகிறது. யார் யாரோ வருகிறார்கள், சமாதானமாகப் போங்கள் என்கிறார்கள்.

யார் என்ன சொல்லி என்ன சமாதானம் மட்டும் கிட்டுவதாக இல்லை. சில மாதங்களுக்கு முன்புவரை பெரும் ஆரவாரம் காட்டிய சமாதானத்துக்கு இப்போது முகவரியே இல்லை. போர் மேகங்கள்தான் ஆங்காங்கே கருக்கட்டுகின்றன.

இத்தனை இழப்புக்களுக்குப் பின்னரும் ஏமாற்றுதல்களும் இழுத்தடிப்புக்களும் தானே தொடர்கின்றன. மீண்டும் ஒரு போரை இந்த நாடு தாங்காது என்று சொல்லிக்கொண்டு அதை நோக்கித் தானே அனைத்தையும் நகர்த்திக் கொண்டிருக்கிறார்கள்.

இத்தனை ஜூலைகள் வந்தது போதாதா? இன்னும் எத்தனை ஜூலைகளை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்?

83 ஜூலையில் நடந்த கொடுமைகளுக்குக் காரணமான அரசியல் வாதிகள் தமிழ் மக்களிடம் மன்னிப்புக் கேட்க வேண்டும் என்று ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கடந்த வாரம்தான் கண்டியிலே கூறியிருக்கிறார்.

மன்னிப்புக் கோருங்கள் என்று கூறவே அவர்களுக்கு 21 ஆண்டுகள் தேவையாக இருக்கின்றது என்றால் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு அவர்களுக்கு எத்தனை ஆண்டுகள் தேவைப்படுமோ?

இந்த நாட்டிலுள்ள மக்கள் ஜூலைகளைக் கண்டு நடுங்கும் நிலை[illegible] மீண்டும் வருவதைத் தடுக்க இனப்பிரச்சினைக்கு அவசியமான அவசரமான தீர்வு ஒன்று தேவை. அதை இந்த அரசியல் வாதிகள் பெற்றுத் தருவார்களா?

# வவுனியா வளாகப் பிரச்சினையும் மாணவர் போராட்டமும்

வவுனியாவில் நடைபெற்று வரும் யாழ். பல்கலைக்கழகத்தின் வவுனியா வளாகம் தற்போது மூடப்பட்டுள்ளது. வவுனியாவுக்கென தனியான பல்கலைக்கழகம் ஒன்று உருவாக்க வேண்டுமென வவுனியா வாழ் மக்கள் அனைவரும் கருதுகின்றனர்.

இது மிகவும் தூர நோக்குடைய சிந்தனை ஆகும். இதனால் வவுனியா மாணவர்கள் மட்டுமல்லாது, ஏனைய பிரதேசத்து மாணவர்களும் நன்மை அடைவார்கள்.

இத்தகைய கோரிக்கையை உள்ளடக்கி வவுனியா வளாக மாணவர்கள் நீண்ட நாட்களாகப் போராடி வருகின்றனர். இவ்வாறு போராட்டம் ஆரம்பிக்கும் போதெல்லாம் ஏதாவது சாட்டுப் போக்குகள் கூறி மாணவர்களது கல்வியைத் தொடரச் செய்வது நிர்வாகத்தின் வழமையான செயற்பாடாக இருந்து வந்திருக்கிறது. எனினும் தற்போது மேற்கொள்ளப்படும் போராட்டம் சற்று வித்தியாசமானது. நீண்ட காலம் நீடித்து வருகிறது.

கடந்த மாதம் 22ஆம் திகதி தமது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்யுமாறு கோரிவளாக மாணவர்கள் பகிஷ்கரிப்பில் குதித்தனர். இப்போராட்டமும் வழமையான போராட்டமாகவே அமையும் என நினைத்தது நிர்வாகம். இதனால் பெரிதாக இது பற்றி அலட்டிக் கொள்ளவில்லை.

மாணவர்களுடன், விரிவுரையாளர்களும் இணைந்து தமது அடிப்படைத் தேவைகளைப்பூர்த்தி செய்யுமாறு கோரிப் போராட்டத்தில் குதித்தவுடன் நிலைமை மோசமாகியது எனலாம்.

தமது பிரச்சினைக்குத் தீர்வுகாண வேண்டுமெனில் உபவேந்தர் நேரடியாக வரவேண்டும் என மாணவர்கள் கோரியிருந்தபோது, தன்னால் வர முடியாதெனவும் ஒரு குழுவை அனுப்பி வைப்பதாகவும் கூறி உபவேந்தர் ஒரு குழுவை அனுப்பி வைத்தார்.

அக்குழுவுடன் பேச்சுவார்த்தை நடாத்திய மாணவர்கள், அவர்கள் எந்த உடன்பாட்டுக்கும் வரவில்லை எனக் கூறி உபவேந்தரை வருமாறு அழைத்தனர். அத்துடன் குழுவினர் வந்த வாகனத்தையும் தடுத்தனர்.

விடமறிந்து அங்கு விரைந்து வந்தார் வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர். இவர் கொடுத்த உறுதி மொழியின் பேரில் உபவேந்தர் வவுனியாவுக்கு வருகை தந்தார்.

வளாகத்தினுள் வளாக முதல்வர், உபவேந்தர், பீடாதிபதிகள் இந்த விடயம் தொடர்பாக பேசுவதற்காக வருகை தந்திருந்த சமயத்தில், இதுதான் தக்கதருணம் என நினைத்த மாணவர்கள் அவர்கள் அனைவரையும் வெளியில் செல்ல விடாது தடுத்தனர். இரவிரவாக பேச்சுவார்த்தை நடைபெற்றபோதும் எந்த விதமான முடிவுகளும் எடுக்கப்படவில்லை.

அதிகாலை கொழும்பில் இருந்து வந்த வவுனியா அரச அதிபர் கே.கணேஷ், ஏற்கனவே அங்கு நின்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோருடன் இணைந்து இரு தரப்பினரையும் சமரசம் செய்ய முற்பட்டார்.

நீண்ட இழுபறிகளின் பின்னர் மாணவர்களுக்கு உறுதி மொழிகள் வழங்கப்பட்டன.

இதன்படி 2004ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் பம்பைமடுப் பகுதியில் வளாகத்துக்குரிய கட்டுமாணம் ஆரம்பிக்கப்படும் என்றும், விடுதி மைதானத்திற்கான வேலை இம்மாதம் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படும் என்றும், நிரந்தர விளையாட்டு உத்தியோகத்தர் நியமிக்கப்படுவர் என்றும், விடுதிக் கட்டணம் 50 ரூபாவாக குறைக்கப்படும் என்றும், வவுனியா பூங்கா வீதியில் உள்ள வளாக கட்டடத்தின் முதலாவது மாடி மாணவர்களுக்கு உடனடியாக வழங்கப்படும் என்றும், கீழ் மாடி இரண்டு மாதங்களுக்குப் பின்னர் மாணவர்களுக்கு வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

இரண்டாவது மாடி கட்டிய பின்னர் கீழ் மாடியை மாணவர்கள் நிர்வாகத்திடம் ஒப்படைக்க வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டுத் தீர்வு காணப்பட்டது.

மாணவர் பகிஷ்கரிப்பைக் கைவிட்டு தடுத்து வைக்கப்பட்ட யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர், வளாக முதல்வர், பீடாதிபதிகள் ஆகியோரை விடுவித்தனர். இவர்களால் கூறப்பட்ட உறுதி மொழிகளை அரச அதிபர், நாடாளுமன்ற உறுப்பினர் முன்னிலையில் எழுத்து வடிவில் மாணவர்கள் பெற்றுக்கொண்டனர்.

28ஆம் திகதி வழமைபோல் விரிவுரைகள் இடம்பெற்றன. திடீர் திருப்பமாக நிறுவன உத்தியோகத்தர்களும், கல்விசாரா ஊழியர்களும் வேலைநிறுத்தத்தில் குதித்தனர்.

இதுதான் சந்தர்ப்பம் என்று நினைத்த நிர்வாகம் சகல கல்வி செயற்பாடுகளையும் இடை நிறுத்துவதாக அறிவித்தது.

தமக்கென கட்டடப்பட்ட கட்டடத்தை நிர்வாகம் தம்முடன் ஆலோசிக்காது மாணவர்களுக்கு வழங்கினால் தாம் வீதிக்கா போவது என்று கூறி நிறுத்தம் ஆரம்பித்தனர்.

வளாக நிறுவன உத்தியோகத்தர்களும், கல்வி சாரா ஊழியர்களும் மேற்கொண்ட இந்த வேலை நிறுத்தமானது மாணவர் மத்தியில் பெரும் பிரச்சினையைத் தோற்றுவித்தது.

மாணவர்களுக்கும் நிர்வாக, கல்விசாரா ஊழியர்களுக்கும் மத்தியில் பெரும்பிளவு ஏற்பட்டது. தாம் போராடிப் பெற்றுக் கொண்டதை விட்டுக் கொடுப்பதா என மாணவர்களும் –

தமக்காக கட்டப்பட்ட கட்டத்தை தாம் எவ்வாறு விட்டுக் கொடுப்பதென நிர்வாக, கல்விசாரா ஊழியர்களும் –

மாணவர்களுக்குஎழுத்து மூலம் கொடுத்த வாக்குறுதியில் இருந்து தாம், எவ்வாறு பின்வாங்குவதென வளாக சபையும் ஏட்டிக்குப் போட்டியாக நின்றன.

### அடிப்படை வசதி இல்லாது வளாகம்

வவுனியா வளாகம் பல வகையான அடிப்படை வசதிகள் இன்றியே இயங்கி வந்தது. இதனை எவரும் மறுப்பதற்கோ அல்லது மறைப்பதற்கோ இடமில்லை.

இவ்வளாகமானது 1997ஆம் ஆண்டு முதல் இன்று வரை வளாகமாகவே இயங்கி வருகிறது. இதற்குப் பின்னர் ஆரம்பிக்கப்பட்ட வயம்ப, ரஜரட்டை போன்ற வளாகங்கள் இன்று பல்கலைக்கழகங்களாக வளர்ச்சி அடைந்துள்ளன.

நாட்டில் ஏற்பட்டு வந்த பல்வேறு பிரச்சினைகள் காரணமாக வவுனியா வளாகத்தை பல்கலைக்கழகமாக மாற்றுவதற்கு வளாக சபையோ அல்லது வவுனியா வாழ் மக்களோ அதிக அக்கறை காட்டவில்லை.

அத்துடன் இன்று யாழ் பல்கலைக்கழக உபவேந்தராக உள்ளவர் முன்னர் வவுனியாவளாகமுதல்வராக இருந்தவர். இப்பிரச்சினை இவ்வளவு தூரம் செல்வதற்கு இவரும் ஒரு காரணம் எனப் பலர் குற்றஞ்சாட்டுகின்றார்கள்.

மாணவர்களைப் பொறுத்தவரை இவர்களது போராட்டம் நியாயமானது என்றாலும் சில நடவடிக்கைகளை அவர்கள் தவிர்த்திருக்கலாம்!

ஆரம்பத்தில் மாணவர்களின் போராட்டத்துக்கு உந்து சக்தியாக இருந்த நிர்வாக உத்தியோகத்தர்களும், கல்வி சாரா உழியர்களும் தமக்கென கட்டப்பட்ட கட்டடம் மாணவர்களுக்கு வழங்கப்பட்டவுடன் அதனை ஆட்சேபித்து போராட்டத்தில் குதித்தனர்.

நிறுவனம் சிறப்பாக இயங்க வேண்டுமென்றால், அதன் உயிராக இயங்கும் நிர்வாகம் சரியாக இயங்கவேண்டும். இதனை வளாக சபையோ அல்லது மாணவர்களோ புரிந்து கொள்ளவில்லை.

ஐந்து ஆண்டுகாலமாக வவுனியாவின் நிர்வாகம் இயங்கி வந்த புகையிரத நிலைய முன்பாக இருந்த கட்டடம் அதன் ஒப்பந்த காலம் முடிவடைந்த பின்பு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

வாடகைக்கு கட்டடம் எடுப்பதும் சாத்தியமானது அல்ல. ஏனெனில் வாடகைப் பிரச்சினை. எந்த விதமான ஏற்பாடுகளையும் செய்யாமல் ஆவணங்களை எடுத்துக் கொண்டு வெளியேறு எனக் கூறுவது நியாயமானதா எனக் கல்விசாரா ஊழியர்கள் வினாவுகிறார்கள்.

உடனடியாக மாணவர் தேவைகளை நிறைவேற்ற நிதிக்கு எங்கே போவது என வளாக சபை வினாவுகிறது.

அப்படியானால் வளாகம் வாடகையில் இயங்குவதா என மாணவர்களும், எமக்கு என்ன அடிப்படைப் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்பட்டுள்ளன என விரிவுரையாளர்களும் கேட்கின்றனர்.

அனைவரின் கோரிக்கைகளும் நியாயமானவையாகத் தான் உள்ளன. எனினும், எதிர்காலத்தைக் கருத்தில் கொண்டு தீர்க்கமான முடிவு ஒன்றை எடுக்க வேண்டியது யாழ் பல்கலைக்கழகத்தின் கையில் தான் உள்ளது.

### மீண்டும் போராட்டம்

இப்பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டு மீண்டும் இம்மாதம் 19ஆம் திகதி விரிவுரைகள் ஆரம்பமாகின. வேதாளம் மீண்டும் முருங்கை மரத்தில் ஏறுவதைப் போல, இம்மாதம் 21ஆம் திகதி மாணவர்கள் மீண்டும் போராட்டத்தை ஆரம்பித்தனர்.

வளாக முதல்வரையும், கல்வி சாரா ஊழியர்களையும் பூங்கா வீதி வளாகத்தில் அடைத்து வைத்து, நிர்வாகத்தால் தமக்கு தருவதாக ஒப்புக் கொள்ளப்பட்ட கோரிக்கைகள் எதுவும் நிறைவேற்றப்படவில்லை என மாணவர்கள் குற்றம் சாட்டினர்.

வளாக முதல்வரையும், கல்வி சாரா ஊழியர்களையும் உள்ளே அடைத்து வைத்தவேளை, வெளியில் நின்ற ஊழியர்கள் வவுனியா காவல் துறைக்குச் சென்று முறையிட்டனர். இதனையடுத்து காவல் துறையினர் வளாகத்துக்கு வருகை தந்து மாணவர்களுடன் பேச்சு நடத்திய பின்னர் வளாக முதல்வருடன் பேச்சு நடத்தினர்.

எனினும் எந்த விதமான முடிவுகளுக்கும் நிர்வாகமும், மாணவர்களும் வரவில்லை. மாலை வரை வளாக முதல்வரும், நிறுவன உத்தியோகத்தர்களும் அடைக்கப்பட்டு இருந்தனர்.

பின்னர் மாலை ஐந்து மணியளவில் வவுனியா பிரதேச செயலாளர் திருமதி ஷால்ஸ் மற்றும் அதிகாரிகள், பொலிஸார் போன்றோர் பேச்சு வார்த்தையில் ஈடுபட்டனர். இதன் பின்னர் எதிர்வரும் திங்கட்கிழமை பூங்கா வீதிக் கட்டடத்தின் இரண்டாம் மாடி மாணவர்களுக்கு ஒப்படைக்கப்படும் என முடிவு காணப்பட்டுள்ளது.

இது இவ்வாறு இருக்க, இப்பிரச்சினைக்கும் கல்விசாரா ஊழியர்களுக்கும் தொடர்பு இல்லாத போதும் அவர்களை 7 மணிநேரம் தடுத்து வைத்தமையால் தமது பாதுகாப்புக்குப் பிரச்சினை ஏற்பட்டு இருப்பதாகவும், தமது பாதுகாப்பு உறுதி செய்யப்படும் போது தான் வேலைக்குத் திரும்புவதாகவும் கல்வி சாரா ஊழியர்கள் தெரிவித்துள்ளனர்.

தாம் தடுத்து வைக்கப்பட்டமை தொடர்பாக பொலிஸாருக்குத் தெரிவித்தும் அவர்கள் எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லையென, தெரிவித்த கல்வி சாரா ஊழியர்கள் இது தொடர்பாக மனித உரிமைகள், ஆணைக்குழுவிடம் 22ஆம் திகதி முறையிடப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளனர்.

இப்பிரச்சினையை வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன் கிஷோர் கல்வி அமைச்சர் கவனத்துக்கு கொண்டு வந்துள்ளார்.

வளாகமாக இருப்பதால் பிரச்சினையாக இருப்பதாகவும், எனவே, வன்னி பல்கலைக்கழகமாக்குவது தொடர்பாக கருத்துத் தெரிவித்ததாகவும், இது தொடர்பாக பல்கலைக்கழக ஆணைக்குழுவுடன் பேசுவதாகவும் கூறிய அமைச்சர், இப்பிரச்சினை தொடர்பாக எழுத்து மூலம் தனக்குத் தருமாறு கேட்டுள்ளதாக சிவநாதன் கிஷோர் தெரிவித்தார்.

-மகாமுனி-


Hair Formula CAPSULES

முடி உதிர்தலையும் இள வயதில் நரை உண்டாவதையும் தடுத்து ஆரோக்கியமான கேச வளர்ச்சிக்கு...

மிருதுவான பளபளப்பான சருமத்திற்கும் முகப்பரு உண்டாவதைத் தடுக்க கூடியதுமான



Vitamin-E, BIOTIN-H, Calcium Pantothenate உட்பட 16 விட்டமின்களும் தாதுப் பொருட்களும் அடங்கிய வில்லைகள்.

இறக்குமதியாளர்களும் விநியோகஸ்தர்களும்

K.S.P. இன்ரநெஷனல் பார்மசி

தொ.பே.: (011) 2 449766

பல நாடுகளில் பல லட்சக்கணக்கானவர்கள் பாவித்துப் பயன் பெறுகிறார்கள். இப்பொழுது இலங்கையில் பிரசித்தி பெற்ற சகல பார்மசிகளிலும் கிடைக்கும்.



பலரது பாராட்டையும் பெற்ற மனோதத்துவ வைத்தியம்

(GENERAL PSYCHOTHERAPY)

இளம் சமுதாயத்தினருக்கு சக்தி, ஆளுமை குறைந்து ஞாபக மறதி ஏற்பட்டு, மெலிவு, பயம் நடுக்கம், நித்திரை குறைவுடன்தாழ்வு மனப்பான்மையும் உண்டாகிறது. காரணம் தவறு என்று தெரிந்தும் தவிர்க்கமுடியாது சக்தியை விணாக்குவதேயாகும். எமது மனோதத்துவ வைத்தியத்தால் தவறுகளைத்திருத்தி வெற்றி பெற்ற எதிர்காலத்தை அடையலாம். ஆரம்ப மனநோய் உடனே சுகமாக்கலாம். மற்றும் ஆஸ்மா, நீரழிவு, தலையிடி, வாதம், குழந்தை பேறு இன்மைக்கும், பெண்களுக்கு வெள்ளை போதல், மாதவிடாய் கோளாறு, முடி உதிர்தல், பல்லீறு கரைதல் போன்ற வியாதிகளுக்கும் வைத்தியம் உண்டு. (பதில் பெறுவது எனில் முத்திரைச் செலவு அனுப்ப வேண்டும்.)

பிரபல மனோ தத்துவ நிபுணர் Dr. ஆறுமுகம் அவர்களை நாடுங்கள்

Sexual Disorders (ஆண்மை சக்தி குறைவு)

மனித உறுப்புக்கள் அனைத்தும் வியாதி ஏற்படுவ து போல் ஆண்மைக்கும் சில பிரச்சினைகள் ஏற்படுவது இயல்பே. ஆண்மை சக்தி குறைய பல காரணங்கள் உண்டு. (1) அளவுக்கதிகமாக விந்தை விணாக்குவது, கனவிலும் நினைவிலும் சிறுநீரிலும் விந்து வெளியாவது. (2) உடல் பலவீனம். (3) நரம்புத்தளர்ச்சி ஏற்பட்டு எழுச்சி குறைந்து உறுப்பு சிறுத்துவிடுவது. (4) உறவின் போது விந்து விரைந்து வெளிப்படுதலிலும் ஆகும். பயப்படாதீர்கள்! மனோத்துவ வைத்தியம்(PSYCHOTHERAPY) மூலம் திறமையான மூலிகை மருந்துகளாலும் வெற்றி பெறலாம்.

வெளிநாட்டினருக்கு விசேட வைத்தியம் உண்டு

எம்மைத் தொடர்பு கொண்டு பதில்பெற விரும்புவோர் (முத்திரை செலவுடன்) விளக்கம் தந்தால் மனோதத்துவ வைத்திய (PSYCHOTHERAPY) ஒடியோ கசட், மற்றும் மூலிகை மருந்துகளை பதிவுத்தபாலில் அனுப்பிவைப்போம்.

இப்பொழுது யாழ்ப்பாணத்தில்

கொழும்பில்...

ஜூலை 21 - 26 வரை சந்திக்கலாம்
New Ahmed Turist Inn, Bang Bang Building
10 - 1/A, Bankshall Street, Colombo - 11.
TEl No. 5368426, 368427, Cell. 0722 910796
Hot Line: 0777 569205

கல்முனையில்..

ஜூலை 31, ஆகஸ்ட் 01 ஆம் திகதிகளில் சந்திக்கலாம்
T.M.M. பார்மசி கல்முனை
Tel No. 067 2229329
Hot Line: 0777 569205

வவுனியாவில்...

ஆகஸ்ட் 07, 08, ஆம் திகதிகளில்
Vanni Inn, 2 ஆம் குறுக்குத்தெரு
வவுனியா, Tel No. 024 2222074
Hot Line: 0777 569205

யாழ்ப்பாணத்தில்...

ஆகஸ்ட் 09, 10, 11 வரை
A.S.N. சுற்றுலா விடுதி
392/A, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்
Hot Line: 0777 569205
Tel.No. 021 2223181
021 222 5399

கடிதத் தொடர்புக்கு: Dr. P. Arumugam, 51/5, Koolavady Road Batticaloa, Srilanka. Resident Tel No. 065 2224019, Hot Line: 0777 569205.




# வயசு வந்தாச்சு

காலைச் சேவல் கூவுவதைக் கேட்டு கண்விழித்தாள் தணி. மணி ஐந்து என்பதை அலாரம் காட்டியது. இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமைதானே இன்னும் கொஞ்ச நேரம் தூங்குவம் என்று கட்டிலில் கிடந்து புரண்டாள். தற்செயலாக எதிரே இருந்த நாட்காட்டி தை மாதம் 14 ஆம் திகதி என்பதைக் காட்டியது. அவளையறியாமலே அவளது வாய் ''ஹப்பி பர்த்டே ராஜ்'' என வாழ்த்துக் கூறியது. அவளது மனமோ நான்கு வருடங்கள் முன்னோக்கிச் சென்றது. அன்றும் இதேபோல் எழுந்ததும் முதலில் மனதிலேயே அவனுக்கு வாழ்த்துக் கூறினாள். அன்றைக்கு இருந்த சந்தோஷம் இன்றைக்கு கிடைக்குமா? அதை நினைக்க நினைக்க கண்ணீர்தான் பொல பொலவென்று வடிந்தது.

''டக், டக்''. கதவு தட்டும் சத்தம் கேட்டு எழுந்து மளமளவென்று கண்ணீரைத் துடைத்துக் கொண்டு கதவைத் திறந்தாள். வெளியே பக்கத்து வீட்டு மாமி நின்று கொண்டிருந்தாள்.

''என்ன மாமி இவ்வளவு காலையிலேயே வந்திருக்கீங்க?'' என வினாவினாள்.

''இன்றைக்கு ஞாயிற்றுக்கிழமை இல்லையா. உனக்கு நிறைய வேலையிருக்கும். பாவம் வாரம் ஆறு நாளும் வேலைக்குப் போறே. இன்றைக்கு ஒரு நாள்தானே லீவு. நீ உன் வேலையையும் பார்த்து சமைக்க நேரம் ஆயிடும். அதனால் எங்க வீட்டில சாப்பிட வந்திடுன்னு சொல்லத்தான் வந்தேன். ஆமா ஏன் கண்ணெல்லாம் கலங்கியிருக்கு அழுதியா?'' என மூச்சு முட்ட பேசிமுடித்தாள்.

''அதெல்லாம் ஒண்ணுமில்ல மாமி, வீட்டு ஞாபகம் வந்திருச்சு அதான் '' என சமாளித்தாள் தணி.

''அதுக்கேன் அழுதுகிட்டிருக்கே. காலையில வவுனியாவிலிருந்து பஸ் எடுத்தா மத்தியானம் யாழ்ப்பாணம் போய்ச் சேந்திடுவே. பாங்கில ஒரு கிழமை லீவு எடுத்திட்டு போய் அப்பா, அம்மாவ பாத்திட்டு வாயேன்'' என ஆறுதல் கூறினாள் மாமி.

அப்பா அம்மாவை மட்டும் பார்த்தா சரியா? பார்க்க வேண்டியவரைப் பார்க்க முடியாதே என மனதுக்குள் ஏங்கியவாறே

''ஆமாம் மாமி நானும் அதைத்தான் நினைத்தேன். நாளைக்கே லீவு சொல்லிட்டுப் புறப்படறேன் மாமி'' எனக் கூறினாள் தணி.

''இப்ப சந்தோஷந்தானே. முகத்தைக் கழுவிவிட்டு வேலையைப் பார்'' என தட்டிக் கொடுத்துவிட்டுச் சென்றாள் மாமி.

மறுநாள் காலை அழகாகப் புலர்ந்தது. ''என்ன தணி புறப்பட்டிட்டாயா?'' என்றவாறே மாமி வந்து நின்றாள்.

''ஆ இதோ புறப்பட்டிட்டேன் மாமி'' என கூறியவாறே பயணப் பைகளைத் தூக்கிக் கொண்டு வெளியே வந்தாள் தணி.

''மாமி வீட்டப் பூட்டி திறப்ப எடுத்துக் கோங்க. பாங்குக்கு போன் பண்ணி லீவு சொல்லிவிட்டேன் நான் வர்றேன் மாமி'' என்றவாறு ஆட்டோவில் ஏறினாள்.

''பத்திரமா சந்தோஷமா போய்விட்டு வா தணி'' என்று வழியனுப்பினாள் மாமி.

புளியங்குளத்தில் சோதனைகளை எல்லாம்முடித்துக்கொண்டு பஸ்ஸில் ஏறி உட்கார்ந்தாள். பஸ் புறப்பட்டது. பஸ்ஸின் ஓட்டத்தைப் போலவே அவளது மனமும் மிக வேகமாக முன்னோக்கிச் சென்றது.

* * * *

நான்கு வருடங்களுக்கு முன் தை 14 ஆம்திகதி பாடசாலையில் இடைவேளை மணி அடித்தது.

''டியர் ப்ரெண்ட்ஸ் இன்னிக்கு உங்களுக்கெல்லாம் ஒரு குட் நியூஸ்சொல்லப்போறன்'' என்றாள் தணி.

''என்னடி இன்னிக்கு Physics சேர் வரவில்லையா?'' என்றாள் தாரி.

''அடச் சே! சேர் வராட்டி அது உனக்கு குட் நியூஸா?'' எனத் திட்டினாள் நிரு.

''அந்தாளிட்டப் படிக்கிறது வீட்டில படுத்து நித்திரைகொள்கிறதுக்குச் சரி.''

''சரி சரி விஷயத்துக்கு வாங்கடி. என்னால சஸ்பென்ஸ்தாங்கல. இடைவேளை முடியிறதுக்குள்ள சாப்பிடனும்'' என்று அவசரப்படுத்தினாள் அஞ்சு.

''அதுதான் விஷயமே இன்றைக்கு உங்க சாப்பாடெல்லாம் என் பொறுப்பு. உங்களுக்கு வேண்டியத கன்ரீனில வாங்கிச் சாப்பிடுங்க'' என்றாள் தணி.

''அடக் கடவுளே இது குட் நியூஸா'' என்றாள் ஜெனி.

''இப்ப தெரியுதடி நீ ஏன் இவ்வளவு ஒல்லியாய் இருக்கிறா என்று'' நக்கலடித்தாள் தாரி.

''சரி என்ன இன்னிக்கு புதுசா பார்டி எல்லாம் குடுக்கிறே ஏதாவது விசேஷமா?'' என வினாவினாள் நிரு.

''அட இது தெரியாதா இன்னிக்கு அவ ஆளோட பிறந்தநாள். அதுதான் இதெல்லாம்'' என்றாள் அஞ்சு.

''அடிப்பாவி சொல்லவே இல்ல. யாரடி அவன். எந்த ஊரு, என்ன பேரு, ஆள் எப்படி கறுப்பா சிவப்பா....''

''ஏய் ஏய் கொஞ்சம் மூச்சு விட்டு பேசடி. அப்புறம் அவனோட பிறந்த நாள உன்னோட இறந்த நாளா ஆக்கிடாதே'' என எல்லோரும் நகைத்தனர்.

''சரி சரி உங்க கேள்விக்கெல்லாம் நான் பதில் சொல்கிறேன். அவர் பேர் ராஜன். ஊர் யாழ்ப்பாணம். என் அத்தை பையன்தான். ஆள் கறுப்புத்தான். நான் தான் அவரைக் காதலிக்கிறேன். அவருக்கு இந்த விஷயம் தெரியாது.''

''ஓ அப்ப ஒரு தலைக் காதலா'' கிண்டலடித்தாள் தாரி.

''இப்போதைக்கு இது காணும் பசிக்குது சீக்கிரம் வாங்க கன்ரீனுக்குப் போகலாம்'' ஐவரும் புறப்பட்டனர்.

தணிகா, தாரிகா, நிரு, ஜெனிபர், அஞ்சு ஐவரும் யாழ்ப்பாணம் பிரபல மகளிர் கல்லூரியில் கா.பொ.த. உயர்தரத்தில் கணிதப் பிரிவில் கல்வி கற்பவர்கள்.

மற்றொரு நாள்.

''தணி நான் உங்கிட்ட ஒரு விஷயம் பேசணும்'' எனக் கூறினாள் ஜெனி.

''சொல்லு ஜெனி''

'' இல்ல எப்படி ஆரம்பிக்கிறதுன்னு தெரியல. உன் சொந்த விஷயத்தில தலையிடுறதா நினைக்க மாட்டியே''

''அப்படி எல்லாம் நினைத்தா நான் காதலிக்கிற விஷயத்தை உங்ககிட்ட எல்லாம் சொல்லியிருப்பேனா. பரவாயில்லை. விஷயத்தைச் சொல்லு''

'' நீ உன் அத்தை பையனைக் காதலிக்கிறதா சொன்னே. காதல் தப்பில்லை. ஆனா நீ அதை அவர்கிட்ட சொல்லாததுதான் தப்பு. அவர் மனசில என்ன இருக்குதுன்னு தெரியாதில்லையா. அதனால சீக்கிரம் சொல்லிவிடு. அதுதான் உனக்கும் நல்லது.''

''சொல்லத்தான் வேணும். ஆனா, அதுக்கு இன்னும் நல்ல சந்தர்ப்பம் கிடைக்கல. நிச்சயமா நேரம் வரும் போது சொல்றேன்.''

''ஓல் த பெஸ்ட்''

''சரி வா வகுப்புக்குப் போகலாம்.''

நாட்கள் மாதங்களாக உருண்டோடின.

அன்றொருநாள் தணிகா தனியாக அத்தை வீட்டிற்குச் சென்றாள். அங்கு முன்னறையில் ராஜன்தான் உட்கார்ந்திருந்தான். அவனைக் கண்டதுமே இவளுக்கு வியர்க்க வெளிக்கிட்டது.

''வா தணி உட்காரு. தனியாகவா வந்தாய்'' என ராஜன் விசாரித்தான்.

''ஆமா. வீட்ல வேற யாரும் இல்லையா?''

''இல்லை எல்லாரும் கோயிலுக்குப் போயிருக்கினம்''

இதுதான் சமயம் சொல்லிவிட வேண்டியதுதான்.

''ராஜன் நான் உங்ககிட்ட ஒரு விஷயம் பேசணும்''

''சொல்லு தணிகா''

''நான்... நான் வந்து.... நான் உங்கள லவ் பண்றேன்'' என பயத்தோடு தட்டுத் தடுமாறி சொல்லி முடித்தாள் தணிகா.

அவனது முகத்தில் மெல்லிய புன்னகை அரும்பியது.

''நீ இப்படி சொல்லுவாய் என்று எனக்குத் தெரியும் தணிகா. கொஞ்ச நாளாவே உன்னை நான் கவனிச்சுக்கிட்டே வர்றேன். உன் நடவடிக்கைகள் எல்லாம் வழக்கத்துக்கு மாறாக இருந்தன.

''நீ காதலிக்கிறது தப்பில்லை. ஆனா உன்னோட வயசுதான் தப்பான வயது. பதினெட்டு வயசில என்ன காதல் வேண்டிக் கிடக்குது. இந்த வயசில யார் உன் கூட நெருங்கிப் பழகினாலும் காதலிக்கத்தான் தோணும். அதனால் காதல் கத்தரிக்காயெல்லாத்தையும் விட்டிட்டு படிக்கிற வேலையைப் பார்''

''இத பாருங்க ராஜ் நான் உங்க மேல வச்சிருக்கிற காதல் வயசுக்கோளாறாலே வந்தது இல்லைன்னு நான் நிரூபிச்சுக் காட்டிறன். ஆனா ஒன்று மட்டும் ஞாபகம் வச்சுக் கொள்ளுங்க. என் வாழ்க்கையில திருமணம் என்ற ஒன்று நடந்தா அது உங்களுடன்தான். இப்ப சொல்றேன் கேட்டுக்கங்க. எப்ப நீங்க என் காதலை புரிஞ்சுக்கிட்டு என்னைப் பார்க்க வர்றீங்களோ அது வரைக்கும் நான் உங்களைப் பார்க்க மாட்டேன். வர்றேன்.''

''ஏய் தணிகா நான் சொல்றதைக் கேள்'' என்று அவன் கத்துவதைக் காதில் வாங்காமல் விறுவிறுவென நடந்தாள்.

அதன் பிறகு தணிகாவால் நிம்மதியாகப் படிக்க முடியவில்லை. பித்துப் பிடித்தவள் மாதிரி ஆனாள்.

இடையிடையே அவன் வீட்டிற்கு வருவதுண்டு. அம்மா, அப்பாவுடன் பேசி விட்டுப் போய்விடுவான். அப்போதெல்லாம் அவள் மனம் ஊமையாக அழுதது.

பரீட்சை நெருங்கியது. ஏனோ தானோ என்று பரீட்சை எழுதினாள். பரீட்சை முடிவுகள் வெளியிடும் நாளும் வந்தது. கலக்கத்துடன் பாடசாலைக்குச் சென்றாள்.

(22 ஆம் பக்கம் பார்க்க...)


## 1 ஆவது பிறந்தநாள் வாழ்த்து



## செல்வி.கனகராசா தர்பா

கனகராசா சந்திரரூபி தம்பதிகளின் செல்லப் புதல்வி தர்பா
தனது முதலாவதுபிறந்தநாளை லண்டனில் உள்ள தமது வீட்டில்
8.07.2004 அன்று கொண்டாடினார். இவரை அப்பா, அம்மா,
அக்காமாரான தேசிகா, திலானி, அப்பன்மாமா ஆகியோரும்
மற்றும் கௌசிகன் அத்தான், சித்தண்ணா இவர்களுடன்
அப்பப்பா, அம்மப்பா, அம்மம்மா, மாமாமார், மாமிமார்,
அண்ணாமார், அக்காமார், சித்தி, சித்தப்பாமார், பெரியம்மா,
பெரியப்பாமார் ஆகியோர் தர்பாவை நீண்ட ஆயுள் பெற்று
சகல பேறுகளும்பெற்று இறை அருளுடன்
நல்வாழ்வு வாழ வாழ்த்துகிறார்கள்.

இல.1 விங்றோவ் றோட்
காந்போட் எஸ்.எ.6.1 கியு -ஏ
லண்டன்
யு.கே.

தகவல்
(அப்பா.கனகராசா)

# தக்காளித் தாக்குதல்கள்



நாட்டுக்கு நாடு பல்வேறு விழாக்கள் வெவ்வேறு காலங்களில் நிகழ்ந்து வருகின்றன. சில விழாக்கள் நாடளாவிய ரீதியில் இடம்பெறுகின்றன. சில விழாக்கள் குறிப்பிட்ட சில பிராந்தியங்களிலேயே இடம்பெற்று வருகின்றன.

ஸ்பெயின் நாட்டில் வித்தியாசமான விசித்திர விழா ஒன்று வருடா வருடம் இடம்பெற்று வருகின்றது. இந்த விழாவில் பத்தாயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டு குதூகலிக்கின்றார்கள்.

அப்படி என்னதான் நடக்கிறது இந்த விழாவில்?

இந்தியாவின் ஹோலிப் பண்டிகையின் போது ஆளுக்கு ஆள் வர்ண நீரை ஊற்றி மகிழ்கின்றார்கள் அல்லவா?

அதே போன்று ஸ்பெயினில் நன்கு பழுத்த தக்காளிகளால் ஆளை ஆள் தாக்கி மகிழும் விழா ஒன்று வருடா வருடம் இடம்பெற்று வருகின்றது. தலைநகரான மட்ரிட்டிலிருந்து 300 கிலோமீற்றர் தூரத்திலுள்ள புனோல் என்னும் கிராமத்திலேயே இந்த விழா இடம்பெற்று பல்லாயிரக்கணக்கானவர்களை ஆனந்த பாவசத்துக்கு உள்ளாக்கி வருகின்றது.

புனோல் ஓர் அமைதியான கிராமம். ஆனால், 120 தொன் எடையுள்ள தக்காளிப் பழங்கள் இங்கு வதியும் கிராமத்தவர்கள் கைகளிலும், இந்த விழாவுக்கென இங்கு வரும் வெளிநாட்டவர்களினது கைகளிலும் தவழும்பொழுது என்ன நடக்கும் என்று கற்பனை செய்து பாருங்களேன்.

ஆளை ஆள் தக்காளிப் பழங்களால் தாக்குவதுதான் இந்த விழாவில் முக்கியமாக இடம்பெறும் நிகழ்வாகும். ஆண்டுக்கு ஒரு தடவை இடம்பெறும் உணவு சம்பந்தப்பட் திருவிழாக்களில் இதுவே உலகின் மிகப் பெரிய உணவுத் திருவிழா என்று பார்வையாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

இந்த விழாவின் போது ஒரு மணி நேரம் தாக்குதல்களில் அகப்பட்டு அலங்கோலமாவதைத் தடுக்க சிலர் வீட்டை மறைத்து பிளாஸ்டிக் போர்வைகளைக் கட்டி விடுவதுண்டு.

இந்தப் பைத்தியக்கார விழாவில் 35,000 பேர் வரை கலந்து கொள்வார்கள். வருடாவருடம் இது ஆகஸ்ட் மாதத்தில்தான் இடம்பெற்று வருகின்றது. பழங்களால் தாக்கப்படும் போது அதன் சாறு கண்களுக்குள் சென்று எரிவை ஏற்படுத்தலாம் என்பதால், கண்களுக்குப் பாதுகாப்புக் கண்ணாடி அணிந்து கொண்டு உற்சாகமாக விழாக்களில் கலந்து கொள்கிறார்கள்.

இந்தத் தக்காளித் தாக்குதலில் கலந்து கொண்ட வெளிநாட்டவர் ஒருவரிடம் அவரது அனுபவம் பற்றிக் கேட்ட போது, "விழா நன்றாக இருந்தாலும், சிறிது வலிக்கத்தான் செய்கின்றது." என்று தன் கண்களில் இருந்து வழியும் சாறைத் துடைத்துக் கொண்டு பதிலளித்தார்.

விழா எப்படி ஆரம்பித்தது?

இதற்கு வித்தியாசமான பதில்கள் வருகின்றன. பிரான்ஸிஸ்கோ என்பவர் தெரிவிக்கும் போது, வருடாவருடம் பலூன்கள் பறக்க விடும் விழா இடம்பெறுவதாகவும், 1946இல் ஒரு பலூனை தக்காளியால் எறிந்து விழுத்த, பின்பு அது தக்காளி எறியும் விளையாட்டாக மாறிற்று என்றும் கூறினார்.

இன்னொருவர் விளக்கம் தருகையில், ஒரு தடவை இரவு விருந்துபசாரத்தின் போது இரண்டு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட தகராறு தக்காளி எறிந்து தாக்குமளவுக்கு மோசமாகியது. இந்த விழாவுக்கு இதுவே காரணமாக இருக்கலாம் என்றார்.

எது காரணமாக இருந்தாலும் 1940 களில் இந்த விழா ஆரம்பித்து இன்று வரை தொடர்கின்றது. 1979 முதல் ஸ்பெயினில் அரசே இந்த விழாவை நடத்திவருகிறது. அரசு ஒரு தொகைப் பழத்தைக் கொள்வனவு செய்து வழங்க, விவசாயிகளும் இந்த விழாவுக்காக பழங்களை இலவசமாக வழங்குவதுண்டு.

அடுத்தநாள் கிராமத்தைச் சுத்திகரிக்க, மூன்று மணி நேரம் தொழிலாளிகளுக்குத் தேவைப்படுவதுண்டு.

2001 இல் 30,000 பேர் பங்குபற்றிய இந்த விழாவில் 2002 இல் 8,000 பேர் மேலதிகமாகப் பங்குபற்றியது ஒரு சாதனை என்கிறார்கள். இவர்களில் அனேகமானவர்கள் உல்லாசப் பயணிகளே. கடந்த ஆண்டின் தொகை 35, 000. விசித்திரமான உலகில் விசித்தரமான நிகழ்வுகள்.

—கே.ஆர்.எஸ்—




# குடல் வளரி நோய்க்கு உடனடி சத்திரசிகிச்சை அவசியமா?

**கேள்வி: எனது பேரப்பிள்ளை பெண். வயது 5. எந்நேரமும் மூக்கில் சளி கொட்டுகின்றது. ஆனால், இருமலோ காய்ச்சலோ இல்லை. டாக்டரிடம் காட்டியபோது மூக்கில் விட சொட்டு மருந்து தந்தார். சளி ஓரளவு குறைந்தது. ஆனால், முற்றாக சுகமாகவில்லை. அதனால் பின்னர் ஏதாவது பிரச்சினை உண்டாகுமா?**

பதில்: சிறுகுழந்தைகளுக்கு மூக்கால் தொடர்ந்து சளி வடியும்போது மூக்கினுள் ரப்பர்துண்டு, சாக்பீஸ், விதைகள் ஏதனையாவது குழந்தைபோட்டிருக்கின்றதா என்பதை ஒரு மூக்கு தொண்டை காது வைத்திய நிபுணரிடம் காட்டித் தெரிந்து கொள்ள வேண்டும். சிறு பிள்ளைகள் கையில் எடுத்த சிறுபொருட்களை மூக்குள் திணித்துக் கொள்வது வழக்கம். அப்படி ஏதாவது பிறபொருள் எதுவும் இல்லை என்பது தெரிந்துகொண்டால், அந்த நிபுணர் மூக்கால் வடிவதற்குரிய காரணத்தை தேடுவார்.

அநேகமாக சிறு குழந்தைகளுக்கு, அவற்றிற்கு பாதுகாப்பாக இறைவனால் படைக்கப்பட்ட ரொன்ஸில்ஸ் (TONSILS) என்ற திறந்த வாயின் இருபக்கதிலும் உள்ள GLANDS, மற்றும் தொண்டையின் பின்புறத்திலுள்ள ADENOIDS என்ற GLANDS சற்று வளர்ந்து காணப்படும். இவைகளை குழந்தைகளின் CHECK POSTS என்று சொல்லலாம்.

இவைகளின் வளர்ச்சி – சாதாரணமாக மூக்கிலிருந்து வெளிப்படும் திரவத்தின் அளவை அதிகரிக்க செய்வதால் – குழந்தைகளுக்கு மூக்கால் வழிந்து கொண்டிருப்பது சாதாரணமே. இதுதவிர – கன்னங்களின் எலும்புகளுள்ளே காற்று நிறைந்த அறைகள் உண்டு. இவைகளை SINUS என்று சொல்வார்கள். இவைகளில் அழற்சி ஏற்படும்போது மூக்கால் சளிவடியும். இதனை SINUSITIS அல்லது பீனிசம் என்று சொல்வார்கள். எனவே தகுந்த நிபுணரிடம் காட்டி காரணத்தை அறிந்து கொண்டால் சிகிச்சை மூலம் குணமாக்கிக் கொள்ளலாம்.

**கேள்வி: வயது இருபத்தெட்டு. 25 ஆவது வயதில் திருமணமாகியது. அந்த வேளை எனது மாமியார் சுகவீனமுற்று படுத்த படுக்கையாக இருந்தார். அதனால் எனது கணவர் கர்ப்பம் அடைவதை தள்ளிப் போட்டு மாமியார் சுகமானதும் பிள்ளை பெற்றுக்கொள்ளலாம் என்று விரும்பினார். மாமியாருக்கு உதவியாயிருப்பது, வேலைப் பளு என்பவற்றால் நானும் ஒத்துக்கொண்டு ஒரு மருத்துவரின் ஆலோசனையுடன் தொடர்ந்து இரண்டு வருடங்கள் கருத்தடை மாத்திரைகளை உபயோகித்து வந்தேன். கடந்த வருடம் மாமியார் இறந்துவிட்டார். இப்பொழுது கருத்தடை முறையை கைவிட்டு ஒருவருடமாக**



**குழந்தைபெற முயற்சிக்கிறோம். ஆனால், பலன் எதுவும் கிட்டவில்லை. கருத்தடை மாத்திரையை, குழந்தை பெறாமல் உபயோகித்ததால் நான் மலடாகிவிட்டேன் என்று உறவினர் ஏசுகின்றார்கள். எனக்கு வேதனையாக இருக்கின்றது. ஆலோசனை கூறவும்.**

பதில்: கருத்தடை மாத்திரைகளால் நிரந்தரமாக ஒரு பெண் மலடாக முடியாது. 'நிரந்தரமாக' என்ற வார்த்தையை கவனித்துக் கொள்ளுங்கள். தொடர்ந்து கர்ப்பத்தடை மாத்திரைகளை உபயோகிக்கும்போது கர்ப்பம் நடைபெறுவதற்குரிய ஹார்மோன்கள் தற்காலிகமாக திரும்பவும் சொல்கின்றேன் – தற்காலிகமாக சுரப்பு தடைபெறுகிறது. இந்த நிலை, கர்ப்பத்தடை மாத்திரைகளின் தாக்கம் உடலிருந்து முற்றாக வெளியேறும் வரை இருக்கலாம். இதற்கு காலஎல்லை ஆறுமாதம் தொடக்கம் ஒருவருடம் வரை செல்லலாம். எனவே நீங்கள் எதற்கும் பயப்படவேண்டியதில்லை. ஒரு பிரவச வைத்திய நிபுணரை சந்தியுங்கள்.

சிலவேளை அவர D & C என்ற முறையில் – கருப்பையின் சுவர்களில் கருத்தடை மாத்திரை உபயோகத்தால் வளர்ந்துள்ள மாற்றங்களை கழுவி எடுப்பார். அதன் பின்னர் உழுதுவிட்ட தரையில் செழிப்பாக வளரும் பயிர்போல் உங்கள் கருப்பையில் நிச்சயம் கருக்கட்டல் நடைபெறும்.

புதிதாக திருமணமாகிய பெண்களுக்கு குடும்பத்திட்ட முறைகளில் பாதுகாப்பானதும் பயமில்லாததும் கருத்தடை மாத்திரைகளை உபயோகிப்பதே. எனவே தைரியமாக இருங்கள். நீங்கள் மாமியாருக்கு செய்த சேவைக்காக, தியாகங்களுக்காக அவரே உங்களுக்கு குழந்தையாக வந்து பிறக்கக் கூடும்.

**கேள்வி: பெண் வயது 20. அடிக்கடி வயிற்றுவலி, வாந்தி, காய்ச்சல் ஏற்படுகின்றன. வைத்திய நிபுணரிடம் காட்டியதில் இரத்திப்பரிசோதனை, சிறுநீர்ப்பரிசோதனை, எக்ஸ்ரே, ஸ்கேன் என்ற பரிசோதனைகளை செய்து நன்றாக சோதித்துப் பார்த்து –இது APPENDICITIS விரைவில் சத்திரசிகிச்சை செய்தால் நல்லது என்றார். APPENDICITIS என்றால் உடனே அறுவைச்சிகிச்சை செய்வார்கள் என்று கேள்விப்பட்டுள்ளேன். அப்படி இல்லாமல் எனக்கு காலம் தாழ்த்தாமல் வந்து செய்யச் சொல்வதின் தாற்பரியம் என்ன? இது உண்மையில் APPENDICITIS என்பதில் எனக்கு சந்தேகமாக இருக்கின்றது.**

பதில்: ஒரு நாளும் டாக்டர்களை சந்தேகப்படாதீர்கள். உங்களுக்கு சகல பரிசோதனைகளையும் செய்த பின்னர் தான் உங்கள் டாக்டர் APPENDICITIS என்ற முடிவுக்கு வந்தார். APPENDIX என்பது பெருங்குடலும் – சிறுகுடலும் சந்திக்கும் இடத்தில் உள்ள ஓர் உறுப்பு. குடல்வளரி என்பார்கள். இது எதற்காக படைக்கப்பட்டது என்பது ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம். ஏனென்றால் இந்த உறுப்பினால் மனிதனுக்கு எதுவித பிரயோசனமும் இல்லை. ஆனால் உபத்திரவம் உண்டு. ஒரு காலத்தில் இந்த குடல் வளரியினுள் நாம் சாப்பிடும் உணவிலுள்ள நெல், உமி, கல் என்பன புகுந்துதான் அது வீங்கி APPENDICITIS ஆகிறது என்று நம்பினார்கள். ஆனால் அதிகமான APPENDICITIS இந்த குடல் வளரி ஏதோ தொற்றுகளினால் பாதிக்கப்பட்டு வீக்கமடைகின்றது என்று கருதுகின்றார்கள்.

காரணம் எதுவாக இருந்தாலும் குடல் வளரி – வீக்கமடைந்து – வயிற்றறையினுள் உடைந்தால் – உயிராபத்தை தரக்கூடிய தொற்றான PERITONITIS என்ற வயிற்று நோய் உண்டாகும். எனவே தான் உடையும் தறுவாயில் உள்ள குடல் வளரியாக காணப்பட்டால் உடனடி அவசர சிகிச்சையாக குடல் வளரி அறுவைச்சிகிச்சை (APPENDICITIS-

> இலவச மருத்துவ ஆலோசனைகளை
> 'சுடர் ஒளி மூலம் வழங்குகிறார்
> டாக்டர் எஸ். அருள்ராமலிங்கம்
> நீங்கள் கேள்விகளை
> அனுப்பவேண்டிய முகவரி
> இலவச மருத்துவ ஆலோசனை
> 'சுடர் ஒளி'
> 85, ஜயந்தமல்லிமாராய்ச்சி மாவத்தை
> கொழும்பு – 14

CTOMY) நடைபெறும். உங்களுக்குள்ள குடல் வளரி அடிக்கடி தொற்று ஏற்பட்டு வீங்குவதும், பின்னர் மருந்துக்கு வீக்கம் குறைவதுமாக இருப்பதால் உடனடியாக உடையும் சந்தர்ப்பம் இல்லை. இதனை SUB ACUTE APPENDICITIS என்பார்கள். என்றாலும் இப்படி அடிக்கடி நடைபெறும் போது என்றாவது ஒரு நாள் அது உடையக்கூடும். அதனால்தான் சீக்கிரம் சத்திரசிகிச்சை செய்ய உங்கள் வைத்தியர் ஆலோசனை வழங்கினார். இப்பொழுது உங்கள் குழப்பம் தீர்ந்திருக்குமல்லவா?

* * *

# வேண்டாத வெட்டுக்கிளிகள்

அளவில் சிறியதுதானே என்று நாம் பல தடவைகளில் பலவற்றை அலட்சியம் செய்வதுண்டு. ஆனால் அதே சிறிசுகள் ஒன்று கூடும் போது பலம் மிக்கவையாகி விடுகின்றன. தனியனாக எதிர்கொள்ளாமல் ஒரு படையாக வந்து மோதும் போது தாக்கங்கள் பெரிய அளவில் ஏற்பட்டு விடுகின்றன.

வெட்டுக்கிளி என்பது ஒரு சிறிய உயிரினம்தான். ஆனால், இந்தச் சிறிய உயிரினம் படைஎடுத்து வரும் போது, பெரு நாசத்தை விளைவித்து விடுகின்றது.

தெற்கு அவுஸ்திரேலியாவின் விவசாயிகள் இவற்றின் படையெடுப்பால் ஆட்டம் கண்டு போயிருக்கிறார்கள். அதுவும் இங்குள்ள விவசாயிகள் ஒரு மோசமான காலகட்டத்தில் இருக்கும் போது, இந்த வெட்டுக்கிளிகளின் தொல்லையும் வந்து சேர்ந்திருக்கின்றது.

கடந்த 100 வருடங்களில் என்றும் இல்லாதவாறு இங்கு ஏற்பட்டுள்ள வரட்சியும், காட்டுத்தீயும் பெரும் தாக்கத்தை விவசாயிகளுக்கு அண்மைக்காலத்தில் ஏற்படுத்தி இருந்தன.

இப்படியொரு நிலையில்தான் இந்த வெட்டுக்கிளிகளின் உபத்திரவமும் வந்து சேர்ந்திருக்கின்றது.

வரட்சியைத் தொடர்ந்து இங்கு பெய்த சிறு மழை, விவசாயிகளுக்கு மகிழ்ச்சிக்குப் பதிலாகக் கலக்கத்தையே தந்திருக்கின்றது. இந்தச் சிறு மழை, பயிர்களிடையே புல் வளர உதவ, இந்தப் புல்லை உண்ண, வெட்டுக்கிளிகளையும் வரவழைத்து இருக்கின்றது. நிலம் ஈரலிப்பாக இருப்பது, இந்த வெட்டுக்கிளிகளுக்கு முட்டையிட்டு, பல்கிப் பெருகவும் வசதியாகி விட்டிருக்கின்றது.

தினமும் காலையில் இந்த வெட்டுக்கிளிகள் கூட்டமாக மணிக்கு 30 தொடக்கம் 50 கிலோமீட்டர் வேகத்தில் பறக்கவர ஆரம்பித்து விடுகின்றன. பின்பு இவை பரவி, பயிர் பச்சைகள் மீது உட்கார்ந்து கொள்கின்றன. மாலை 4 மணியளவில் இப் பிரதேசத்தின் முழு வயல்களையும் ஆக்கிரமித்து கொள்ளும் இந்த வெட்டுக்கிளிகள், பயிரை கபளீகரம் செய்து விடுகின்றன. காலையில் வயல்களைப் பார்த்தால் பயிர்கள் அடியோடு அழிக்கப்பட்டு இருப்பதைக் காணலாம்.

வெட்டுக்கிளிகளின் படையெடுப்பும், அழிவும் புதிய கதையல்ல. வேதாகமத்தின் பழைய ஏற்பாட்டில இதே அழிவு முன்பும ஏற்பட்டிருப்பது சொல்லப்படுகின்றது. எகிப்தைத் தண்டிக்க கடவுள் வெட்டுக்கிளிகளைப் படைபடையாக அனுப்பி இருக்கின்றார். காலையான போது கிழக்கிலிருந்து வீசிய காற்று, தொகை தொகையாக வெட்டுக்கிளிகளைக் கொண்டு வந்து சேர்த்தது. எகிப்தை நிறைத்த இந்த வெட்டுக்கிளிகள் பூமியை இருட்டாக்கின என்று வேதாகமத்தில் சொல்லப்படுகின்றது.

வெட்டுக்கிளிகளின் படையெடுப்பை அடுத்து அவுஸ்திரேலிய அரசு தற்போது உஷாராகி இருக்கின்றது.

வானிலிருந்து மருந்துகள் வானூர்தி முட்டை பொரித்து வெளியே வரும் சிறிய குஞ்சு வெட்டுக்கிளிகளை அழிப்பதே இவர்களது நோக்கமாக இருக்கின்றது. இந்த வழியில் வெட்டுக்கிளிகள் சற்றே அழிக்கப்பட்டு விட்டாலும், வசந்த காலத்தில் பச்சை பசேலென்று வளரும் பயிர்கள், மேலும்



பல்லாயிரக்கணக்கான வெட்டுக்கிளிகளை வரவழைக்கப் போகின்றன என்ற கலக்கம் விவசாயிகளைப் பீடித்து இருக்கின்றது.

படையாக வரும் ஒரு கூட்டத்தில் எத்தனை வெட்டுக்கிளிகள் இருக்கும்? ஒரு கூட்டத்தில் 4 ஆயிரம் கோடி வரையிலான வெட்டுக்கிளிகள் இருக்கலாம் என்கிறார்கள். இப்படியொரு இராட்சத தொகை படையெடுத்தால் பெரும் நாசம் ஏற்படும் என்பது திண்ணந்தான். கறுத்த மேகக் கூட்டங்கள் பவனி வருவது போல, 50 கிலோ மீற்றர் தொலைவுக்கு இந்த வெட்டுக்கிளிகள் பறந்து வருவதைப் பார்க்க முடியும் என்கிறார்கள். இவை 500 தொடக்கம் 600 அடி உயரம் வரையில் பறக்கின்றன.

இப்படித்தான் ஆபிரிக்க நாடான சோமாலியாவில் முன்பு ஒரு சமயம் வெட்டுக்கிளிகள் பெரிய அட்டகாசம் செய்திருந்தன. ஒரு முழு வருடத்தில் 400, 000 மக்களுக்கு கொடுக்கக் கூடிய உணவை இவை தின்று அழித்திருந்தன. 1000 சதுர கி.மீற்றர் பரப்பளவு பிரதேசத்தை இவை தம் படையெடுப்பின் போது ஆக்கிரமித்து இருந்தன.

ஒரு பெண் வெட்டுக்கிளி 60 தொடக்கம் 100 வரையிலான முட்டைகளை ஒரே தடவையில் இடும் என்பதால், இவை பல்கிப் பெருகும் வேகம் புரியும்.

ஆனால், இன்னொரு சுவையான தகவலையும் அறிந்தாக வேண்டும். வெட்டுக்கிளியின் ஆயுள் வெறும் 30 நாட்கள் தான். படையாக வந்து சேரும் இந்த வெட்டுக்கிளிகளில் 90 சதவீதமானவை விரைவில் இறந்து போய்விடுகின்றன. ஆனால் அதற்குள் தமது இனவிருத்தி நடவடிக்கையை மேற்கொண்டு விடுகின்றன.

இறைவன் படைப்பில்தான் எத்தனை அதிசயங்கள்?

# இலங்கை முஸ்லிம்களும் அவர்களது வர்த்தக தொடர்பும்

சங்க இலக்கியங்களில் குறிப்பிடப்படுகின்ற யவனர் என்பவர் கிரேக்கம், அரேபியா, எகிப்து முதலிய நாடுகளைச் சேர்ந்த மக்களே ஆவர். இவர்களுள் சங்க காலத்திலும், அதன் பின்னரும் வாழ்ந்தவர்களே சோனகர் என்று அழைக்கப்பட்டனர். பழந்தமிழர் கூறிய பதினெண் தேயங்களுள் ஒன்றாம் சோனகம் என்பது பரத கண்டத்திற்கு மேற்குப் புறத்தில் உள்ளது என்பதால் அது அரேபியா என்று கருதப்படுகிறது என ''பண்டைக் கைத்தொழில் வியாபாரங்கள்'' எனும் நூலில் மு.இராகவையங்கார் கூறுகிறார்.

யவனர் எனும் பதமே திரிந்து சோனகர் என வழங்கலாயிற்று என்பதை பத்துபாட்டில் வரும் யவனர் எனும் பதத்திற்கு நச்சினார்க்கினியர் சோனகர் எனக் கூறி உரை வகுத்தமை மூலம் உணரக்கூடியதாக உள்ளது. இந்த யவனரை அடியார்க்கு நல்லார் துருக்கர் என்பார் (சிலப்பதிகாரம்) இவர்கள் துருக்கியிலிருந்து குடிபெயர்ந்தோராவர். இவர்களின் குடியேற்றங்கள் காலத்தால் பிற்பட்டவை.

பதினைந்தாம் நூற்றாண்டு அளவில் போர்த்துக்கேயர் கீழைத்தேசக் கடல்களில் நடமாடத் தொடங்கியபோது இலங்கையினதும், இந்தியாவினதும் மேற்குக் கரைகளில் வாணிபம் செய்த முகமதியர்கள் மதத்தாலும் மற்ற இயல்புகளாலும் ஸ்பெயினில் வாழ்ந்த அராபியர்களை ஒத்து இருந்தமையினால் 'மூர்ஸ்' என அழைக்கப்பட்டனர். இவை தவிர இன்று முஸ்லிம் மக்களை 'மரக்காயர்' என்று அழைக்கப்படும் மரபும் உண்டு. மலபாரிகள் சோனகரை 'மார்க்கர்' கப்பலோட்டிகள், கப்பல் சொந்தக் காரர்கள் என்னும் பொருளில் அழைக்கலாயினர். மார்க்கர் என்பது கப்பல் எனும் பொருளுடைய அரபுச்சொல்லில் இருந்து வந்ததென்பர். அதனாலேயே சிங்களத்திலும் மரக்கல மினிசு (மரக்கலம் இயக்கி வந்தோர்) என்று பெயர் ஏற்படலாயிற்று எனலாம். தமிழிலும் மரக்காயர், மரிக்கார் என்ற பதங்கள் உருவாகின.

பழந்தமிழ் இலக்கியமான பதிற்றுப்பத்து ஏழாம், எட்டாம் பத்துகளில் இடம்பெறுகின்ற ''பந்தர்'' எனும் சேரநாட்டூர், முத்துகளுக்கு பெயர் பெற்றிருந்தது. சேரநாட்டின் தலைநகராகிய வாஞ்சி, அதன் துறையாகிய முசிறி என்பவற்றை அடுத்து இருந்தவையே பந்தர்கொடுமணம் எனும் ஊர்கள். அரேபியர் இந்தப்பகுதிகளில் வாணிபத் தொடர்புகள் வைத்திருந்த காலத்திலே பந்தர் எனும் ஊர் உருவாக்கப்பட்டிருக்கலாம். பந்தர் எனும் சொல் அங்காடி, அல்லடி, கடைத்தெரு என்னும் அரபுச் சொல் ஆகும்.

கேரள நாட்டில் பேணப்படுகின்ற மரபுகளின்படி முகமதியர்கள் கேரளப் பெண்களை மணந்ததனால் அவர்களை ''மாப்பிள்ளைகள்'' என அழைக்கலாயினர். இந்த மரபுடன் தொடர்பான வரலாறு ஒன்று உண்டு. கி.பி.844 இல் அரேபியக்கப்பலொன்று சாலியத்தீவில் உடைந்தபோது கப்பலில் இருந்தோர் அப்பிரதேசத்து மக்களால் காப்பாற்றப்பட்டனர். அப்பிரதேச இந்து மன்னன் 13 அரேபியர்களையும் தனது நாட்டில் குடியேற்றினான். இந்நிகழ்ச்சிக்கு பின்னர் வந்த முஸ்லிம் தூதுக்குழுவினர் கேரளாவில் பலகுலங்களில் இருந்து மக்களை இஸ்லாம் மதத்திற்கு மாற்றினர்.

இலங்கையில் அரேபியரின் செல்வாக்கை ஆராய்வோமாயின், சின்பாத் மாலுமி (கி.பி.9) தன் கப்பல் பயணத்தின்போது தனது கப்பல் செரண்டீப் (சேரன்தீவு) வடகரையிலுள்ள மலை ஒன்றின் மீது மோதியதனால் தான் அக்கரையில் இறங்க நேரிட்டதாகவும் அப்போது தன்னை உபசரித்தவர்கள் மலபார் மக்களே என்றும், இவர்களில் ஒருவர் அரபு மொழியில் தேர்ச்சி பெற்றிருந்தார் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

மட்டக்களப்பு வாழ் முஸ்லிம் மக்களின் வரலாற்றினை ஆராயுமிடத்து வட இலங்கையிலிருந்து மலபார் குடிகள் மட்டக்களப்பிற்கு வந்ததை அடுத்தே முஸ்லிம்கள் வந்து குடியேறினர் என ''இலங்கையில் வரலாற்று அரசியல் கணிப்பீடு'' எனும் நூலில் பிரிதம் அவர்கள் குறிப்பிட்டுள்ளார். இதனையே சிற்றம்பலம் அவர்களும் யாழ்ப்பாணத்திலிருந்து முக்குவர்களின் ஏழு குடிகளும் கி.பி.5 ஆம் நூற்றாண்டளவில் குடிபெயர்ந்ததை தொடர்ந்தே முஸ்லிம்களும் குடிபெயர்ந்தனர் என்பார்.

இவ்வாறு குடி பெயர்வுக்கு முன்னர் திமிலர் திமிலத்தீவிலும், வேடுவர் புளியத்தீவிலும் வாழ்ந்து வந்தனர் என்றும், இவர்களுள் திமிலைத் தலைவனின் ஆட்சியை ஒடுக்குவதில் முக்குவருக்கு முஸ்லிம்கள் உதவி, வெற்றியீட்டியதனால் முக்குவர் முஸ்லிம்களுக்கு தம் ஏழு குடிகளில் இருந்தும் பெண் கொடுத்தனர் என்றும் அறிய முடிகின்றது.

இவ்வாறு முஸ்லிம்கள் முக்குவர்களுடன் கொண்ட உறவினால் சாதி வழமைகள் ஏற்பட்டன என மட்டக்களப்பு மாணியம் கூறுகின்றது.

நாடுகாட்டு பரவணிக் கல்வெட்டின் தகவலில் இருந்து மட்டக்களப்பில் குடியேறிய பொன்னாச்சிக்குடி, வரிசை நாச்சிக்குடி, பணிய வீட்டுக் குடி, முகாந்திரநாச்சிக்குடி, பூமாலை கட்டிக்குடி, கிணிக்கருதன்குடி, மீராலெப்பைக் குடி முதலான ஏழு முஸ்லிம் குடிகள் பற்றி குறிப்பிடுகின்றது. இன்று இலங்கையின் மட்டக்களப்பு தமிழகமே முஸ்லிம்கள் பெரும் தொகையினர் வாழும் பிரதேசமாக உள்ளது.

முஸ்லிம்களின் வரலாற்றில், கி.பி. 1526 இல் போர்த்துக்கேயர் கோட்டைமன்னன் ஏழாவது புவனேபாகுவை முஸ்லிம் குடிகளை வெளியேற்றும்படி கோரியிருந்தான். அப்போது சீதாவாக்கையை ஆண்ட இவனது சகோதரன் மயாதுன்னை முஸ்லிம்களை ஆதரித்து தன் இராச்சியத்தில் குடியமர்த்தினான்.

போர்த்துக்கேயர் திரும்பவும் கி.பி.1626 இல் முகமதியரை கோட்டை இராச்சியத்திலிருந்தில் வெளியேறும்படி உத்தரவிட்ட போது கண்டியை ஆண்ட செனரதன் முகமதியக் குடிகள் 4000 இற்கு மேற்பட்டோரை மட்டக்களப்பில் குடியமர்த்தி பாதுகாப்பு கொடுத்தார் என கலாநிதி கே.டபிள்யு. குணவர்த்தனா ''போர்த்துக்கேயர் காலத்து சோனகர்'' எனும் கட்டுரையில் எழுதியுள்ளார்.

இன்று இலங்கை வாழ் முஸ்லிம்கள் எப்பாகத்தில் வாழ்ந்தாலும் (காலிமுனைக்கும் அளுத்கமைக்குமிடையிலும் கூட) தமிழ் மொழியை தாய் மொழியாக கொண்டிருப்பதை அவதானிக்கலாம். மட்டக்களப்பில் தமிழ் மொழியை தமது தாய் மொழியாக ஏற்று வாழ்வதோடு தமிழ் கலாசாரக் கூறுகளை தமதாக்கி கொண்டு வாழ்கிறார்கள் என்பது மிகையாகும்.

பேராசிரியர்
பொன்.சக்திவேல்

## இவ்வார 'ராசிபலன்' 26-07-2004 , 01 -08-2004

பொ. சந்திரன்

# ராசிபலன்

### இவ் வார கிரகநிலை

| | | | |
|---|---|---|---|
| | ராகு | சுக் | சனி |
| | செவ்வாய் ஆயிலியம் புதன்<br>சுக்கிரன் மிருகசீரிடம் செவ்<br>புதன் ஆயிலியம் புதன் | | புதன் செவ் சூரி |
| | சூரியன் பூசம் சனி<br>குரு உத்தரம் சூரியன்<br>சனி புனர்பூசம் குரு | | குரு |
| | | கேது | |

புதன் கடகம் முதல் சிங்கம் வரை

சந்திரன் கடகம் முதல் துலாம் வரை

**மேடம் : அச்சுவினி, பரணி, கார்த்திகை 1.**

ராசிநாதன் செவ்வாய் நாலில் நீசம். மேலும், சூரியனுடன் சேர்க்கை நல்ல அம்சம் என்று சொல்வதற்கு இல்லை. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். இருப்பினும் புதனின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும், குரு ஐந்தில் இருப்பதும் ஒரு ஆறுதல் உண்டு. (2,7) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். திருமண வாய்ப்பு உண்டு. 7 இல் கேது இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. 4 ஆம் வீடு பலவீனமாக இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். 10க்குரிய சனி மூன்றில் இருப்பதால் தொழில்துறை முன்னேறும். ராசியில் ராகு இருப்பது மன அமைதி இருக்காது. இருந்தாலும் குரு ராசியைப் பார்ப்பதால் எந்த விதமான பிரச்சினை வந்தாலும் எதிர் கொண்டு சமாளிக்கலாம்.

**இடபம் : கார்த்திகை 2,3,4. ரோகிணி, மிருகசீரிடம் 1,2**

ராசிநாதன் சுக்கிரன் ராசியில் ஆட்சியாக இருப்பதால் எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. மேலும் நட்புக் கிரகமான செவ்வாயின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் நன்று. ஆனால், ராசிக்கு இரு புறமும் தீய கிரகங்கள் இருப்பது மன அமைதியைப் பாதிக்கலாம். (2,5) உரிய புதன் 4 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். குழந்தைகள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். 4 க்குரிய சூரியன் 3 இல் இருப்பதால் வீடு, வாகனம் லாபம் தரும். (7,12) உரிய செவ்வாய் 3 இல் இருப்பது நல்லது. ஆனால், சூரியனின் சேர்க்கை திருமண முயற்சியைப் பாதிக்கலாம். 7 ஆம் வீடு சுத்தமாக இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்கும். 10க்குரிய சனி 2 இல் இருப்பதால் அதாவது இரண்டு சனி நல்லதல்ல யோக காரணாக சனி இருப்பதால் தொழில் முன்னேறும்.

**மிதுனம்: மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3.**

(1,4) உரிய புதன் மூன்றில் இருப்பது நல்லதல்ல. எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். வீடு, வாகனங்களால் லாபம் இருக்காது. இருப்பினும் ஆரம்பத்தில் கேதுவின் நட்சத்திரத்தில் இருந்தாலும் பின் தன் சொந்த நட்சத்திரத்திற்கு வருகிறபடியால் ஆறுதல் உண்டு. இரண்டாம் வீட்டில் செவ்வாய், சூரியன் இணைவதால் கையில் காசு இருக்காது. (7,10) உரிய குரு மூன்றில் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. தொழில்துறையில் முன்னேற்றம் இருக்காது. மேலும் புதனை, குருவை சனி பார்ப்பதும் 7 ஆம், 10 ஆம் வீடுகளை சனி பார்ப்பதும் நன்மை இல்லை. இறைவனை பிரார்த்திப்பதால் ஓர் அளவு தீயபலன்களைக் குறைக்க முடியும். மேலும் ராசியில் சனி இருப்பதும் குறை.

**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்.**

சந்திரன் அதாவது ராசி நாதன் விருட்சிகம் முதல் மகரம் வரை அதாவது ஐந்து முதல் ஏழு வரை ஐந்தில் நீசம் 6 இல் பகை ஆகவே எடுத்த முயற்சி தாமதமாகலாம். உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். ராசியில் சூரியன், செவ்வாய் இருப்பது குற்றம் மன அமைதி இருக்காது. கூட்டு யோகம் ஏற்பட இடமுண்டு. இரண்டில் புதன், குரு இருப்பதால் கையில் பணம் இருக்கும். (4,11) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் வீடு, வாகனம் லாபம் உண்டு. (7,8) உரிய சனி 12இல் இருப்பதால் திருமண வாய்ப்பு பாதிக்கலாம். இருப்பினும் குடும்பத்தானமான இரண்டில் குரு இருப்பதால் நல்ல பலனைக் கொடுக்கலாம். 10இக் குரிய செவ்வாய் நீசமாகி சூரியனுடன் இணைவதால் தொழில்துறையை பாதிக்கலாம். இரண்டில் குரு இருப்பது ஓர் அளவு ஆறுதல் உண்டு.

**சிங்கம்: மகம், பூரம், உத்தரம்1.**

ராசிக்குரிய சூரியன் 12இல் மறைவதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தமதமாகலாம் அல்லது தடைப்படலாம். மேலும் சனியின் சாரத்தில் இருப்பதும் கூடாது. ராசியில் குரு இருப்பதும் நல்லதல்ல. மன அமைதி இருக்காது. (2,11) உரிய புதன் ராசியில் இருப்பதால் கையில் பணம் இருக்காது. (4,9) உரிய செவ்வாய் 12 இல் இருப்பதால் பெற்றோருக்கு கூடாது. வீடு, வாகனங்களால் லாபம் இருக்காது. மேலும் செலவை ஏற்படுத்தக்கூடும். (6,7) உரிய சனி 11இல் இருப்பதால் திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். பகைவர் நண்பராகுவர். 10க்குரிய சுக்கிரன் 10 இல் ஆட்சியாக இருப்பதால் தொழில்துறை முன்னேறும். 10 இல் சுக்கிரன் நன்மை செய்வர் என்பதில் கருத்து வேறுமை உண்டு. ராசியை சனி பார்ப்பதால் முன்னேற்றத்துக்கு தடையுண்டு.

**கன்னி: உத்தரம்2,3,4. அத்தம், சித்திரை 1,2.**

(1,10) உரிய புதன் 12 இல் இருப்பதால் உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தடைப்படலாம். ஆரம்பத்தில் கேதுவின் சாரத்தில் இருந்து பின் தன் சொந்த நட்சத்திர சாரத்திற்கு வருவது ஓர் அளவு ஆறுதல் உண்டு. (2,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் கையில் பணம் இருக்கும். பிதாவுக்கு நல்லது. ஆலய வழிபாடு அமையும். (4,7) உரிய குரு 12 இல் மறைவதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். திருமணவாய்ப்பு பாதிக்கலாம். குடும்பத்தில் அமைதி இருக்காது. 10க்குரிய புதன் 12 இல் இருப்பதால் தொழில்துறையில் லாபம் இருக்காது. 10 இல் சனி இருப்பதும் தொல்லை. இறைவனைப் பிரார்த்திப்பதால் தீய பலன்களில் இருந்து விடுபடலாம், மன ஆறுதல் பெறலாம்.

**துலாம்: சித்திரை3,4 சுவாதி, விசாகம்1,2,3.**

ராசிக்குரிய சுக்கிரன் தனது இன்னுமொரு வீட்டில் ஆட்சியாக இருப்பது நலம். உடல் ஆரோக்கியம் உண்டு. எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். ராசியில் கேது இருப்பது ஒரு குறை மன அமைதி இருக்காது. இருப்பினும் செவ்வாயின் சாரத்தில் இருப்பது நல்லது. (2,5) உரிய புதன் 4 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இரண்டில் சனி இருப்பதும் ஒரு காரணம். (2,7) உரிய செவ்வாய் 10 இல் இருப்பது நல்லது ஆனால் செவ்வாய் நீசம் சூரியன் சேர்க்கை ஆகவே திருமணவாய்ப்பு பாதிக்கலாம். 7 ஆம் வீட்டில ராகு இருப்பதால் குடும்பத்தில் அமைதி இருக்காது. (4,5) உரிய சனி 9 இல் இருப்பதால் (9 ஆம் இடம் நல்ல இடம் சனிக்கு உகந்ததல்ல) வீடு, வாகனம் செலவை உண்டாக்கலாம். 10 இல் வீட்டில் செவ்வாய், சூரியன் சேர்க்கை நல்லதல்ல. ஆனால் சூரியன் 10 இல் நல்ல பலனைத் தரும் தொழில் எதிர்பார்த்த லாபம் இருக்காது.

**விருச்சிகம்: விசாகம் 4, அனுசம், கேட்டை**

ராசிக்குரிய செவ்வாய் 9 இல் நீசம் சூரியனின் சேர்க்கை ஆகவே உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம். இருப்பினும் புதனின் நட்சத்திர சாரத்தில் இருப்பதால் ஓர் அளவு ஆறுதல் உண்டு. (2,5) உரிய குரு 10இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. இரண்டாம் வீட்டை சனி பார்ப்பதும் ஒரு காரணம். (3,4) உரிய சனி 8இல் இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். இளைய சகோதரத்துக்கும் கூடாது. (7,12) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் திருமண வாய்ப்புண்டு. 10இல் புதன் குரு சேர்க்கையால் தொழில்துறை முன்னேறும். ஆனால் சனியின் பார்வை 10 ஆம் வீட்டுக்கும் கிடைப்பதால் பலனில் மாறுதல் உண்டாகலாம். அடுத்து 10க்குரிய சூரியன் 9 இல் செவ்வாயோடு இருப்பதும் சிறப்பில்லை. தெய்வீக வழிபாடு அமைதியைக் கொடுக்கலாம். ராசியை சுக்கிரன் பார்ப்பது விசேஷம் தெய்வ அருள் கிடைக்கலாம்.

**தனு: மூலம், பூராடம், உத்தராடம் 1.**

(1,4) உரிய குரு 9 இல் விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. வீடு, வாகனம் லாபம் தரும். மேலும் சுக்கிரனின் நட்சத்திரசாரத்தில் இருப்பதும் நல்லது. (2,3) உரிய சனி 7 இல் இருப்பது நல்லதல்ல. கையில் பணம் இருக்காது. (7,10) உரிய புதன் 9 இல் இருப்பது மத்திமமான பலன் 7 இல் சனி இருப்பதால் திருமணத்தடை இருக்கும். குடும்பத்தில் அமைதி இருக்காது. மேலும் குருவையும், ராசியையும், 4 ஆம் வீட்டையும் சனி பார்ப்பது நல்லதல்ல. ஆனால், குரு ராசியைப் பார்ப்பதால் தோசம் விலகும். குருவோடு புதன் இருப்பதால் தொழில் துறை முன்னேற்றம் உண்டு. குறுந்தூரப் பிரயாணம் அமையும். தெய்வ அருள்கிட்டும்.

**மகரம்: உத்தராடம் 2,3,4,. திருவோணம், அவிட்டம் 1,2**

(1,2) உரிய சனி 6 இல் இருப்பது விசேஷம். எடுத்த முயற்சி நல்ல முறையில் அமையும். உடல் ஆரோக்கியம் உண்டு. கையில் பணம் இருக்கும். மேலும் குருவின் நட்சத்திர சாரத்தில் இருப்பதும் நல்லது. (4,11) உரிய செவ்வாய் 7 இல் சூரியனுடன் சேர்ந்து இருப்பதால் வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மூத்த சகோதரத்துக்கும் கூடாது. நண்பர்களுக்கும் நல்லதல்ல. 7 ஆம் வீட்டில் சூரியன், செவ்வாய் இருப்பது திருமண வாய்ப்பு பாதிக்கலாம். 8 இல் குரு இருப்பதும் ஒரு காரணமாகும். 10க்குரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பது தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும். சூரியன், செவ்வாய் ஆகிய கிரகங்கள் ராசியைப் பார்ப்பதால் அவசர முடிவு, எதிலும் மன இறுக்கம் அல்லது மன அழுத்தம் இருக்ககூடும். அத்துடன் குரு மறைவது அதாவது 8 இல் இருப்பது சுகக்குறைவு இருக்கும். கடவுள் வழிபாட்டால் சகல தொல்லைகளிலும் இருந்து விடுபடலாம்.

**கும்பம்: அவிட்டம் 3,4. சதயம், பூரட்டாதி 1,2,3.**

(1,12) உரிய சனி 5 இல் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்க முடியாது. ஐஞ்சச்சனியை நஞ்சச் சனி என்பர் அதாவது அட்டமத்துச் சனிக்கு நிகரானது. உடல் ஆரோக்கிம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகும். (2,11) உரிய குரு 7 இல் இருப்பதால் கையில் பணம் இருக்கும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மூத்த சகோதரத்துக்கும் நல்ல பலன் உண்டு. (4,9) உரிய சுக்கிரன் ஆட்சியாக இருப்பதால் பெற்றோருக்கு நல்லது. வீடு, வாகனம் லாபம் தரும். 7 க்குரிய சூரியன் 6 இல் இருப்பதாலும் 7 இல் குரு இருப்பதாலும் திருமண வாய்ப்புண்டு. குடும்பத்தில் அமைதி நிலவும். 10க்குரிய செவ்வாய் 6 இல் இருப்பது நல்லது. ஆனால் பலவீனமாக இருப்பது நல்ல பலனைச் செய்யாது. சூரியன் 6 இல் இருப்பதால் நல்ல பலனைச் செய்வார். தொழில்துறையில் முன்னேற்றம் இருக்கும்.

**மீனம்: பூரட்டாதி 4, உத்தரட்டாதி, ரேவதி.**

(1,10) உரிய குரு 6இல் இருப்பதால் நல்ல பலனை எதிர்பார்க்கமுடியாது. உடல் ஆரோக்கியம் பாதிக்கலாம். எடுத்த முயற்சி தாமதமாகலாம், தொழில்துறையில் பின்னடைவு வரலாம். சுக்கிரனின் நட்சத்திர சாரத்தில் இருப்பது, சுக்கிரன் ஆனாலும் பகைக்கிரகமாக இருப்பதால் ஆறுதல் இருக்கும் என்று எண்ணவில்லை. (2,9) உரிய செவ்வாய் 5 இல் இருப்பதால் கையில் பணம் இருக்காது. தகப்பனுக்கும் கூடாது. (4,7) உரிய புதன் 6 இல் இருப்பதால் புதன் 6 ஆம் இடத்தில் நன்மை செய்வதாக அனுபவ அறிஞர்கள் கூற்று. ஆகவே வீடு, வாகனம் லாபம் தரும். திருமணவாய்ப்பு உண்டு. குடும்பத்தில் அமைதி இருக்கும். இருப்பினும் குரு சுகம் குறைவதால் சில பல தடைகள் வரவாய்ப்புண்டு. மேலும் சனி, குருவையும் 10 ஆம் வீட்டையும் ராசியையும் பார்ப்பதால் நல்ல காரியத்துக்கு தடைவரவாய்ப்புள்ளது.

# மறக்க முடியாத ஜூலை 24!



ஸ்ரீலங்கா அரச படைகளின் முதுகெலும்பான, அதி உயர் முதல்தரப் பாதுகாப்புக் கொண்ட கட்டுநாயக்க விமானப்படைத்தளமும், அதனோடு இணைந்திருந்த ஸ்ரீலங்காவின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையமான பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையமும், நள்ளிரவு கடந்த ஓர் அதிகாலையில் ஆறே ஆறு மணி நேரங்களில் எவருமே கனவில்கூட எதிர்பார்த்திராத வகையில் மாபெரும் அழிவுக்குட்பட்டு உருக்குலைந்து போய்விட்டன. 2001 ஜூலை 24 ஆம் திகதி இடம்பெற்ற ஸ்ரீலங்கா அரசின் முதுகெலும்பையே உடைத்த இந்தச் சம்பவம் மறக்க முடியாத ஜூலைச் சம்பவங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

2001 ஜூலை 24 ஆம் திகதி அதிகாலை, மிகத்துல்லியமான திட்டமிடலுடன் கனரக ஆயுதங்கள் சகிதம் சுமார் 14க்கும் 20 க்கும் இடைப்பட்ட வீரர்களைக் கொண்ட 'கொமாண்டோ' அணி ஒன்று இலத்திரனியல் பாதுகாப்பு வேலிகளை ஊடறுத்து விமானப் படைத்தளத்தினுள் நுழைந்தது.

இதற்கு ஏதுவாக விமானப்படைத்தளத்தின் சுற்றுப்புறங்களுக்கு மின்சாரம் வழங்கிக் கொண்டிருந்த மின்மாற்றிகளை ஏற்கனவே செயலிழக்கச் செய்தனர் தாக்குதல் அணியினர்.

குராண ராஜ் பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தில் இருந்து தம்மைத் தாக்குதலுக்குத் தயார்ப்படுத்திக் கொண்ட தாக்குதல் அணியினர், விமானப்படையினரின் முகாமிற்கு இடதுபக்கமாக கம்பிவேலியை வெட்டி உள்நுழைந்து தமது தாக்குதலுக்கான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தாக்குதலின்போது எந்தவொரு பயணியோ, பொதுமக்களோ இலக்காகிவிடக் கூடாது என்பதில் தாக்குதல் அணியினர் மிகக் கவனமாக இருந்தனர். தாம் உள்ளே நுழைந்தவுடன் தாக்குதலைத் தொடுக்காது, பொறுமையாக இருந்து இறுதி நேரத்தில் வந்திறங்கிய ஓர் பயணிகள் விமானத்தையும் கவனத்தில்கொண்டு அதிலிருந்து சகல பயணிகளும் இறங்கிச் சென்ற பின்னரே அதிகாலை 3.50 மணிக்கு தமது தாக்குதலை ஆரம்பித்தனர்.

இதிலும் கவனிக்கப்பட வேண்டிய ஓர் முக்கிய விடயம் யாதெனில், தாக்குதல் அணியினர் முதலில் விமானப்படைத்தளத்தினுள்ளேயே தமது தாக்குதலை ஆரம்பித்தது மட்டுமன்றி, சுமார் 2 மணித்தியாலங்கள் வரை சர்வதேச விமான நிலைய வளாகத்தினுள் நுழைய முற்படவில்லை. காரணம் விமானப்படையினரின் விமானங்கள் தாக்கப்படுவதை உணர்ந்து அருகில் உள்ள பயணிகள் விமான நிலைய ஊழியர்கள் மற்றும் பயணிகள் யாவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட முடியும் என்பதையும் கருத்தில் கொண்டே தாக்குதல் நுட்பமாக ஆரம்பிக்கப்பட்டது.

முதலில் விமானப் படைத்தளத்தின் ஓடுபாதைக்கு அருகே தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிக் – 27, கிபிர், எம்.ஐ.24, எம்.ஐ.17, கே.8, பெல் 412ரக யுத்த வானூர்திகள் மீது ஆர்.பி.ஜி. மற்றும் கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலை தொடுத்து மொத்தம் 8 வானூர்திகளை முற்றாக அழித்த தாக்குதல் அணியினர், பின் அங்கிருந்து இரு அணிகளாகப் பிரிந்து, ஒரு அணி, எதிர்ப்படும் இலக்குகளை அழித்தபடி சர்வதேச விமான நிலையத்தை நோக்கி, முன்னேறியது. மற்றைய அணி அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் கவச அணியாகச் செயற்பட்டது. அரசபடையினரின் தாக்குதலை எதிர்த்துச் சமர் புரிந்த இவர்களில் இருவர் படையினரின் கண்காணிப்புக் காவல் கோபுரத்தில் ஏறி அங்கிருந்து படையினரின் விமானங்கள் மற்றும் ஆயுத வெடிபொருட்களஞ்சியம் என்பவற்றின் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன் போது, ஆயுதக் களஞ்சியங்கள் பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதோடு, பல விமானங்கள் அழிந்தும், சேதத்திற்கும் உட்பட்டன.

இதற்கிடையே சர்வதேச விமான நிலையத்தினுள் நுழைந்த தாக்குதல் அணியினர் தற்கொலைத் தாக்குதல் மூலமும் மற்றும் கனரக ஆயுதங்கள் கொண்டும் தாக்குதல் நடத்தி எயர்பஸ் ரக விமானங்கள் நான்கையும் மேலும் இரு பயணிகள் விமானங்களையும் அழித்தனர்.

நிலைமை இவ்வாறு இருக்க, விமானத் தளங்கள் மீது தாக்குதல் ஆரம்பித்த 20 நிமிடத்திற்குள் ஜனாதிபதிக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி உடனடியாகவே தனது வாசஸ்தலத்திற்கு அனைத்துப் படை உயர் அதிகாரிகளையும் வரவழைத்து தமது விசேட அணிகளை அனுப்பி தாக்குதலை முறியடிக்கும்படி கட்டளையிட்டார்.

இதுதவிர விடுமுறையில் சென்ற அனைத்துப் படை வீரர்களையும் உடனடியாகவே பணிக்குத் திரும்புமாறும் அழைப்புவிடுத்தார். சுமார் ஒரு மணிநேர காரசாரமான வாதங்களுக்குப்பின் ஜனாதிபதி மாளிகையே ஓர் போர்க்களமாக மாறி. தொலைபேசி வாயிலாக கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

சிக்கலான நேரங்களில் நிலைமையை கட்டுப்பாட்டில் கொண்டுவரவென அமெரிக்க விசேட பயிற்சி பெற்ற அணிகள் அரச படையிடம் உண்டு. இப் படைகள் தாக்குதல் களத்திற்குச் சென்ற போது, நிலைமைகள் யாவும் கட்டுமீறிப் போயிருந்ததுடன், தமது சகாக்களாலேயே தாக்குதலுக்கும் உட்பட்டனர். காரணம் தாக்குதல் அணியினரும் விமானப்படையினரின் சீருடையிலேயே இருந்ததினால் தமது சகாக்கள் யார், எதிரிகள் யார் என்று தெரியாமலே தாறுமாறாகத் தாக்குதல் நடத்தினர். இதன் போதே மேலும் ஆறு விமான்ங்கள் சேதத்துக்குள்ளாகின என்றும் கூறப்படுகின்றது.

விமான நிலைய பாதுகாப்புக்கென 1000ற்கும் மேற்பட்ட ஆயுதந்தாங்கிய வீரர்கள் இருந்த போதும், மேலதிகமாக விசேட பயிற்சி பெற்ற அணிகளும் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டும் சுமார் 6 மணி நேரங்கள் வரை நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியவில்லை. 800 ஏக்கருக்கு மேற்பட்ட விமானத்தளப் பிரதேசத்தை விரல்விட்டு எண்ணக்கூடிய சில வீரர்கள் 6 மணிநேரம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதென்பது நினைத்துப் பார்க்கக்கூட முடியாத ஒன்றே.

நன்கு திட்டமிட்ட தாக்குதல் நடத்திய தாக்குதல் அணியினர் அதிகாலை நன்கு விடிந்த பிறகும்கூட, அதாவது, அரச படையினர் தளப் பிரதேசத்திற்குள் வந்துவிட்ட பிறகும் கூட மிக நிதானமாகச் சென்று படையினரின் மற்றுமொரு அன்ரனோவ் ரக இராணுவ விமானத்தை தற்கொலைத் தாக்குதல் மூலம் சிதறடித்தனர்.

ஆறு மணிநேரங்களுக்குள் மொத்தம் 27 விமானங்களையும், ஆயுதக் களஞ்சியம் மற்றும் எரிபொருள் தாங்கிகளையும் இழந்த நிலையில் வெற்றிகரமாகத் தாக்குதலை முறியடித்துவிட்டோம் என ஸ்ரீலங்கா அரச படைத்தலைமைப்பீடம் அறிவித்தது: இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் தாக்குதல் நடத்தியவர்களில் சிலர் தப்பியும் சென்றுவிட்டனர் என்பதே.

அரசு எவ்வளவோ முயன்றும் இழந்த விமானங்களின் தொகையை மறைத்துவிட முடியவில்லை. அவை படிப்படியாக வெளியே கசிந்துவிட்டன. இந்த எதிர்பாராத பேரிடியால் 4 கிபிர் விமானங்கள் (ஒன்று 3.8 மில்லியன் டொலர்) 2 மிக்–27 ரக விமானங்கள் (ஒன்று 2.8 மில்லியன் டொலர்), எம்.ஐ–24 ரக உலங்குவானூர்தி (ஒன்று 2.4 மில்லியன் டொலர்), எம்.ஐ–17ரக உலங்கு வானூர்தி (ஒன்று 2.2மில்லியன் டொலர்), கே–8 பயிற்சி விமானங்கள் 3 (ஒன்று 1 மில்லியன் டொலர்), பெல்–412 ரக உலங்கு வானூர்தி 2, அன்ரனோவ் ரக விமானம் – 1 என மொத்தம் 14 யுத்த விமானங்கள் முழுமையாக அழிந்தன.

மேலும் 4 கிபிர், 1 பெல் – 12, வி.ஐ.பி. உலங்கு வானூர்தி 2 என 7 படை விமானங்கள் இயங்கமுடியாத அளவு சேதத்தைச் சந்தித்தன.

இதைத் தவிர எயர்லைன்ஸுக்குச் சொந்தமான ஏ.340 ரக 'எயர்பஸ்' ரகவிமானம் 2, ஏ. 330 ரக 'எயர்பஸ்' விமானம்–1, ஏ 320 ரக 'எயர்பஸ்' விமானம்–1, மேலும் இரண்டு பயணிகள் விமானம் உட்பட மொத்தம் 6 பயணிகள் விமானங்கள் அழிக்கப்பட்டன.

இதன்படி ஒட்டுமொத்தமாக 27 விமானங்களை ஸ்ரீலங்கா அரசு ஒரே தடவையில் இழந்துபோனது. இந்த இழப்பு ஸ்ரீலங்காவின் விமானங்களில் 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விமானத் தளத் தாக்குதல்கள் மூலம் ஸ்ரீலங்கா அரசு தனது ஒரு வருட பாதுகாப்புச் செலவில் பாதிமடங்கிற்கு மேற்பட்ட தொகையை அதாவது, 4000 கோடி ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகையை 6 மணி நேரங்களில் இழந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டுள்ள போதும், இழப்பு இதைவிட அதிகம் என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



இது ஒருபுறம் இருக்க விமானப் படையினரின் போரிடும் ஆற்றலில் 40 வீதம் இல்லாது ஒழிக்கப்பட்டுவிட்டதென ஸ்ரீலங்கா அரசின் படை அதிகாரிகளே ஒத்துக்கொள்கின்றனர்.

கட்டுநாயக்க மீதான இந்தத் தாக்குதல் இரு இலக்குகளுடன் நடத்தப்பட்டிருக்கின்றது. ஒன்று ஸ்ரீலங்கா இராணுவத்தின் முதுகெலும்பான விமானப்படையினரின் பலத்தை மழுங்கடித்துவிடுவது. இரண்டு இலங்கையின் பொருளாதார மையத்தின் மீது அழிவை ஏற்படுத்தி பொருளாதார ரீதியில் அரசை ஆட்டங்காண வைப்பது.

இதனடிப்படையில் தாக்குதல் நடத்தியவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமான வெற்றியை பெற்றுவிட்டனர் என்றே கூறலாம். ஏனெனில் விமானப்படை பலத்தின் வேட்டைப் பற்களில் பாதியை வேருடன் பிடுங்கி எறிந்து விட்ட நிலையில், ஏற்கனவே குற்றுயிரும் குறையுயிருமாகவிருந்த ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை சேடமிழுக்கும் நிலைக்கும் தள்ளிவிட்டது இத்தாக்குதல். இது தவிர சங்கிலித் தொடராக பல கேள்விகளையும் எழுப்பிவிட்டதாகவே இத்தாக்குதல் அமைகிறது.

அதி உச்ச பாதுகாப்பு வலயத்தினுள் எவ்வாறு தாக்குதல் அணியினர் ஊடுருவினர்? கடுமையான வீதிப் பாதுகாப்புச் சோதனைகளையும் தாண்டி எவ்வாறு கனரக ஆயுதங்களை எடுத்தச் சென்றனர்? எங்ஙனம் துல்லியமாக வேவுத் தகவல்களைப் பெற்றனர்? என்பதுடன் வந்தவர்களில் சிலர் எவ்விதம் தப்பிச் சென்றனர்போன்ற கேள்விகளும் மிகச் சாதாரணமாகவே எழுகின்றன. அரச இராணுவ உளவியல் உட்கட்டுமானத்தை மிகப் பலமாகச் சிதைத்துவிட்ட இத்தாக்குதலானது, அரச புலனாய்வுத்துறையினரின் செயற்பாடுகளையும் கேள்விக்குறியாக்கியுள்ளது.



அனைத்துலக இராணுவ வல்லுனர்களுமே இந்நுட்பமான தாக்குதலைக் கண்டு வியந்துபோயுள்ளதுடன், இத்தாக்குதலை, வியட்நாமில் 'வியட் கொங்' கெரில்லாக்கள் 1968 இல் தலைநகர் சைக்கோனுக்கு அருகே நடத்திய தாக்குதல் ஒன்றுக்கு ஒப்பிடுகின்றனர். இதுவே வியட்நாம் யுத்தத்தில் பெரும் திருப்புமுனையாகவும் அமைந்த தாக்குதல் என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் காரணமாக 5000 பேர் வேலை பார்க்கும் எயர்லைன்ஸ் நிறுவனம் தனது 195 விமானிகளில் 78 பேர் உட்பட ஏனைய பணியாளர்களில் சுமார் 2000 பேரை வேலையில் இருந்து நீக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது.

காரணம் தனது உலக நாட்டு சேவையில் 12 சேவைகளை உடனடியாக இரத்துச் செய்தமையே. வெளிநாட்டு விமானிகளை பணியில் இருந்து விலகும்படி அறிவிக்கப்பட்டது இலங்கை வரலாற்றில் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்க தாக்குதலை அடுத்து சங்கிலித் தொடராக பல பிணக்குகள் எழத் தொடங்கின. வெளிநாட்டு விமானங்கள் ஸ்ரீலங்காவில் தரை இறங்குவதற்கான காப்புறுதிக் கட்டணங்கள் பல வட்சம் டொலர்களாக அதிகரிக்கப்பட்டன. இதே நிலையே ஸ்ரீலங்கா கப்பல் துறைமுக சபைக்கும் ஏற்பட்டது. இத்தாக்குதலின் எதிரொலி நாட்டின் சகல துறைகளிலும் எதிரொலித்தது எனலாம்.

உல்லாசப் பயணிகளின் வருகை திடீரென வீழ்ச்சியடைய அதை நம்பியுள்ள அனைத்து வருவாய்த்துறைகளும் வெறிச்சோடிப்போயின.

ஒட்டு மொத்தத்தில் சிங்களத் தேசியம் முழுவதையும் ஆட்டங்காணச் செய்துவிட்ட இத்தாக்குதல் ஸ்ரீலங்கா அரசிற்கும், வெளிநாடுகளுக்கும் பல செய்திகளைச் சொல்லி நிற்பதுடன் சிங்கள மக்களைச் சிந்திக்க வேண்டிய தேவைக்கும் தள்ளியுள்ளது.

இலங்கை இனப்பிணக்கிற்கு யுத்தம் ஒரு தீர்வல்ல என்பதும், வடக்கு கிழக்கு மட்டுமல்ல முழு இலங்கைத் தீவுமே எந்நேரமும் தாக்குதலுக்குட்படக் கூடிய யுத்தப் பிரதேசமே என்பதும், எவ்வளவுதான் இழப்பைச் சந்தித்தாலும் பேரினவாத அரசு யுத்தத்தையே தனது முடிவாகக் கொண்டு செயற்படுவதும் வெளிப்படை என்பதும் செய்திகளாக விரிகின்றன.

இதுதவிர ஸ்ரீலங்கா வான்படையின் அழிவில் தமிழ் மக்கள் எந்தளவு மகிழ்ச்சி கொண்டார்கள் என்பதன் அடிப்படையிலும் ஓர் செய்தி புலனாகின்றது. நவாலி, நாகர்கோயில், மாத்தளன் என நரபலி எடுத்த வானத்துக் கழுகுகள் அழியவேண்டும், தமது வானமும் மீட்கப்படவேண்டும் என்கிற ஆவலும் அவர்களுள் ஆழமாகப் பதிந்து கிடக்கின்றது என்கிற செய்தியே அது. இந்த விடிவின் ஓர் கட்டம் கட்டுநாயக்காவில் எழுதப்பட்டுவிட்டது. மிக விரைவிலேயே இது விரிவடைந்து வெற்றியின் உச்சத்தை தொடும் என்பதில் ஐயமில்லை.

சமாதானத்தின் தேவை பற்றிய செய்தியை சிங்களத் தேசியத்திற்கு மிக அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறது கட்டுநாயக்க மீதான இந்த அதிரடி. இனியும் சிங்களப் பேரினவாதம் சமாதானத்திற்கான யுத்தம் எனும் கோசத்தை எழுப்புமா? அல்லது தனது வேசத்தைக் கலைத்து சமாதானக் கரத்தை நீட்டுமா என்பதைப் பொறுத்தே ஸ்ரீலங்காவின் எதிர்காலம் குறித்த தலைவிதி நிர்ணயிக்கப்டும் என்பதில் சந்தேகமில்லை.

*—நன்றி, எரிமலை—*
*2001, ஜூலை*

# விடுதலைப்புலிகள் Vs அரசாங்கம் நடைபெறுவது இராஜதந்திரப்போர்!

இந்தியாவுக்கான உத்தியோகபூர்வ விஜயத்தை முடித்துக்கொண்டு கடந்தவாரம் தாயகம் திரும்பியிருந்தார் பிரதமர் மகிந்த ராஜபக்ஷ. ஜே.வி.பி அங்கத்தவரான அமைச்சர் ஒருவரும் அவருடன் கூடச் சென்று வந்தமை கவனிக்கத்தக்க விடயம்.

இந்திய விசுவாசம்மிக்க இலங்கையின் சிங்கள அரசியல் தலைவர்களுள் மகிந்த ராஜபக்ஷவும் ஒருவர். பொருளாதார வர்த்தகத் தொடர்புகள் பற்றிய பேச்சுக்களில் ஈடுபடுவதற்காக தமது தூதுக்குழு டெல்லி சென்று திரும்பியது என்று தூதுக்குழுவில் அங்கம் வகித்தவர்கள் சொல்லிக் கொள்கிறார்கள்.

## இறுதிவடிவம்பெற்ற உடன்படிக்கை

ஆனால் இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்களில் இந்தியாவை ஆகக்கூடுதலான அளவுக்கு பங்குகொள்ள அல்லது தலையிட வைப்பதே இலங்கைப் பிரதமரது தூதுக்குழுவின் முக்கிய பணியாக இருந்தது என்று ஆய்வாளர்கள் சுட்டிக் காட்டுகின்றனர்.. ரணில் அரசாங்கத்தின் காலத்திலிருந்து தொடக்கப்பட்டு தொடரப்படும் இந்திய – இலங்கை பாதுகாப்பு ஒத்துழைப்பு உடன்படிக்கை விவகாரம் தற்பொழுது ஒரு இறுதிவடிவத்துக்கு வந்துள்ளதாக விடயமறித்த வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

கடந்த சில நாட்களுக்கு முன்பு யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டிருந்த இந்திய ஊடகவியலாளரும் அரசியல் ஆய்வாளருமான மோஹான் கே.ரிக்கு என்பர், யாழ்.பல் கலைக் கழகத்தில் ஆற்றிய உரையில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, முன்னாள் இந்நாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர், இலங்கை நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆகியோர் இந்திய ஈடுபாட்டை இலங்கையின் இனப்பிரச்சினையில் தீவிரமாகச் சம்பந்தப்படுத்த முனையும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளனர் என்பதை தெளிவுபடுத்தியிருந்தார்.

## எல்லாவற்றையும் இந்திய சமர்ப்பணமாக்கும் நோர்வே!

விடுதலைப்புலிகளுடன் நடைபெற்ற, நடைபெறுகின்ற சகல பேச்சுவார்த்தைகள், கலந்துரையாடல்கள் என்பன தொடர்பாக இந்திய அதிகாரிகளுக்கு தொடர்ந்து அறிவித்து வந்தது நோர்வே. இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் முக்கியத்துவத்தை முற்றாகதான் மதிப்பதாக வெளிக்காட்டிக்கொள்வதில் நோர்வே ஒருபொழுதும் பின்நிற்கவில்லை.

விடுதலைப்புலிகளின் விருப்பு, வெறுப்புக்கள் என்பன தொடர்பாக நன்கு விளங்கி வைத்திருக்கின்ற நோர்வே வெளிவிவகார அமைச்சர் ஜோன் பீற்றர்சன், துணைவெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிஸன், விசேட சமாதானத் தூதுவர் எரிக் சொல்ஹெய்ம் ஆகியோர் அவ்வப்போது இந்திய வெளிவிவகாரத் துறை அதிகாரிகள் உள்ளிட்ட இந்திய அரசியல் தலைவர்களுள் முக்கியமானவர்கள் அனைவருடனும் இலங்கை இனப்பிரச்சினையின் பிந்திய நிலைவரங்கள் தொடர்பான சகலவிடயங்களையும் கலந்தாலோசித்து வருவதாகவே தோன்றுகிறது.

நோர்வே பிரதிநிதிகளுக்கும் இந்தியப் பிரதிநிதிகளுக்குமிடையிலான தொடர்பாடல்கள், இலங்கையில் சமாதானத்தை நிறுவுதல் என்ற நன்னோக்கு அடிப்படையில் அமைந்திருக்கும் என்று எதிர்பார்க்க முடியுமா என்ற கேள்வி எழுகிறது.

இலங்கை அமைந்திருக்கும் கேந்திரம் காரணமாக, புவிசார் அரசியல் வரலாற்றுப் பின்னணிகாரணமாக விவகாரங்களை இந்தியாவுக்கு அடிக்கடி சமர்ப்பிக்கவேண்டிய தார்மீகக் கடப்பாடு உடையதாக நோர்வே விளங்குகிறது. 1980களில் இலங்கை இனப்போரில் இந்தியா ஆற்றிய பங்கு, இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக செய்யப்பட்ட ஜே.ஆர் – ரஜீவ் ஒப்பந்தம், இலங்கைக்கு இந்திய இராணுவம் அனுப்பப்பட்டமை, இந்தியப்படை – புலிகள் போர் போன்ற வரலாற்றுச் சம்பவங்களை மறந்து அல்லது புறக்கணித்து இலங்கைச் சமாதானத்தை கையாளமுடியாத நிலையில் நோர்வே உள்ளமை இயல்பானதே!

## ஐதான விடயங்களல்ல!

அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியவைகூட இப்போதைக்கு இந்தியாவின் ஆளுமையையும், செல்வாக்கையும் எள்ளளவும் புறக்கணிக்கத் தயாரில்லை. இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தில் இந்தியாவின் காரியங்களும் காரணங்களும் உலக அமைதி என்ற பொதுக்கோட்பாடு போல ஐதான அல்லது கதைப்பதற்கு இலகுவான விடயங்களில்லை. இலங்கை இனப்போரின் போக்கும் அதற்கான தீர்வுகளும் தனது நாட்டின் ஆள்புல ஒற்றுமை, பாதுகாப்பு ஆகியவற்றுடன் சம்பந்தப்பட்டவை என்றே இந்தியா கருதி வந்திருக்கிறது; கருதுகிறது.

## இந்தியதலையீட்டுக்கு வழிகோலும் சிங்களம்!

விடுதலைப்புலிகள், இலங்கை அரசாங்கங்களுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபட்ட காலங்களிலும் சரி இருதரப்பாரும் யுத்தமுனைகளில் இரத்தம் சிந்திய காலங்களிலும் சரி இலங்கை அரசாங்கம், விரும்பியோ விரும்பாமலோ இந்தியாவின் நேரடி அல்லது மறைமுக ஈடுபாட்டை வரவேற்று ஏற்றுக்கொள்ள வேண்டிய நிலையில் இருந்துவந்துள்ளது.

தற்பொழுது சிங்களமக்கள் மத்தியில் உள்ள பலமான எந்த ஓர் அரசியல் சக்தியும் இந்தியத் தலையீட்டைவலிந்து வேண்டிக்கொள்ளும் ஆர்வத்துடனேயே உள்ளது. 1987 இல் இந்திய இராணுவம் நேரடியாகத் தலையிட்ட போது கொழும்பில் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் கணிசமான அளவு எதிர்ப்புத் தெரிவித்திருந்தனர். ஜே.வி.பி ஈவிரக்கமற்ற பாணியில் இந்திய எதிர்ப்பைக் கக்கியது.

ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் (குறிப்பாக ஐக்கிய தேசியக் கட்சி) மீண்டும் இலங்கை இனநெருக்கடிக்குள் இந்தியாவை இழுத்துவிடுவதற்கு முழுமூச்சாக ஆர்வம் காட்டுகின்றனர் என்பதே இன்றைய யதார்த்தம். அதிலும் இந்தியப் பிரசன்னத்தை தீவிரமாக அன்று எதிர்த்த ஜே.வி.பி, இந்தியா மீண்டும் இலங்கையில் காலடிவைப்பதையும் அதன்மூலமாக தமிழ்மக்களின் பேரம் பேசும் சக்தி பலவீனப்படுத்தப்படுவதையும் தக்க உபாயம் என வரவேற்கிறது.

## திறந்த சந்தைக்கு உதவாத போர்!

இலங்கையின் திறந்த பொருளாதாரச் சந்தைக்கு ஊடாக தத்தமது முதலீட்டாளர்களை ஊக்குவித்துவரும் ஜப்பானும் ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவும் தத்தமது நலன்கள் சார்ந்த பொருளாதார விரிவாக்கத்துக்குரிய உலகச்சூழலை ஒழுங்குபடுத்துவதில் இலங்கைப்போர் கணிசமான அளவு சவாலாக மாறக்கூடும் என்று அச்சப்படுகின்றன.

தமது முதலீடுகளுக்கும் வர்த்தக விரிவாக்கத்துக்கும் பாதுகாப்பற்ற சூழலை, இந்தநாடுகளின் முதலாளிவர்க்கம் எதிர்கொள்ளும் கட்டத்தில் ஒட்டுமொத்தமான சந்தை விரிவாக்கச் செயற்பாட்டில் ஒரு கசப்பான அனுபவமாக இது நின்று நீடிக்கும். சந்தை விஸ்தரிப்புவாதம் என்ற தூரநோக்கிலான கனவுக்கும் இலங்கைப்போர் சேதத்தை விளைவிக்கும் என்று அமெரிக்காவும், ஜப்பானும், ஐரோப்பியநாடுகளும் அச்சமுற்றுள்ளன.

## பகடைக்காயாக்கிய இந்தியா

1970களில் பிற்பகுதியில் ஜே.ஆர்.ஜெயவர்த்தனா இலங்கை பொருளாதாரத்தை திறந்த சந்தைஅடிப்படையிலான, முதலாளியப் பொருளாதாரமாக மாற்றிபோது அமெரிக்கா, ஜப்பான் உள்ளிட்ட பலநாடுகளும் பிரிட்டன் போன்ற ஐரோப்பிய நாடுகளும் முன்னின்று ஜே.ஆர் அரசுக்கு உதவின.

இதனடிப்படையில் அமெரிக்காவின் இராணுவ நலன்சார் நோக்கங்களுக்கு ஜே.ஆர் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் துணைபோகிறாரோ என்று சந்தேகித்த இந்தியத் தலைவர்களும் இந்தியக்கொள்கை வகுப்பாளர்களும் இலங்கைத் தமிழர் உரிமைப் போராட்டம் என்பதை தமது பகடைக்காயாகப் பயன்படுத்தி ஜே.ஆர் அரசைக்காலடிக்குக் கொண்டுவர முயற்சித்தனர்.

அதேவேளை இலங்கைத் தமிழர்களின் உரிமைப் போருக்கான எந்தத்தீர்வு வடிவமும் தமிழ்நாட்டில் உரிமைப் பிரச்சினைகளைத் தூண்டுவதற்காகவோ காஷ்மீர் சுயநிர்ணய போராட்டத்துக்கு முன்னுதாரணமாகத் திகழ்வதாகவோ இருக்காமல் பார்ப்பதிலும் இந்தியா கடுமையான அக்கறை செலுத்தியுள்ளது.

## அந்தச்சமநிலைப்புள்ளிதான் கேந்திரவிடயம்

இலங்கை இனப்பிரச்சினை விவகாரத்தின் அணுகுமுறைகளிலும் நலன்சார் நோக்கங்களிலும் இந்தியாவுக்கும் ஏனைய அக்கறையாளர்களான நோர்வே, அமெரிக்கா, ஜப்பான், ஐரோப்பிய ஒன்றியம் ஆகியேவற்றுக்குமிடையிலும் தெளிவான வெற்றிடங்களும் வேறுபாடுகளும் உள்ளன. சோஷலிஸ முகாமின் வீழ்ச்சியின் பின்பு பனிப்போர் முற்றுப்பெற்றுவிட்டது. எனினும் 1970களின் பிற்பகுதியில் இந்தியத் தலைவர்களும் கொள்கை வகுப்பாளர்களும் என்ன என்ன அச்சங்களை இலங்கை தொடர்பாகக் கொண்டிருந்தனரோ அந்த அந்த அச்சங்களில் பாரதூரமான மாற்றங்கள் ஏற்பட்டுவிட்டன என்று கருதிவிடமுடியாது.

இந்தியாவுக்கும் ஏனைய பிராந்திய, சர்வதேச சக்திகளுக்குமிடையிலான இலங்கை தொடர்பான விவகாரங்களில் இந்தியாவின் ஆள்புல ஒற்றுமை, பாதுகாப்பு என்பன முதல் இடத்திலும் பொருளாதார - வர்த்தக விவரங்கள் இரண்டாம்பட்சமானதாகவுமே உள்ளன. இந்தியாவுக்கும் இச்சர்வதேச சக்திகளுக்குமிடையே பல்முனைப்பட்ட, பல்வேறு காரணிகளில் தங்கிய உறவுச் சமநிலைப் புள்ளியைக் கண்டுபிடித்து அதன் அடிப்படையில் தத்தமது இலக்குகளை எய்துவதற்கு விடுதலைப்புலிகளும் இலங்கை அரசாங்கத் தலைவர்களும் முயலுவார்கள் என்பதே உண்மை.

## ஐரோப்பிய ஒன்றியத்தின் நலன் என்ன?

சில அரசியல் ஆய்வாளர்கள் சுட்டிக்காட்டுகின்ற மற்றொரு விடயமொன்று உள்ளது. இந்தியா ஒரு தரப்பு – நோர்வே, அமெரிக்கா, ஜப்பான் ஆகிய நாடுகள் மற்றொரு தரப்பு – ஐரோப்பிய ஒன்றியம் வேறு ஒரு தரப்பு என்ற அடிப்படையில் தான் இலங்கை இனவிவகாரத்தை வேறுபடுத்திப்பார்க்கப்படவேண்டும் என்கிறார்கள் அந்த ஆய்வாளர்கள். பிரான்ஸ், ஜேர்மனி போன்ற நாடுகள் தற்போதைய உலக ஒழுங்கில் குறிப்பிடத்தக்க வித்தியாசமான போக்குகளைக் கடைப்பிடிப்பது உண்மை. ஆனால் இலங்கை விவகாரத்தில் பிரான்ஸ், ஜேர்மனி ஆகிய நாடுகளின் வித்தியாசமான போக்கு எவ்வளவு தூரம் சாதக பாதகங்களை உருவாக்கும் என்பது மிக நுணுக்கமான அவதானிப்புக்குரிய விடயமாகும்.

## உக்கிரமான இராஜதந்திரப்போர்!

எது எப்படியிருப்பினும் விடுதலைப்புலிகளுக்கும் இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் இரத்தம் சிந்தும்போர் இப்பொழுது நடைபெறாவிட்டாலும் இராஜதந்திரப்போர் மிகவும் உக்கிரமாக நடைபெற்றவண்ணமே உள்ளது. இந்த இராஜதந்திரப்போரில் சர்வதேச உறவுநிலை என்ற விடயம் சார்ந்து நன்மைகளையும் தீமைகளையும் பகிர்ந்து கொள்ளும் நிலை ஏற்படும். புலிகளும் இலங்கை அரசாங்கமும் இலங்கையின் வெவ்வேறு இருசமூகங்களை பிரதிநிதித்துவம் செய்கின்றனர் என்பதால் இந்த நன்மை தீமைகளை இரு சமூகங்களும் பகிர்ந்து கொள்ளுவது தவிர்க்க முடியாததாகிறது. இவை அரசியல் பொருளாதாரம் சார்ந்தவை. விடுதலை என்ற இலட்சிய இலக்குக்கு (Ideal target) முழுநீள உத்தரவாதமாக இந்த இராஜதந்திரப்போர் இருக்கமாட்டாது. எனினும் அழியாது மீளல், உயிர்த்து நீடித்தல் போன்ற உபாயங்களுக்கு இது உதவக்கூடும்!

## புலிகளும் அரசாங்கப்படைகளும் போர்பற்றிய கருத்துப்போரில்

அண்மைய சிலவாரங்களாக இலங்கை அரசாங்கத் தரப்பிலும் விடுதலைப்புலிகள் தரப்பிலும் போர்பற்றிய அச்ச உணர்வு அவரவருக்கு தோன்றிவிட்டது போல கருத்துக்கள் தெரிவிக்கப்படுகின்றன. இரத்தம் சிந்தும் இந்தப் போர் பற்றிய கருத்துக்களினூடாக சாராம்சமாக ஒருவிடயம் தெரிகிறது. இரு தரப்பாரும் சமாதானத்தை இறுக்கிப்பிடித்துக்கொண்டு தத்தமது இராணுவப்பலத்தை கட்டிக்காப்பாற்றியுள்ளனர் அல்லது கட்டிவளர்த்துள்ளனர் என்பதே அவ்விடயமாகும். அது போரிடும் தரப்புக்களின் அகில உலக இயல்பாகவும் இருந்து வருகிறது.

## இராணுவச்சமநிலை?

இப்படிப்பட்ட ஒரு இராணுவச் சமநிலையை பேணியபடிதான், ஒரு இடைக்காலத் தீர்வுக்கோ அல்லது நிரந்தர அரசியல் தீர்வுக்கோ செல்லமுடியும் என்பது ஒரு வாதம். அதாவது ஒருவர் மற்றவரின் ஆயுதபலம், இராணுவ யுக்திமுறைமைகள் தொடர்பான அச்சத்தின் நிமித்தம் ஒரு அரசியல் தீர்வு நோக்கி தம்மை விரைவுபடுத்திக் கொள்வார் என்பதே அந்த வாதத்தின் உள்ளடக்கம். எனினும் இலங்கை உள்நாட்டின் அரசியல் ராணுவச் சூழல் ஓர் இடைக்காலத் தீர்வுக்கோ அன்றேல் நிரந்தர அரசியல் தீர்வுக்கோ நிலைமையை உந்தித் தள்ளும்போல் தெரியவில்லை. கருணா விவகாரம் போன்றன மேலும் சிக்கலான தோற்றப்பாடுகளைப் பெறுகின்றன!

## யார் தோற்பார்கள்?

இராஜதந்திரப்போரில் ஈடுபட்டுள்ள இருதரப்பாரும் ஒருவர் மற்றவரின் இராணுவச் சமநிலைசார்ந்த அச்ச உணர்வுநிமித்தம் தத்தமது சொந்த வேவுகள், புலனாய்வுகள் ஊடான மதிப்பீடுகளின் நிமித்தம் இரத்தம் சிந்தும் போருக்கு தயாரானால், அவ்வாறு ஒரு துவம்சப் போர் வெடித்தால் விடுதலைப்புலிகளின் படையணிகளா இலங்கை அரசாங்கப்படைகளா போரில் தோற்கடிக்கப்படுவார்கள் என்பதையிட்டு எவ்வித கருத்துகளும் தெரிவிக்க எவரும் விரும்பமாட்டார்கள்.

ஆனால், இலங்கையில் வாழும் அப்பாவிப் பொதுமக்கள் அனைவரும் தோற்கடிக்கப்படுவார்கள்; அவர்களின் மனித உரிமைகள் அடிப்படை உரிமைகள் என அனைத்துமே தோற்கடிக்கப்படும். இலங்கைத்தீவு இரத்த ஆறுகளின் நாச பூமியாக மாறும்!

-யாழ் ஆத்மா-



# அரசியல் அம்பலம்

## என்ன நடக்கிறது என்று தெரியவில்லை எதையோ உழறுகின்றனர்

''என்ன ஐயா இந்த மனிசன் ஆளும் கட்சிப் பக்கம் நின்று பேசுகின்றாரா அல்லது எதிர்க்கட்சிகளின் பக்கம் இருந்து பேசுகிறாரா என்பது புரியவில்லையே'' என்று கூறிக் கொண்டே வெளியேவந்தார் கம்பளை ஹாஜியார்.

''என்ன அங்கிள் சாப்பாட்டுக்குப் பிறகு பொருமிக் கொண்டே வருகின்றீர்கள்'' என்று மடக்கினார் நண்பர்.

''அட வாங்க மாப்பிளே! எல்லாம் நம்முடைய தம்பிமாரைப் பற்றித்தான். இன்றைக்குப் பாருங்க எல்லா அரச வானொலி, டி.வி., பேப்பர் எல்லாம் எதிர்க்கட்சிகள் மீது சேறு பூசுவதற்காகவே பயன்படுத்தப்படுகின்றன.

எதிர்காலத்தில் எந்த ஒரு அரசியல் கட்சியின் தலையீடும் இன்றி அரச ஊடகங்கள் சுதந்திரமாக இயங்க வேண்டும். சுதந்திர ஊடக ஆணைக்குழு அமைக்கப்பட வேண்டும் என்று போராட்டம் நடத்துகிறோம்'' என்றார்.

''இதை எவரும் எதிர்க்கவில்லையே அங்கிள். உங்கள் ஆட்கள் எல்லோரும் இந்தக் கோரிக்கையை ஆதரிக்கிறார்கள் தானே!'' என்று சீண்டினார் நண்பர்.

''என்ன மாப்பிளே! அப்படிச் சொல்லிப் புட்டேங்க. நாங்க எல்லோரும் அரச ஊடகங்களை வன்மையாகக் கண்டித்துக் கொண்டிருக்கும் போது ஒருவர் மட்டும் தனியார் ஊடகங்களைக் கண்டித்தார். பாவம் அவருக்கு என்ன நடக்கிறது என்று கூடத் தெரியாமல் இப்படிக் கொட்டித் தீர்த்துவிட்டார். என்ன செய்வது சுயபுராணம் பாடக் கிடைத்த நேரத்தை ஒரு சந்தர்ப்பமாக்கிக் கொண்டார் போலும்'' என்றார் கம்பளையார்.

## மீசையை முறுக்கிக் கொண்டிருந்தவர் பாவம் தாடியை தடவுகிறார்

போஸ்டர் சந்திரன் வழமைபோல் வேஷ்டி சால்வையுடன் ஆரவாரமாக வந்து கொண்டிருந்தார். மடிப்பு கலையாத அங்கவஸ்திரம்.

''என்ன தோழரே இன்று சபை கலகலப்பாக இருக்கும் போல பெரும் பான்மையை நிருபிக்கப் போகின்றீர்கள் இல்லையா?'' என சீண்டினார் நண்பர்.

''அடடா வாங்க சார். எப்படி சுகமாக இருக்கிறீர்களா? என்ன நடக்கிறது'' என்று ட்ரக் மாறினார் போஸ்டர் சந்திரன்.

''தோழரே நாட்டில் என்ன நடக்கிறது. என்ன நடக்கப் போகின்றது என்பதை தீர்மானிப்பவர்களே போஸ்டர் வீரர்கள் தான் என்று பேசிக் கொள்கின்றானர். நீங்கள் என்னடா என்றால் எங்களிடம் கேட்கின்றீர்கள்'' என்றார் நண்பர்.

''உண்மைதான் சார். இந்த அரசாங்கத்தின் கொள்கையை வகுத்து அவர்களின் தலைவிதியை மாற்றி அமைக்கும் வல்லமை எங்களிடம் தான்'' என்று கூறிக் கொண்டே சரிந்து விழுந்த சால்வையைச் சரிசெய்தார் போஸ்டர் சந்திரன்.

''கேட்க நன்றாகத்தான் இருக்கின்றது. ஆனால், எதையும் செய்வதாக இல்லையே!'' என்று மீண்டும் சீண்டினார் நண்பர்.

''என்ன சார் அப்படிச் சொல்லி விட்டீர்கள். எதைச் செய்யவில்லை?'' என்று ஆதங்கப்பட்டார் போஸ்டர் சந்திரன்.

''உங்களுடைய தோழர் விமலன், சபாநாயகர் இராஜினாமா செய்யாவிட்டால் சபையில் இருந்து தூக்கி வீசுவோம் என்று மீசையை முறுக்கினார். இன்று என்னடா என்றால் தாடியை தடவிக் கொண்டு மௌனமாக இருந்து விட்டாரே அது ஏன்?'' என்றார் நண்பர்.

''ஓ... அதைச் சொல்லுகின்றீர்களா? என்ன சார் இப்ப எங்களை (ஜே.வி.பி.) கறிவேப்பிலை மாதிரிதான் இந்த அரசாங்கம் பயன்படுத்துகின்றது. நாங்கள் முன் வைக்கும் எதையும் ஏற்பதில்லை. உதாரணமாக பிரதி சபாநாயகர் தெரிவின் போதும் இப்படித்தான் எங்களுக்குத் தெரியாமல் காலை வாரி விட்டனர்.

இப்போதும் அப்படித்தான். சபாநாயகரைத் தூக்கி வீச வேண்டும். அதற்கு உறுதியாக இருக்க வேண்டும் என்று கேட்டோம். ஆனால், அம்மாவின் ஆட்கள் அதைப்பற்றி எதையும் கண்டுகொண்டதாகவே இல்லை. அதுதான் கொஞ்சம் சங்கடமாக இருக்கிறது.'' என்றார் போஸ்டர் சந்திரன்.

''அப்படியானால் கோட்டைக்குள்ளும் குத்துவெட்டுகள் தான் போலும்'' என்று விடை பெற்றார் நண்பர்.

## மலையகத் தலைவர்களுக்கு வயிற்றைக் கலக்குகின்றதாம்

''என்னதான் இருந்தாலும் போஸ்டர் காரர்களைப் பார்த்து இந்த மலையகத் தலைவர்களுக்கு வயிற்றாலை அடிக்கக் கூடாது. இருப்பவன் சரியாக இருந்தால் சிரைப்பவன் சரியாக சிரைப்பான்'' என்று கூறிக் கொண்டேவந்தார் மலையகத்தின் மூத்த அரசியல் வாதிஒருவர்.

''என்ன ஐயா! பேப்பரைப் பார்த்துவிட்டு யாரை ஏசிக் கொண்டு வாரீங்க'' என்று கொழுக்கியைப் போட்டார் நண்பர்.

''வாங்க தம்பி! எல்லாம் உங்கள் பேப்பர் செய்தியைப் பார்த்துவிட்டுத்தான்'' என்றார் அந்தப் பெரியவர்.

''அப்படி என்ன போட்டு இருக்கு?'' என்றார் நண்பர்.

''தம்பி இங்க பாருங்க. ஜே.வி.பி.காரர்களை மலையகத்துக்கு வரவிடக்கூடாது என்று கச்சை கட்டுகிறார் ஒரு தலைவர்.

இந்த மலையகத் தலைவர்கள் இளைஞர்களுக்கு எதைச் செய்து கிழித்துவிட்டார்கள்? தேர்தல் வந்து விட்டால் இவர்கள் ஓட்டுக் கேட்க வருவாங்க. அப்புறம் மந்திரியானவுடன் மறந்து விடுவாங்க. அதுல ஒரே கட்சியாகச் சேர்ந்தும் வரமாட்டங்க. தனித் தனிக் கட்சியாகப் போட்டி போட்டாலும் விருப்புவாக்குக்காக வெட்டிக்கிறாங்க.

ஆனா, இந்த ஜே.வி.பியை பாருங்க. ஒரு களப்பதி மட்டும்தான் பார்லிமெண்டுக்கு வந்தார். ஒன்று மூன்றாகி மூன்று எட்டாகி எட்டு பதினாறாகி இப்போ 39 பேர் பார்லிமெண்டில இருக்காங்க. இதோட 73 பேர் மாகாண சபைக்கும் வந்திட்டாங்க. காரணம் ஒரு தலைமை. அடுத்தது ஒற்றுமை.

ஆனால், இந்த மலையகத் தலைவர்கள் முஷ்டியை முறுக்கிக் கொண்டு அடிபடுகின்றார்கள். குறிப்பாக இந்த ஸ்ரீபாத கல்லூரி விசயத்தைப் பாருங்க. ஆறுமுகன் ஒரு பக்கம். சந்திரசேகரன் ஒருபக்கம். பாவம் மாணவர்கள் அந்தரம்.

இப்ப ஜே.வி.பி. காரவுங்க ஸ்ரீ பாத கல்லூரி விடயத்திலும் மூக்கை நுழைத்து விட்டாங்கள். மலையக இளைஞர்களும் அவர்கள் பக்கம் சாய்ந்து விட்டாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை.

இந்த தலைவர்கள் உருப்படியான வேலை செய்திருந்தால் ஸ்ரீ பாத கல்லூரிக்குள் எப்படி ஜே.வி.பி நுழைய முடியும்? இதுதான் மலையகத் தலைவர்களுக்கு ஏற்பட்டுள்ள வயிற்றோட்டம்'' என்று கூறிவிட்டுப் போய் விட்டார் அந்தப் பெரியவர்.

## கைப்பிள்ளையை ஓரம்கட்டிவிட்டு வயிற்றுப் பிள்ளைக்கு பெயர் சூட்டுவிழாவாம்

என்னதான் இருந்தாலும் இந்தப்பச்சை வயல் நாயகனுக்கு விவஸ்தையே கிடையாது என்று ஒரு போடுபோட்டார். முன்னாள் கூட்டுறவுக் கடைக்காரரான கம்பளையார்.

''என்ன வாப்பா இப்படிச் சொல்லிப்புட்டீங்க,திடீரென்று'' வியப்புடன் கேட்டார் நண்பர்.

''பின்ன என்ன சார், இந்த அதிஉயர் மன்றிலே கலகலப்பாக சிரிக்கவும் சிந்திக்கவும் வேண்டுமானால் அந்த சகலகலாவல்லவன் சபையில் இருக்க வேண்டும். அந்த மனுசனுக்கு நாடாளுமன்றும், கட்சி என்பவற்றை விட வேறு எதுவும் இல்லை. தூக்கத்தில் கூட யானை என்றும் பச்சை வயல் என்றும் தான் பிதற்றுகின்றாராம்'' என்று எரிச்சலுடன் கூறினார் முன்னாள் கூட்டுறவார்.

''இதுக்குப் போய் பச்சைவயல் நாயகனுக்கு விவஸ்தை இல்லை என்று சொல்லுவது சரியா'' என்று சீண்டி விட்டார் நண்பர்.

''வேற எப்படிச் சார் சொல்லுறது? இந்த சகலகலா வல்லவன் – மேலும் சொன்னால் மும்மொழிப்பண்டிதர் – வவுனியா முதல் காலி மாத்தறை வரை இநதப் பச்சை வயலுடன் போய் கத்தோகத்தென்னு கத்தினார். ஆனால், அவரை மறந்துவிட்டார் பச்சை வயலார். கச்சியும் வேணாம், பதவியும் வேணாம் என்று பம்மாத்துக் காட்டுகிறவர்களுக்கு ஓடி ஓடி பதவியைக் கொடுக்கின்றார். இது நியாயமா அது தான் காட்டமாக இருக்கிறது'' என்றார் முன்னாள் கூட்டுறவார்.

''என்ன ஐயா இது புதுக்குழப்பமாக இருக்கு? அப்படீன்னா அந்த மாயமானவரை விட்டு விட்டு உண்மையான உழைப்பாளிக்கு வாய்ப்பு கொடுக்க வேண்டும் என்கிறீர்களா?'' இது நண்பர்.

''என்ன சார் மெதுவா சொல்லுறீங்க. இந்தப் பச்சை வயலாரும் வசதி, வாய்ப்பு, வியாபாரம் எல்லாம் உள்ளவர்களை விரட்டி விரட்டி பட்டம் அளிக்கத் துடிக்கின்றார். அல்லும்பகலும் தன்னுடனேயே இருக்கும் ஒரு உண்மையான ஜீவனை மறந்துவிட்டாரே அதுதான் வேதனை. என்று முடித்தார் முன்னாள் கூட்டுறவார்'' அதுவும் சரிதான்.

* * * * *

# சுற்றுலா

''முதலாம் தவணை விடுமுறையின் போது பத்தாம், பதினோராம் வகுப்பு மாணவர்கள் எல்லோரையும் திருகோணமலைக்கு ஐந்து நாள் கல்விச் சுற்றுலாவுக்கு அழைத்துச் செல்ல எமது கல்வி நிலையம் முடிவு செய்துள்ளது. சுற்றலாவில் கலந்து கொள்ள விரும்புபவர்கள் திங்கட்கிழமைக்கு முன்னர் ஆயிரம் ரூபா செலுத்துங்கள். செவ்வாய்க் கிழமை காலை ஒன்பது மணிக்கு எமது சுற்றுலா ஆரம்பிக்கிறது.''


இப்படி கல்வி நிலைய இயக்குநர் அறிவித்த போது மாணவர்கள் சந்தோஷத்தால் ஆரவாரப்படுகின்றனர்.

அப்போது முகுந்தனுக்கு மட்டும் அது பேரிடியாக இருந்தது. இருநூறு, முந்நூறு ரூபாய் என்றால் பரவாயிலைை, ஆயிரம் ரூபாய்! ஐயாவால் கொடுக்க முடியுமா ?

எட்டு அங்கத்தவர்களைக் கொண்ட குடும்பத்தில் முகுந்தன் தான் தலைப் பிள்ளை. முகுந்தன் தலைப்பிள்ளை மட்டுமல்ல அவன் தான் ஐயாவின் செல்லப் பிள்ளையும் கூட. எவ்வளவு கஷ்டம் வந்தாலும் அது அவனுக்கு ஒரு பொருட்டாகத் தெரிவதில்லை. அவனுக்கு வரும் எந்தப் பிரச்சினையையும் ஐயா தீர்த்து வைத்து விடுவார்.

''உங்கள் மகன் நல்ல கெட்டிக்காரன். ஒரு காலத்தில் பெரிய ஆளாக வருவான். நன்றாகப் படிக்கிறான். ஆனாலும் எங்கள் பாடசாலையில் எல்லாப் பாடத்திற்கும் ஆசிரியர்கள் இல்லை. குறிப்பாக கணித பாடத்திற்கும், ஆங்கில பாடத்திற்கும் நல்ல ஆசிரியர்கள் இல்லை. சிரமத்தைப் பார்க்காமல் அவனை ஒரு தனியார் கல்வி நிலையத்திற்கும் அனுப்பி படிக்க வையுங்கள்.'' என்று ஒரு நாள் அவனுடைய வகுப்பாசிரியர் ஐயாவிற்குச் செல்லி விட்டாராம். அன்றிலிருந்து அந்த ஆறாம் வகுப்பிலிருந்து இன்று வரை இந்த பத்தாம் வகுப்பு வரை முகுந்தனும் ரியூசனுக்குப் போகிறான்.

அன்று மன உழைச்சலோடு படுக்கையில் புரண்டு கொண்டிருந்தான் முகுந்தன். அப்போது ''பெரியவன் சாப்பிட்டு விட்டானா.'' என்ற ஐயாவின் விசாரிப்புக்குரல் கேட்கிறது. அவனைப் பெரியவன் என்றுதான் ஐயா எப்போதும் கூப்பிடுவார். அதற்கு அம்மா கூறிய பதிலைக் கேட்டாரோ கேட்கவில்லையோ தெரியாது. ஐயா மோப்பம் பிடித்துக் கொண்டு அவனது படுக்கைக்கே வந்து விட்டார். ''என்ன நடந்தது? பிரச்சினையை சொல்'' என்ற ஐயாவின் கேள்வியை தட்ட முடியாமல் முகுந்தன் மெதுவாக விடயத்தைக் கூறினான். ''அட மடையா இவ்வளவு தானா? நான் பெரிதாக நினைத்துப் பயந்து விட்டேன். கவலைப்படாதே இரத்தினம் விதானையாருக்கு ஆயிரம் கன்று கத்தரித்தறை கொத்த வேண்டுமாம். நாளைக்கு அவரிடம் போய் முற்பணமாக வாங்கி வந்து தருகிறேன். நாலு, ஐந்து நாட்களில் வேலை செய்து கழித்து விடலாம். இப்போது எழும்பிவா சாப்பிடு''. என்றார்.



சொல்லியது போல அடுத்தநாள் காலையிலேயே ஆயிரம் ரூபா கொண்டுவந்து விட்டார். இவ்வளவு கடன் இருக்கும் போது இப்போது இதுதான் ஒரு குறைச்சலா என்று அம்மா முணுமுணுத்தபோது ''அடியே கூடப் படிக்கும் எல்லோரும் போகும் போது அவன் மட்டும் போகாமல் நிற்பதா? அவன் என்ன வெட்டிப் பொழுது போக்கவா போகிறான? கல்விச் சுற்றுலாதானே போகிறான்'' என்று அதட்டி அம்மாவை அடக்கிவிட்டார்.

சுற்றுலா புறப்படும் போது பயணம் அனுப்ப வந்தவர்' அம்மாவுக்குத் தெரியாமல் இடுப்பு மடிப்பில் வைத்திருந்த கொஞ்சப் பணத்தையும் எடுத்துக் கொடுத்து இந்தா இதை கைச் செலவிற்கு வைத்திரு என்று கூறி அனுப்பி வைத்தார்.

திருகோணமலையில் கோணேசர் கோயில், கன்னியாய் வெந்நீர் ஊற்று, துறைமுகம், நிலாவெளிக் கடற்கரை, புறாமலை, வடக்குக் கிழக்கு கல்வி அமைச்சு அலுவலகம் எல்லாமே பார்த்தாகிவிட்டது. நெல்சன்தியேட்டரில் பாய்ஸ் படமும் பார்த்து விட்டார்கள்.

இப்படியொருசுகமான அநுபவம் இனிமேல் கிடைக்குமா?

ஊர் திரும்பும் போது வீட்டாருக்கென்று முகுந்தன் எதுவுமே வாங்கவில்லை. வாங்குவதற்கு பணமும் இருக்கவில்லை. ஐயா தறை கொத்தும் போது போட்டுக் கொள்ள வேண்டுமென்று எழுபத்தைந்து ரூபாவுக்கு ஒரு தொப்பி மட்டும் முதலிலேயே வாங்கி வைத்து விட்டான்.

ஊரை அடைந்த போது பிற்பகல் மூன்று மணிக்கு மேலாகிவிட்டது. பயண அலுப்புடன் வீட்டு வாசல்வரை வந்தவன் வீட்டு வாசலில் திரண்டு நின்ற சனக் கூட்டத்தைப் பார்த்து திகைத்துவிட்டான். என்ன இது? இவ்வளவு சனக் கூட்டம்? உடுப்புப் பெட்டியையும் போட்டுவிட்டு உள்ளே ஓடியவனை பக்கத்து வீட்டு செல்லாச்சிக் கிழவிதான் ஒடிவந்து கட்டிப்பிடித்தாள்.

''ஊர் பார்க்கப் போன மகராசா
உன் ஐயாவின் கோலத்தைப்
பார்த்தாயா-''

நிலமை புரிந்தும் புரியாத நிலையில் குச்சு விறாந்தையில் குத்துவிளக்கின் முன்னால் கிடந்த ஐயாவின் முகத்தைப் பார்த்து ஐயா என்று அலறியவன் அப்படியே விழுந்து விட்டான்.

சுடலைக் காரியங்கள் முடிந்து வீடு வந்த போது வீடு கூட்டி மெழுகப்பட்டிருந்தது. ஒரு சில நெருங்கிய உறவுகளைத் தவிர எல்லோருமே வீடு சென்றுவிட்டார்கள். வீடு வெறிச்சோடிக் கிடந்தது.

''என்ரை ஐயா எப்படி ஐயா எங்களை விட்டுப் போனாய் நாங்கள் இனி எங்கை ஐயா போவம்'' – அடுப்படிக்குள் இருந்து அம்மா புலம்பிக் கொண்டிருக்கிறாள்.

இரத்தினம் விதானையாரின் கத்தரித் தறை கொத்தும் போது நிலத்தில் புதைந்து கிடந்த ஷெல் குண்டின் மேல் ஐயாவின் மண்வெட்டி பட்டுவிட்டதாம். ஐயாவை தூக்கி வந்த போது அவரின் இடுப்புக்கு கீழே எதுவுமே இருக்கவில்லையாம்.

பிரமை பிடித்தவனாக வீட்டு முற்றத்தையே பார்த்துக் கொண்டிருந்த அவனது பார்வையில் அதுபட்டது... என்ன அது? முற்றத்து மாமரத்தின் கீழே பிடி சிதறியபடி கிடப்பது ஐயாவின் மண்வெட்டியா? தன்னையே மறந்த நிலையில் ஓடிச் சென்று அதை எடுத்தவன் முதன் முதலாக ஐயா என்று அலறிவிட்டான்.

ஐயா உண்மையிலேயே போய்விட்டார். அவர் இருந்தால் இந்த மண்வெட்டி முற்றத்தில் இப்படிக் கிடக்குமா? சேறும் சகதியுமாக தோட்டத்து மண் அப்பியபடி. ஐயா ஒவ்வொரு நாளும் வேலை முடிந்ததும் எவ்வளவு பக்குவமாக அதை செதுக்கித் துடைத்து குச்சு விறாந்தை வளையில் கொழுவி விடுவார்.

ஏதோ ஒரு அர்த்தத்துடன் சிறிது நேரம் அந்த மண்வெட்டியையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றவன் மளமளவென்று அதனைச் செதுக்கித் துடைக்கிறான். ஐயாவின் ஞாபகமாக அதற்கு பிடி போட்டு பக்குவமாக குச்சு விறாந்தை வளையில் இனிமேல் அதைக் கொழுவி வைக்க வேண்டும். வளையில் மட்டுமா? அவனுடன் சேர்த்து இதுவரை காலமும் ஐயாவை நம்பியிருந்த ஏழு ஜீவன்களின் வயிற்றை நிரப்புவதற்காக தோளிலும் கூட அவன் தானே இனி அதைத் தூக்க வேண்டும்.

**புதுக்கவி**

# பித்தன் பதில்கள்

*பா.யதுர்சன், முள்ளியவளை.*

**கேள்வி:**– பித்தா எனது அம்மா அப்பாவை நான் தெய்வமாகத் தான் நினைக்கிறேன். ஆனால், நான் ஏதும் தவறு செய்தால் அவர்கள் தங்கள் கையில் கிடைப்பவற்றால் எனக்கு எறிகிறார்கள். அவர்களுக்கு ஒரு கடிப்பதில் சொல்லும்?



**பதில்:**– அப்ப உமது அன்னையும் பிதாவும் முன் ''எறி'' தெய்வம் என்று சொல்லும்.

*கு.முகுந்தன், டைட்டானிக்ரெக்ஸ், சுன்னாகம்.*

**கேள்வி:**– பித்தா சில மின்குமிழ்கள் எதற்காக விட்டுவிட்டு எரிகின்றன?

**பதில்:**– தொடர்ந்து ஒளிர்ந்தால் சுட்டெல்லவா போயிடும்.

*மு.ராஜரட்ணம், கேரைதீவு.*

**கேள்வி:**– ஆ[illegible] மன்றத்தில் அமர்ந்திருக்கும் அமைச்ச[illegible]ரின் கடமைகள் என்ன என்பதைச் சொல்லமுடியுமா?

**பதில்:**– அந்த இருக்கையில் அமர்ந்திருக்கிற அவர்களுக்கே தெரியவில்லை அதை எட்டிக் [illegible]டப்பார்க்காத என்னைக் கேட்டால் என்ன சொல்வேன்.

*எஸ்.விஜி, உதய நகர் மேற்கு.*

**கேள்வி:**– உயிரே போனாலும் உன்னை மறக்க மா[illegible]டேன் என்று பலர் கூறுகிறார்களே, அவ்வார்த்தை பற்றி என்ன சொல்வீர் பித்தா —

**பதில்:**– அது வேறொன்றுமில்லை. அடுத்த நிமிடமே மறந்துவிடுவேன் என்பதை மறைவாக உணர்த்தும்வார்த்தைஜாலம்.

*ச.திலீப், வெள்ளாவத்தை.*

**கேள்வி:**– நகைச்சுவை நடிகர்களான வடிவேலுக்கும், விவேக்கும் ஏதும் வேறுபாடு உண்டா?

**பதில்:**– இடையில் அப்பிடி வேறுபாடு ஏதுமில்லை. வடிவேலின் வசனங்கள் அலட்டல். விவேக்கின் வசனங்கள் கழட்டல் அவ்வளவுதான்.

*ச.இன்பிரா, மட்டுகுளி.*

**கேள்வி:**–டியர் பித்தா! என் கணவர் அடிக்கடி தூக்கத்திலை சிரிக்கிறார். இதற்கு என்ன செய்யலாம்?



பதில்:–எதுவும் செய்யாதீர் பாவம் தூக்கத்திலாவது அவர் சிரிச்சிட்டுப்போகட்டும்.

*யா.மனோறாணி, நிலாவெளி.*

**கேள்வி:**– என் மகன் ஒருவன் படிப்பில் கவனம் கொள்ளாது களவு எடுப்பதிலேயே தீவிரமாக இருக்கிறான். மறைத்து ஒரு பொருளை ஓரிடமும் வைக்கமுடியவில்லையே! என்ன செய்வது பித்தா?

**பதில்:**– இதற்கு ஏன் கவலைப்படுகிறீர்? அவனுடைய பாடப்புத்தகத்துக்குள்ளே வைகிறதை வைத்துப்பாரும். அதைத் தொடவே மாட்டான்.

*த.வினிதா, யா/ம/மகா/வி*

**கேள்வி:**– அமைதியே உருவானவள் பெண் என்பது உண்மையா?

**பதில்:**– அப்படிச் சொல்லியே
காரியத்தை நிறைவேற்றிக்
கொள்வார்கள் ஆண்கள்
என்பது மட்டும் உண்மை.

*வி.சிந்து, உயிலங்குளம்.*

**கேள்வி:**– அண்ணா.... பித்து எனக்கு நீண்ட நாட்களாக ஓர் ஆசை. அதாவது நான் ஒரு சினிமாப்படத்திலாவது தலையைக் காட்ட விரும்புகிறேன். இது தப்பா?

**பதில்:**–தப்பில்லை..... ஆனால், சினிமாவில் தலையை மட்டும் காட்டி நடிகை ஆகமுடியாது தங்கச்சி.

*த.யுகேசன், கிளிநொச்சி.*

**கேள்வி:**– பித்தா ஆண்களைப் போன்று ஜீன்ஸ், ரீசேட் அணியும் தற்காலப் பெண்கள் இனிவரும் காலங்களில் வேட்டி, சாரம் கட்டுவார்களா?

**பதில்:**–இனிவரும் காலத்திலென்ன?
இப்போதே பல பெண்கள்
''ரைட்ஸ்கேட்'' என்ற பெயரில்
சாரம் கட்டிக்கொண்டுதானே
நடக்கமுடியாமல் நடக்கிறார்கள்.
வரவர இந்த உலகம்
கெட்டுப்போச்சு.
ஆண்கள் செய்ய வேண்டியதையெல்லாம் பெண்களும் செய்கிறார்கள்.

*த.அஜிதா, மல்லாகம்.*

**கேள்வி:**– அண்ணா.... பித்து நீங்கள் எழுதிய கவிதைஒன்று சொல்வீர்களா?

**பதில்:**– O... Yes.
தாயினில் வருகிறோம்
ஆயுளில் அழிகிறோம்
நோயினில் மெலிகிறோம்
பாயினில் நெழிகிறோம்
இறுதியில்
தீயினில் எரிகிறோம்.

*வி.விஜிமயூரா, யாழ்.பல்கலைக்கழகம்.*

**கேள்வி:**– பித்து..... எங்கே எடுத்துவிடும் ஒரு கடிஜோக்?

**பதில்:**–
ஒருவர்:– 5வருடத்துக்கு முன்னர்
என் மணிக்கூடு
நைல் நதிக்குள்ள
விழுந்திச்சு. ஆனால்
இப்பவும் அது ஓடிக்
கொண்டுதான் இருக்கு.
மற்றொருவர்:– என்ன மணிக்கூடா....
ஒருவர்:– இல்லைநைல் நதி.

*அ.மகேந்திரமோகன், பூநகர்.*

**கேள்வி:**– பித்தா சிரிக்கும் பெண்களை நம்பாதே என்கிறார்கள். சத்தம் போட்டுப் பேசும் பெண்களை நம்பலாமா? பதில் தரவும்?

**பதில்:**– பெண்ணை நம்பும். ஆனால் பேச்சை நம்பாதையும்.

*அ.றோசான், முத்தரிப்புத்துறை.*

**கேள்வி:**– அண்ணா பித்தா எனக்கு தோஷம் இருப்பதாகவும், திருமணம் ஆனால் அந்த தோஷம் இல்லாமல் போயிடும் என்றும் ஒரு ஜோசியர் சொல்கிறார். இதனை நம்பலாமா?

**பதில்:**– தம்பி...... எந்தத் தோஷம் இல்லாமல் போகுதோ எனக்குத் தெரியாது. ஆனால், உமது சந்தோஷம் மட்டும் போயிடும்.



*நி.மாறன், தன்னாமுனை.*

**கேள்வி:**– Dear பித்தா நான் என்ன பேசினாலும் இந்த நாடே கேட்டாகவேண்டுமென்று ஆசைப்படுகிறேன். அதற்கு நான் என்ன செய்ய வேண்டும்?

**பதில்:**– வெரி சிம்பில். டி.வி. அல்லது ரேடியோவில் செய்தி அறிவிப்பாளராக ஆகிவிடும்.

*க.அருணா, யாழ்பல்கலைக்கழகம்.*

**கேள்வி:**– நண்பா பித்து.... உம்மை ஒரு நல்ல மனிதர் என்று நினைத்தேன். சித்திரைப் புத்தாண்டு சுப வேளையில் கைவிசேஷம் வாங்கலாம் என எண்ணினேன். நீர் அதனைத் தவறாகப் புரிந்து விட்டீர். இந்த நினைப்பை இத்துடன் நிறுத்திக் கொள்ளும். பகல் கனவு காணாதையும்.

**பதில்:**– என்னை நல்ல மனிதரென்று உம்மை யார் நினைக்கச் சொன்னது?
சரி... சரி.... அருணா கோபிக்காதையும்.
அடுத்த ஆண்டு நான்
யாழ்ப்பாணம் வருவேன்.
அப்போ உமக்கு
நான் இரண்டையும்
சேர்த்து தருகிறேன்.
நான் இரண்டென்று சொன்னது!
இந்த ஆண்டுக்கும், வருகிற ஆண்டுக்குமுரிய கைவிசேஷத்தைத்தான்.



*வ.சசிகா, வந்தாறு மூலை.*

**கேள்வி:**– பணம் வந்தால் சிலபேர் தலை கால் தெரியாமல் நடக்கிறார்களே?

**பதில்:**– அப்ப... தலைக்கு ஷீபொலிசையும் கால் ஷூவுக்கு டையும் பூசுகிறார்கள் என்று சொல்லும்.

*கைவைத்தியர் இ.செல்வத்துரை, கோட்டைக்காடு.*

**கேள்வி:**– மகனே பித்தா. நாதஸ்வர வித்துவானுக்கும், வைத்தியருக்கும் ஒரு ஒற்றுமை சொல்லும் பார்ப்போம்?

**பதில்:**– இருவரும் சோதிச்சுப் பார்ப்பவர்கள்.
அவர் பீப்பியை சோதிச்சுப்பார்ப்பார்.
இவர் B.Pயை சோதிச்சுப்பார்ப்பார்.

*செ.சிந்துஜா, முழங்காவில்.*

**கேள்வி:**– டியர் பித்தா. காதல் செய்ய ஏற்ற இடம் மொட்டை மாடியா, பார்க்கா, பீச்சா எது சிறந்தது?

**பதில்:**– அது செய்ய இவைகளைவிட ஒரு சிறந்த இடம் இருக்கு. காதலிக்கிறவர்களைக் கேட்டுப்பாரும். நான் அது என்று காதலைத்தான் சொன்னேன்.

*ப.வேணுஜா, செங்கலடி.*

**கேள்வி:**– பித்துக்குட்டி உமது பதில்கள் சூப்பரோ சூப்பர். என்னுடைய இந்தக் கேள்விக்கும் ஒருபதில் சொல்வீரா?
சிலகவர்ச்சி நடிகைகள் முதல் படத்தோடேயே காணாமல் போகிறார்களே! அது ஏன்?



**பதில்:**– முதல்படத்திலேயே முழுக்க காட்டி விட்டால் அடுத்த படத்தில் காட்டுவதற்கு அவர்களிடம் என்ன இருக்கு?

*சந்தோ.மகேந், யாழ்ப்பாணம்.*

**கேள்வி:**– பித்து அண்ணா! அரலி விதையில் முளைத்த துளசிச் செடியாம் காதல். இது பற்றி?

**பதில்:**– பாருங்களேன். காதலே ''ஒனிங்'' காதலாப் போச்சு.

*சேனாதி, மானிப்பாய்.*

**கேள்வி:**–மனிதனுக்கு யானைக்கால் நோய் வந்தால் யானைக்கால் நோய் என்று சொல்லுகிறோம். இதே நோய் யானைக்கு வந்தால் எப்படிச் சொல்வது?

**பதில்:**– மனிதக்கால் நோய் என்று சொல்லலாம் தானே.

*ரூபி, அம்பலப்பெருமான் சந்தி*

**கேள்வி:**– மைடியர் பித்தா திருமணமான பெண்களை பொட்டில் அல்லது தாலிக் கொடியில் வைத்து அடையாளம் காணலாம். ஆனால் ஆண்களை எப்படி அடையாளம் காண்பது? அறியத்தரவும்?

**பதில்:**– அடையாளம் காண்பதற்கு ஓரிடம் இருக்கிறது. சொன்னால் பார்ப்பீரா? ஆண்களுக்கு முன்னால கீழேபாரும்.. கீழே என்று நான் காலைச் சொன்னேன். அதில் மெட்டி இருக்கும். இப்போதெல்லாம் யார் மெட்டி போடுகிறார்கள் என்று நீர் நினைப்பதும் விளங்கிறது.

*எஸ்.ரி.கஜன், வரணி.*

**கேள்வி:**– மைடியர் பித்தா. கட்டிய மனைவியை வீட்டிலே இருத்திவிட்டு கோவிலில் புதுக்கன்னிக்கு கச்சான் கொடுக்கும் ஆண்களைப்பற்றி?

**பதில்:**– பொதுவாக ஆண்கள் முதலில் கச்சான் கொடுப்பார்கள். பின்னர் அல்வா கொடுத்திட்டுப் போயிடுவார்கள். இது தானே வழமை.



## பித்தனின் கேள்வி

கேள்வி:– அன்றைய காலப்பாடல்களிலா அல்லது இன்றைய காலப் பாடல்களிலா ஆபாசம் கலந்துள்ளது?

## வாசகர் பதில்கள்

*த.அஜிதா – மல்லாகம்.*

அக்காலத்து பாடல்களின் வரிகளில ஆபாசம் இல்லாமல் இல்லை. அது இலக்கிய சுவையோடும், மறைமுகமாகவுமே ஆபாசத்தை வெளிப்படுத்தியது. ஆனால், இன்றைய காலத்துபாடல்கள் கேட்ட கணத்தில் விளங்கிக் கொள்ளக் கூடியதாகவே உள்ளது.

*வி.விஜிமயூரா – யாழ்.பல்கலைக்கழகம்.*

அக்காலபாடல்களைவிட இக்காலப்பாடலிலே ஆபாசக்கருத்துக்கள் அதிகமாக உள்ளன. 100 பாடல்களில் 95 பாடல்களாவது ஆபாசம் இல்லாது இப்போது வெளியாவதில்லை என்பது எனது கருத்து.

*இளவேனில் – யாழ்ப்பாணம்.*

இரண்டிலும் அன்றைய காலப்பாடல்களில் கலந்துள்ள ஆபாசம் அறிவுள்ளவர்களுக்கு மட்டுமே விளங்கும். இன்றைய காலப் பாடல்களில் கலந்துள்ள ஆபாசம் அறிவு இல்லாதவர்களுக்கும் விளங்கும்.

*த.சி.ரஞ்சன் – நாவலப்பிட்டி*

அக்காலப் பாடல்களில் ஆபாசம், உணர்வு பூர்வமானது. ரசிக்கக் கூடியது. ''பளிங்கினால் ஒரு மாளிகை பருவத்தால் மணிமண்டபம் உயரத்தில் ஓர் கோபுரம் உன்னையழைத்தது வா''

ஆனால் இக்காலப் பாடல்களில் ஆபாசம் அப்பாவியையும் உஷார்ப்படுத்தும் ஆக்ரோசமான ஆபாசம். ''கட்டிப்பிடி கட்டிப்பிடிடா கண்டபடி கட்டிப்பிடிடா'' இதற்கு மேல் வேண்டாமே.

*ப.தீபன் – வரணி.*

இன்றைய காலப் பாடல்களிலே ஆபாசக் கருத்துக்கள் அதிகமாக உள்ளன. எடுத்துக்காட்டாக எத்தனையோ பாடல்களை சொல்லலாம் குறிப்பாக.

"பெண்ணே உனது மெல்லிடை பார்த்தேன் அடடா பிரம்மன் கஞ்சனடி.

சற்றே நிமிர்ந்தேன் தலைசுற்றிப் போனேன்.

ஆஹா அவனே வள்ளலடி.

"ஒரு வெள்ளை மழை இங்கு பொழிகிறது

ஒரு கொள்ளை நிலா உடல் நனைகிறது

சொல்லாத இடம் கூடக் குளிர்கின்றது

மனம் சூடான இடம் தேடி அலைகிறது.

இப்படிப்பட்டியல் இட்டுக்கொண்டே போகலாம்.

பித்தன் மீது பித்துக் கொண்ட வாசகர்களுக்கு:–

நீங்கள் கேட்கும் கேள்விகளுக்கு பித்தன் பதில் தருவார். பித்தன் தரும் கேள்விக்கு நீங்களும் பதில் அளியுங்கள்.

ஐந்து தரமான —
குறும்பான —
யதார்த்தமான —
பதில்கள் பிரசுரிக்கப்படும். பதில்களை ஓகஸ்ட் 01 திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்க வேண்டும்.



**கேள்வி:**– பொதுநலம் என்றால் என்ன? சுயநலம் என்றால் என்ன?

**பதில்:**– எங்கும் விழவேண்டும் என்று பெய்யும் மழை பொது நலம். ஒருவன் தான் மட்டும் நனைந்திடக்கூடாது என்று குடை பிடிப்பது சுயநலம்.

இந்தக் கேள்விக்கு பித்தன் அளித்த பதில் மேலே. நீங்கள் பதில் அனுப்ப வேண்டிய முகவரி.

பித்தனுக்கு எங்கள் பதில்கள்,
சுடர்ஒளி வார இதழ்,
85,ஜெயந்தமல்லிமாராய்ச்சி வீதி,
கொழும்பு – 14.



தனுஷ் – துலானி



சூர்யா



தலைவாசல் விஜய்



'அறிவு மணி' முரளி– ...

## உலகம் சுற்றும் ஜாக்கிசான்!

'அரௌண்ட் தி வேர்ல்ட் இன் 80 டேஸ்' அக்ஷன் பிரியர்களுக்காக ஜாக்கிசான் கொண்டு வரும் த்ரில் விருந்து இது. ஒரு நோக்கத்துக்காக 80 நாட்களில் உலகத்தை சுற்றி வருவது தான் கதை. அப்போது நடக்கும் சுவாரஸ்யமான சம்பவங்களே இப்படம். ப்ரெங்க் இயக்கியுள்ள இப்படம், ஜூலை 30 ஆம் தேதி திரைக்கு வருகிறது.

## ரெடியாகிவிட்டது 'அழகிய தீயே!'

பிரகாஷ்ராஜ் தயாரிக்கும் அழகிய தீயே இம்மாதம் திரைக்கு வருகிறது. பிரசன்னா,நவ்யா,எம்.எஸ்.பாஸ்கர், ஜெயவர்மா, பிரமிட் நடராஜன், பெரியார்தாசன், தேவதர்ஷினி, ஹரீஸ் மூசா இதில் நடிக்கின்றனர். ஒளிப்பதிவு – ஸ்ரீனிவாஸ். இசை–ரமேஷ் விநாயகம். இயக்கம்–ராதா மோகன்.

## வைரமுத்து குடிக்கும் கமல்காபி

கமல் சூப்பராக காபி போடுவாராம். சொல்லி பூரிப்படைகிறார் கவிஞர் வைரமுத்து. அதைக் குடிக்கவே நான் அடிக்கடி கமல் வீட்டுக்குச் செல்கிறேன் என்கிறார்.

## அய்யய்யோ பிடிச்சிருக்கு!

நடிகர் சங்கத்தின் பொதுக்குழு கூட்டத்துக்கு வந்திருந்தார் நடிகர் மயில்சாமி. அங்கும்,இங்கும் என பிஸியாக அலைந்து கொண்டிருந்தார். ''என்ன சார், டிவியில் புதிய தொடரில் நடிக்கிறீர்களாமே?'' எனக் கேட்டோம். சினிமாவில் நடிக்கவே டைம் சரியாக இருக்கு. ஜெயா டி.வி.யில் காமெடி ஷோ பண்றது ரொம்பப் பிடிச்சிருக்கு. நான் எங்கே போனாலும் அந்த ஷோ பற்றித்தான் மக்கள் பேசுகிறார்கள் என்கிறார் சாமி.

சண்டைப்ப...
நிர்வாகத்தை...
பா.விஜய், ஷ...
இந்தப்ப...
பெற்றுள்ளா...
கதை வசன...
எழுதியிருக்...
சென்னை...
வெளிநாட்டு...
அம்சங்கள் க...



ஷார்மி

# கிளாமருக்கு 'நோ ப்ராப்ளம்'

நாற்பத்தெட்டு கிலோ இளமை அணுகுண்டு. பார்த்ததும் நெஞ்சுக்குள் வெடிக்கும் அழகு. 'செவ்வேல்' படத்திற்காக மும்பையிலிருந்து அள்ளிக் கொண்டு வந்திருக்கிறார்கள்.

'ஜெய் ஆகாஷுடன் நடனம் ஆடிக்கொண்டிருந்த மிஷாவின் உண்மையான பெயர் மிஷாஷா. சினிமாவுக்காக 'ஷா' வை நீக்கி விட்டு மிஷா ஆகிவிட்டார். இவர் தமிழ் 'ப்ரெண்ட்ஸ்' படத்தின் இந்தி ரீ–மேக் 'தோஸ்த் தோஸ்தி தோஸ்தானா'வில் நடித்திருக்கிறார். படம் ஏமாற்றி விடவே மும்பைக்கு குட்பை சொல்லிவிட்டு கோலிவுட்டுக்கு பிளைட் ஏறிவிட்டார்.

மிஷாவின் அம்மா ஒரு பேஷன் டிஸைனர். ஆகவே, ஏகப்பட்ட புகைப்படங்களை சினிமாக் காரர்களிடம் கொடுத்து வைத்திருக்கிறார். அதைப் பார்த்துத் தான் 'செவ்வேல்' வாய்ப்பு மிஷாவிற்கு கிடைத்திருக்கிறது.

எல்லா மும்பை நடிகைகளையும் போல இவரும் தமிழர்களை வாய் ஓயாமல் புகழ்கிறார். நல்லவர்கள், வல்லவர்கள், மரியாதையானவர்கள் (சுருக்கமாக இளிச்சவாயர்கள்) என்று சேர்டிபிகேட் தருகிறார்.

குஷ்பூ,சிம்ரன் ரேஞ்சுக்கு புகழ் பெற விரும்பும் மிஷாவுக்கு பிடித்த நடிகர் ரஜினிதானாம். கிளாமரைப் பற்றி பேச்சு எடுத்தால் 'நோ ப்ராளம்' என்கிறார் அதிரடியாக.''கிளாமர், படத்துக்கு ரொம்ப முக்கியம் கேரக்டரைப் பொறுத்து கிளாமர் பண்றது தப்பில்லை. இன்னைக்குள்ள சூழல்ல கிளாமராக நடித்தால் ஈஸியா பெயர் வ்ாங்கிடலாம்'' என்று சொன்ன மிஷாவின் கண்களில் மின்னல் அடித்தது.

தமிழ் ரசிகர்களின் தூக்கத்தைக் கெடுக்க மிஷா தயார் என்பதற்கான சிக்னல்தான் அது.





அமேஷா

## ஹோட்டல் சந்திரிகா

ஒரு கால கட்டத்தில் கொடி கட்டிப் பறந்த அக்கா– தங்கை நடிகைகளில், அக்கா நடிகை திருமணத்துக்குபின் மீண்... சினிமாவுக்கு வந்துவிட்டார்.

தங்கை நடிகை முழுக்க குடும்ப் பெண்ணாக மாறிவிட்டார். சந்திரிகா என்ற அவருடைய ஒரிஜினல் பெயரில் கேரளா... ஹோட்டல் ஒன்று நடத்தி வருகிறார்.

## எதை எப்படி அமுக்கலாம் குட்டியின் டைரியில்........

குட்டி என்ற அடைமொழியுடன் அறிமுகமாகியுள்ள புதுக் கதாநாயகி கைவசம் சின்னதாக ஒரு டைரி வைத்து இருக்கிற... அதில் இங்குள்ள தமிழ் கதாநாயகர்கள் ஒவ்வொருவரைப் பற்றியும் குறிப்புகள் உள்ளன.

கதாநாயகர்களின் சுபாவம், அவர்களின் விருப்பங்கள், வசதி – வாய்ப்புகள் ஆகிய விவரங்கள் அ... குறிப்பிடப்பட்டுள்ளன.

எந்தக் கதாநாயகர்களை எப்படி அமுக்கிப் பிடிக்கலாம் என்ற விவரத்தை டைரியைப் பார்த்து அவ்வப்போது தெரி... கொள்வாராம் குட்டிநடிகை.

## கிரணின் சண்டித்தனம்

புதுசு என்ற அர்த்தத்தில் ஆங்கில பெயரைக் கொண்ட அந்தப் படம், இரண்டு வாரங்களுக்கு முன்பே திரைக்கு வரவேண்... படம். அதை வர விடாமல் சிக்கல் ஏற்படுத்தியவர் ஒரு நடிகை. பெரிய தொப்பைக்கும், பெரிய வாய்க்கும் பெயர் போன கிர... தான் அந்த நடிகை. இவர் அந்தப் படத்தில் ஆறு நாட்கள் வேலை செய்ததற்காக ஆறு லட்சம் சம்பளம் கொடுக்கப்பட்டது. இன்னும் நான்கு லட்சம் வேண்டும் என்று கிரண் பஞ்சாயத்தைக் கூட்டினார். அதுவரை படத்தை ரிலீஸ் செய்யக் கூடாது என்று கொடி பிடித்தார். பாக்கி பணத்தை கொடுத்த பிறகுதான். கையை கீழே இறக்கினார் அம்மணி.

## 'நளதமயந்தி'யோடு மாதவன் ஹிந்திக்கு போனார்....!

தமிழில் வெளிவந்த 'நளதமயந்தி' படம் இந்தியில் 'பாவர்ச்சி' என்ற பெயரில் தயாராகிறது. இதில் மாதவன் கதாநாயகனாக நடிக்கிறார்.




கோபிகா
பரத்
'4 ஸ்டூடன்ஸ்'



அபிநயஸ்ரீ



ரஜினி



விஜய்





தனுஷ்





முரளி– மீரா

ஆகாஷ்– ப்ரணதி

# 'குருதேவா'

ஸ்ரீசெல்வ முத்துக்குமரா மூவிஸ் பிரைவேட் லிமிடெட் சார்பில் தயாராகும் படம் குருதேவா. இதில் நகரத்து ரவுடியாக ஜெய் ஆகாஷ் நடிக்க அவரது ஜோடியாக கம்பீரம் புகழ் ப்ரணதி நடிக்கிறார். மற்றும் நாசர், இளவரசு, தாமு, ரியாஸ்கான், வையாபுரி, முத்துக்காளை திருமூர்த்தி ஆகியோருடன் மும்பை முன்னணி கதாநாயகி ஒருவரும் முக்கிய பாத்திரத்தில் நடிக்கிறார்.

ஆர்.மதி ஒளிப்பதிவு செய்ய வி.டி. விஜயன் எடிட்டிங்கைக் கவனிக்கிறார். சபேஷ்– முரளி இசை அமைக்கின்றனர். விஜய் முருகன் அரங்கம் நிர்மாணிக்க ஜாக்குவார் தங்கம் சண்டைப்பயிற்சி அளிக்கிறார். சிவசங்கர் –அசோக்ராஜா நடனக்காட்சி அமைக்கின்றனர். என்.ராதா கிருஷ்ணன் தயாரிப்பு நிர்வாகத்தைக் கவனிக்கிறார். மல்லியம்பட்டி மாதவன் தயாரிப்பு மேற்பார்வை செய்கிறார். பிறைசூடன், விஜய்சாகர், முத்து விஜயன், பா.விஜய், ஷண்முகசீலன் ஆகிய ஐந்து பேர் இணைந்து பாடல்கள் எழுதுகின்றனர்.

இந்தப்படத்தின் கதை திரைக்கதை வசனம் எழுதி ஜாபர் இயக்குகிறார். இவர் இயக்குனர்கள்.பிரதாப் போத்தன் வெற்றி பெற்றுள்ள நட்சத்திர தாலாட்டு படத்தின் கதை திரைக்கதை வசனம் எழுதியவர். மேலும் கார்த்திக் நடிக்கும் மனதில் படத்துக்கு கதை வசனம் எழுதியுள்ளார். மலையாளத்தில் திரைக்கு வரவிருக்கும் 'பரயாம்' படத்குதுக்கு கதை, திரைக்கதை எழுதியிருக்கிறார்.

சென்னை பாண்டிச்சேரி ஊட்டி ஆகிய பகுதிகளில் காட்சிகள் படமாகின்றன. அனைத்துப் பாடல் காட்சிகளும் வெளிநாட்டில் படமாக்கப்படுகின்றன. மென்மையான காதல் அதிரடி அக்ஷன், காமெடி சென்டிமென்ட் ஆகிய ஜனரஞ்சக அம்சங்கள் கலந்த படமாக குருதேவா உருவாக்கப்படுகிறது.



ரீமாசென்

## கிலோ குறைந்ததால் கிலு கிலு ஆட ஆசை!

குருநாதர் கேட்டுக் கொண்டதால் மும்தாஜ் நடிகை பட்டினி கிடந்து உடல் எடையைக் கணிசமாகக் குறைத்துக் கொணடார்.

அவருடைய எடை 76கிலோ. அதை 60கிலோவாக இப்போது குறைத்துக் கொண்டிருக்கிறார் மும்தாஜ். மறுபடியும் மல... மல... என்று ஆடலாமீ என்ற ஆசை போலும்!



## நள்ளிரவில் கிளம்பும் வதந்திகள்

இந்த ஆட்டம் போதுமா... இன்னும் கொஞ்சம் வேணுமா....? என்று ஆட்டம் போட்ட மூன்றெழுத்து நடிகை பற்றி திடீர் திடீர் வதந்திகள் பரவி திடுக்கிட வைக்கின்றன.

விஷம் குடித்துவிட்டார் என்று ஒரு வதந்தி. விபத்தில் போய்விட்டார் என்று இன்னொரு வதந்தி. இவ்வாறுநள்ளிரவு நேரங்களில் யாரோ கிளப்பி விடுகிறார்கள். வதந்தி பரப்புபவர்கள் யார்? என்பதை கண்டுபிடிக்கும்படி, தனியார் துப்பறியும் நிறுவனத்தின் உதவியை நாடி இருக்கிறார் அந்த நடிகை.

# சூரியன் எப்.எம். இல் வளரும் 'காதல் எப்.எம்.'



அபிராமி

எஸ்.வி.எம். புரொடக்ஷன்ஸ் தயாரிப்பில் 'பாய்ஸ்' மணிகண்டன், ஷிவாணி சிங் நடித்து வரும் காதல் எப்.எம் படம் திட்டமிட்டபடி வேகமாக வளர்ந்து படப்பிடிப்பு முடிவடைந்து இறுதிக் கட்டப்பணிகள் நடந்து வருகின்றன.


இதுவரை எந்தப் படமும் எடுக்கப்படாத தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இப்படத்தின் படப்பிடிப்பை நடத்தியுள்ளனர். இரண்டாயிரம் ஏக்கர் பரப்பளவில் தூத்துக்குடியில் அமைந்துள்ள உப்பளங்களில் பாடல் காட்சி எடுக்கப்பட்டுள்ளது. பாண்டிச்சேரி ஆரோவில் மற்றும் தூத்துக்குடி துறைமுகம் ஆகிய இடங்களில் சிறப்பு அனுமதி பெற்று படப்பிடிப்பு நடத்தியுள்ளனர். சென்னையை புதிய கோணத்தில் காட்டியுள்ளனர்.

சூரியன் எப்.எம். வானொலியில் கண்ணியமாக பணி புரியும் இளைஞனுக்கும், கல்லூரி மாணவிக்கும் வானொலி நிகழ்ச்சி மூலம் ஏற்படும் காதலை மார்டனாக சொல்லியுள்ளனர். வானொலி நிகழ்ச்சி மூலம் தனக்குக் கிடைத்த காதலி பேரழகி என்பதை அறிந்ததும், தாழ்வு மனப்பான்மையில் கதாநாயகன் நேரில் சந்திக்காமலேயே, காதலை எப்படி டெவலப் செய்கிறான் என்பதை வித்தியாசமான காட்சியமைப்புகளில் இயக்குனர் படமாக்கியுள்ளார்.

இந்தப்படத்தில் கதாநாயகனாக 'பாய்ஸ்' மணிகண்டன், ஷிவானி சிங் நடிக்க இவர்களுடன் அரவிந்த், கருணாஸ், செம்புலி ஜெகன், அஜய்ரத்னம், அருள்மணி, இளவரசு, காந்தராஜ், அனுமோகன், பாலு ஆனந்த் மற்றும் ஜி.ஜி. ஷில்பா, மீனாட்சி ஆகியோர் நடிக்கிறார்கள்.

சூரியன் எப்.எம். பின்னணியில் எடுக்கப்படும் காதல் எப்.எம். படத்தின் படப்பிடிப்பை திருச்சி, பெரம்பலூர், பாண்டிச்சேரி, தூத்துக்குடி காரைக்குடி மற்றும் சென்னையைச் சுற்றியுள்ள முக்கியமான இடங்களில் நடத்தியுள்ளனர். கதை திரைக்கதை வசனம் எழுதி வீ. ஜெயப்பிரகாஷ் இயக்குகிறார். எஸ்.வி.எம்.புரொடக்ஷன் சார்பில் வீ. மகேஷ்வரன் தயாரிக்கும் இப்படம் இம் மாதம் திரைக்கு வருகிறது.

# முரளி, பாக்கிராஜ் நடிக்கும் 'ஒளி'



விண் இண்டர்நஷனல் ஏன் பட நிறுவனம் தயாரித்துக் கொண்டிருக்கும் படம், 'ஒளி'. இந்தப் படத்தில் முரளி கதாநாயகனாக நடிக்கிறார். கதாநாயகியாக பூனம் நடிக்கிறார். முக்கிய வேடத்தில் கே.பாக்கிராஜ் நடிக்கிறார். பல வருடங்களுக்கு முன்பு 'விதி', 'நான் சிகப்பு மனதன்' ஆகிய படங்களில் கௌவுரவ வேடத்தில் நடித்தார் பாக்கிராஜ். நீண்ட இடை வெளிக்குப் பின் அவர் 'ஒளி' படத்தில் முக்கிய வேடத்தில் நடிக்கிறார்.





வடிவேலு



சிம்ரன்

# கவிதைப் புனல்

## ஏக்கம்

பிரியும் தருணம்
பற்றிய விரல்களை
விடுவித்து
அழுத்தமாய் தலைதடவி
அணைத்தப்படியே.....
அம்மா சிந்திய அந்த
ஒரு துளி கண்ணீர் –
என்மேல்
சிதறி சில்லிட்ட போது...
ஏக்கத்துடன்
தொலைத்துவிட்ட
சின்ன விருப்பங்கள்....
அண்ணார்ந்து பார்த்து
வியந்த
பெரிய வீடுகள்....
ஒரு முறையேனும்
அனுபவிக்கத்துடித்த,
கார் பிரயாணம்.....
விரும்பி எடுத்தும்,
விலை கண்டு
வேண்டாமென்ற
புது சட்டை....
சுவைகாணத் துடித்த
பெயர் தெரியா
உணவுகள்....
எல்லாமே..... எல்லாமே......
வேண்டாமென
தோன்றியது.

*செல்வராஜா பிரமிளா,*
*ஊவா கட்டவளை.*

## போதுமடி...! பெண்ணே!

வஞ்சி உன் காதில்
வஞ்சனைகள் இல்லாது.
நெஞ்சத்தில் உள்ளதை
மனதார சொல்லும் போது!
பாவமடி இவன்...!
வஞ்சனைகள் இல்லாதவள்
வாய் மொழியில்
பொய்யில்லை!
கஞ்சத்தனம் புரியாதவன்
கடைசிவரை பஞ்சமில்லை!
போதுமடி பெண்ணே!
கற்பனைகளை கடலாக்கி
மனதை அலையாக்கி
கண்களோரத்தை நீராக்கி
போதுமா? நீ நினைத்தது
நாடகங்கள் நடிப்பதற்கு
நீ போட்ட வேசம்
சூப்பரிலும்... சூப்பர்...!
நீ செய்தது பிழையல்ல
உன்னைக் காண வைத்த
அந்த ஆண்டவனே
பிழையானவன்!

*என். வசந்தன்(ஜனா),*
*முள்ளியவளை.*

## சோகம்

கன்னத்தில் முளைக்கும்
கரிய தாடியல்ல
இதயத்தில் சுரக்கிற
கண்ணீர்த்துளி.

## மனிதன்

இன்பத்தை அனுபவிக்கும்
இனிய ஜீவனல்ல
நரகத்தை அனுபவிக்கும்
பெரிய பாவியும்கூட.

## மூளை

மறக்க முடியாத இன்பத்தையும்
மறக்க முடியாத துன்பத்தையும்
பதிவாக்கிக் கொள்ளும்
அசைக்கமுடியாத பதிவாலயம்.

## தாடி

காதலில் தோற்றவர்
கன்னத்தில் கட்டியெழுப்பும்
கரிய தாஜ்மஹால்.

## சிரிப்பு

மகிழ்வின் எல்லையை
தொட்ட எம்மனம்
பிறருக்கெடுத்தியம்பும்
பரிசுத்த ஒலி.

*சி.விதுரன், வேரவில்.*

## அழகுப் பெண் அல்ல ஆயுதப்பெண்

பெண்ணே – நீ
அழகுப் பெண்ணல்ல
ஆயுதப் பெண்
உனது கண்களோ
வெளிச்சக்கூடு
காது அதன் திசை காட்டி
மூக்கு குறி காட்டி
பற்களோ கேரல் கோமாண்டோ
ரவைக் கூடு
கைகளோ ஏ.கே.47
விரல்கள் ஏ.கே.ரவைகள்
உனது இடையே லிங்ரவைகள்
கால்கள் ஆர்.பீ.ஜீ ஏவுகணை
கால் பாதம் கட்டளை
அதிகாரிகள்.
மொத்தமாக நீ அழகுப்
பெண்ணல்ல
அக்கினிப் பெண்.

*செம்முகிலன், வட்டக்கச்சி.*

## தொலைத்துவிட்டு தேடுகின்றேன்

என்னவளுக்கு.....!
ஒவ்வொரு இரவுகளிலும்
உன் பெயரை என்
உதட்டில்
உச்சரித்திட
எத்தனிக்கின்றேன்.
பெயர் ஒலித்திடும் முன்
விழித்திரையால்
வடிக்கின்றேன்
கண்ணீரை உன்னை
சந்தித்த
ஒவ்வொரு நிஜ
நிகழ்வுகளையும்
நான் – ஒவ்வொன்றாய்
மீளாய்வு செய்கின்றேன்.
அவை எம் வாழ்வில்
பொறிக்கப்பட
வேண்டிய ஆளமாக
தோண்டப்பட்ட
அத்திவாரச் சுவர்கள்.
பௌர்ணமி நிலாவை
நடுவானில் அமர்த்தி –
உன் இதமான
முகத்திரையை
கண்ணோடு
கண்டிட நினைத்தேன்
கரும் மழை மேகம்
சூழ்ந்திட தவித்தேன்.

*விநாயகமூர்த்தி*
*உதயசங்கர், மாங்குளம்.*

## தவிப்புகள்

கண் அயர்ந்து
காலமாச்சு?
உன் நினைவு நிமிடம்
தோறும்
நெஞ்சைக் கீறும்
வாளாச்சு?
தூங்க நினைத்துக்
கண்மூடி
தூக்கத்தால்
ஏமாற்றப்பட்டேன்.
என் மனசின் தாகங்கள்
என்னோடு துடிக்கின்ற
ஏக்கங்கள்
உனை வந்து சேராதா?
என்று – நான்
தினந்தோறும்
தின்று
தொலைக்கப்பட்டேன்.
உன் கனவுகளால்...
விழியோரம் வழிகின்ற
நீர்த்துளியும் உன் பெயர்
சொல்வதனால்
கண்ணீரும் எனக்கு
கசக்கவில்லையடா.

*மா.சிவசோதி,*
*கரவெட்டி மேற்கு.*

## தேர்தல் தோல்வி

வாழ்க்கை அரசமைக்க
தேர்தல் நடந்தது.
நட்புக்கட்சியும்
காதல் கட்சியும்
போட்டியிட்டன.
நான் காதல்கட்சி
ஆளும் கட்சியாவதற்கு
ஒரேயொரு வாக்கு
"சம்மதவாக்கு"
அதுவே எனக்கு உயிர்வாக்கு.
வாக்களிக்க வந்தவள் – எனக்கு
வாழ்வளிப்பாள் என
நம்பினேன்.
காதலுக்கே வாக்கிடு என
கசிந்துருகி விம்மினேன்.
நட்புக்கு வாக்கிட்டு – என்னை
எதிர்க்கட்சி ஆக்கிவிட்டாள்.

*சி.செம்பருதி,*
*உடையார்கட்டு.*

## மூளியான மணிப்பொறி

காலச் சுழற்சியும்
அதில்
கட்டுண்ட சேவகரும் – தான்
கையாட்களே என்று....
கடிகாரம்
கர்வங் கொண்டதுண்டு!

ஆனால்,
கால – நேரக் கணிப்பைக்
கச்சித மாகக்காட்டாத
காரணமோ... என்னவோ...
அதன்
கால்கள் மூன்றும்,
சுழற்றப்பட்டுவிட்டன!
ஆயினும்
கடிகாரம் இயங்குகின்றது!

நாழிகை காட்டும்
நாடி நரம்பறுந்து,
மூளியான நிலையிலும்;
அந்த மணிப்பொறி
மமதையுடன் கூறும்;
"ஆயிரங் கை கொண்டு
ஆரார் மறைத்தாலும்,
ஆதவன் மறையாது"
என்று!

இந்நிலையில் –
கட்டியங் கூறும்
கருத்துக் கணிப்பீடென்ன....
கடவுள் தந்த
முன்னறிவிப்பா...?
கணக்கைத் தப்பாக்கக்
கணித்தறிந்தவர்களும்
கால நேரத்தையே
கடித்து கொள்வதுண்டு!
எது.... எப்படியோ....?
மணிப்பொறி மட்டும்
மூளியான நிலையிலும்
முடமாய் இயங்குகின்றது!
ஆனால்,
நேரந்தான் தெரிவதில்லை.

*அனல் அக்தர், ஏறாவூர்.*

## கச்சேரி லேடி

சந்தனப் பசு என அவளை நான் நாடி
காலைவேளைதான், அவள் புவிமுகமூடி
சுத்தமாய் தெரிந்ததே என் கண்முன்னாடி
சிலகாலம் "குதிரைவதி"யுடன் கூடி
சிலையாமென் அவள் பழி சூடி
சிறும்பாம்பிலும் கொடியதொரு கேடி – அவள்
சீசனில் போகிய கச்சேரி லேடி.

*கு.கீர்த்தி, தண்ணீரூற்று.*

## வாசிப்பாயா?

நான் கட்டிலில் நீயும் கட்டிலில்
நான் மரண நிலையில்
நீ ஜனன நிலையில்
என் உயிர் பிரிந்தது
உனக்கொரு உயிர் பிறந்தது
என் இறுதி கண்ணீர் துளியின் வரி.....
உன்னைப் போல் உன்பிள்ளையையும்
வளர்க்காதே...!
இன்னுமொரு உயிர் மடியும்.

*க.விஜயதாஸ், வவுனியா.*

## பசுமையின் வரட்சி

இரவின் கலவையால்
வானம் பிரசவிக்கும்
பாலுக்கழாத
சூரியக் குழந்தை....

விடியலின் அறிவிப்பை
சங்கீதமாக்கும்
சம்பளம் வாங்காத
சிறகுகள்......

மாலையில் சருகாடும் போது
புன்னகைக்கும் பூக்கள்

ஓய்வூதியமின்றி
வீசிக்கொண்டிருக்கும்
காற்று......
எங்கு விழுகின்றோம் என்ற
எதிர் பார்ப்பின்றி
பசுமை பரப்பும் மழைத்துளி.

துளைத்தெடுத்தாலும்
துன்பப்படுத்தினாலும்
துளியேனும் கோபப்படாத
பூமி.

ஓ மனிதா..?
மரணம் வரை சகிக்க
முடியாத சச்சரவுகளுடன்
நீ மட்டும்.....!!!

*அ.பிரியன், கிளிநொச்சி.*

## கனவாக

தூரத்தில்
சொந்தங்கள்
இருந்தும் – என்
தூக்கத்தில்
சந்திக்கிறேன்
தினந்தோறும்.
கனவாக.....

*சஜிந்தன்.இன்சிரா,*
*மல்லாகம்.*

## ஏமாற்றம்

சுடர் ஒளியின்
பெண் பகுதியை
வாரா வாரம் அலசி
ஆராய்வேன்.
எதற்காக?
உன்
செம்பட்டைக்கூந்தலை
கறுக்க வைக்க – நல்ல
மருந்து கிடைக்குமென.
ஆனால்......
சுடர்ஒளி என்னை
ஏமாற்றவில்லை.
உன் போலன்று.

*வ.செல்வன்,*
*புதுக்குடியிருப்பு.*

## முள்!

என் காலில்
முள் குத்தியது!
பிடுங்கி எறியத்தான்
மனதில் பயம்!
முள்ளாய் – நீ
கடிதம் எழுதுகிறாய்!
உன்னைப் பிரிய
மனம் இடம்
கொடுக்கவில்லை!
ஆனாலும் –
வலிக்கிறது இதயம்!
முள்ளை நிச்சயமாக
எடுக்கத்தான் வேண்டும்!
என்றெல்லாம்
'டொக்டர்' அறிவுரைகளை
கூறுகிறார்கள்.
என் பெற்றோரின்!
இரத்த துணைகளை
உதிர்த்து விட்டுவிடவும்
துணிந்து விட்டேன்.
முள்ளே –
உன்னைத்தை தவிர.....

*வ.அபியா, இராஜகிரிய.*

## யாழாக

தந்தி அறுந்து கிடந்த
யாழுக்குக் கம்பி
போட்டு வைத்தது சமாதானம்.
சுருதியும் லயமும் சுக்குநூறாய்
கிடந்ததென்று நாம்புகளை
இறுக்கியது இனக்குழுக்கள்
இன்று.........
யாழ் யாழாக மீட்டப்படுகிறது.
நம் பாணர்களால......

*ஜே.சுபாஷினி, நல்லூர்.*

## மனசெல்லாம் நீயாக

நிகழ்ந்தவை
நிகழ்பவை எதுவுமே
நினைவிலிருப்பதாய்
நினைவில்லை – எனக்கு
மனமேறும்
நினைவெல்லாம்
நீயாகிப்போனதால்.

*யா.வாசுகி.*

## நீ தான்

உனக்கு பிடிப்பது
என் கவிதைகள்
தான் என்று
எனக்குத் தெரியும்.
ஆனால்,
என் கவிதைகளை விட
எனக்குப் பிடிப்பது
நீ தான் என்று
உனக்குத் தெரியாதா?

*பா.யசோதா, உரும்பிராய்.*

## சிறைவாச நினைவு

நான் நிரபராதி என்பதை
நன்றாகவே மறந்துவிட்டேன்
ஏனெனில்? – என்னை
சிறையிலிட்டு
சித்திரவதை செய்து
சின்னாபின்னப்படுத்தி
சிரிப்பையே மறக்கச் செய்தவர்
நீ குற்றவாளிதான் – என
அடித்துக்கூறி அடித்துக்கூறி
அதனையும் மனதில்
பதிய வைத்துவிட்டார்கள்.
இப்பொழுதுதான் எனக்கு
எல்லாமே புரிகிறது.
எப்போதோ நான்
விடுதலையானாலும்,
என்றும்சிறைவாசநினைவுகள்
சிதைந்து போகாமலிருக்கும்.

*வேணாவிலூர் மு.ரவி,*
*புதுக்குடியிருப்பு.*

## தேடல்

மரத்தை வெட்டிக்
களைத்தவன்
சுட்டெரிக்கும் வெயிலில்
தேடுகின்றான்
மரத்தடி நிழலை.

*க.சாதனா, வள்ளிபுனம்.*

## காதல்

என்னை நானே அறியாமல்
எனக்குள் நீயும் –
உன்னை நீயே அறியாமல்
உனக்குள் நானும்
நம்மை அறியாமல் எம் சுவாசக்
கூட்டில் ஜனனமாகிறது.

*யோ.தர்ஷன், சாவகச்சேரி.*

## அதிர்ச்சி

அவன் மின்னலாய்ப் பார்த்தான் – என்
மனதில் இடி விழுந்தது.
அவன் கனிவாய்ச் சிரித்தான் – என்
இதயம் அவன் காலடியில் விழுந்தது.
அவன் அருகே வந்தான் – என்
கன்னத்தில் அறை விழுந்தது.
அதிர்ச்சியில் திரும்பினேன் – என்
அண்ணன் அருகில் நின்றான்.

*டா.அனிற்றா, திருநகர்.*

# கேள்விக்குறியாக இருக்கும் திருமலை அன்பு இல்லம்

திருகோணமலையில் அநாதைச் சிறார்களை பராமரித்து வருகிறது 'அன்பு இல்லம்'. தற்போதைய சம்பவங்களினால் இதன் நிர்வாகப் – பராமரிப்பு கேள்விக்குறியாகி இருக்கின்றது.

சிறுவர் துஷ்பிரயோகம் என்ற குற்றச்சாட்டின் பேரில் சந்தேகத்துக்குரிய அன்பு இல்லப் பணிப்பாளர் எஸ்.சுந்தரலிங்கம், அவருக்கு உடந்தையக இருந்தார் என்ற வகையில் சுந்தரி அம்மா ஆகியோர் பொலிஸரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். சுந்தரி அம்மா தற்பொழுது பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார்.

இந்த கைதுச்சம்பவமும் சில பின்னணித் தகவல்களுமே அன்பு இல்லத்தின் எதிர்க்காலம் கேள்விக்குறியாகி விட்டதா என்ற சந்தேகத்தை தோற்றுவிக்கின்றன. அன்பு இல்லத்தில் சிறுவர் துஷ்பிரயோகம் இடம்பெறுவதாக பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்டு இருந்த ஆக்கமொன்றை அடுத்தே திருகோணமலை மாவட்ட நீதிபதி எஸ்.தியாகேந்திரன் விசாரணைகளை மேற்கொள்ளுபடி பணித்திருந்தார்.

அன்பு இல்லத்தில் தங்கியிருந்த மற்றும் சந்தேகத்துக்கு இடமான பலரிடம் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளை அடுத்து பெண் உதவியாளர் கோமளாதேவியும் (சுந்தரி அம்மா) கைதாகி இருந்தார்.

வெள்ளியன்று இரவு (16 ஆம் திகதி) சுந்தரலிங்கம் சட்டதரணியூடாக பொலிஸில் சரணடைந்தார் என பொலிஸ் அத்தியட்சகர் தயாசமர வீர தெரிவித்திருந்தார்.

அன்பு இல்லத்தில் சிறுவர் துஷ்பிரயோகம், மற்றும் முறைகேடுகள் நடந்தன என்பதற்கு தெட்டத்தெளிவான சான்றுகள் இல்லை. சிலரிடம் பெற்ற வாக்கு மூலத்தை வைத்துக் கொண்டே கைதுகள் இடம் பெற்றுள்ளன. விசாரணைகள் முடுக்கி விடப்பட்டுள்ளன.

பொலிஸாரின் விசாரணையின்போது வாக்கு மூலம் அளித்தவர்கள் தெரிவித்த தகவல்கள் முழுமையானவையா அல்லது உண்மையானவையா என்பது கூடத் தெரியவில்லை.

உண்மை எதுவோ அதனை விசாரணையின் முடிவில், நீதிமன்றத் தீர்ப்பின் மூலம் அறிய முடியும்.

ஆனால், அன்பு இல்லத்தின் எதிர்காலம் என்ன? என்பதே இன்றைய வினாவாக உள்ளது.

இப்போது திருகோணமலை நீதிபதி எஸ்.தியாகேந்திரனின் உத்தரவின் பேரில் சிறுவர் பராமரிப்பு நிலையத்திடம் இந்த இல்லம் பொறுப்பாக்கப்பட்டிருந்தாலும் உணவு மற்றும் பாராமரிப்புகளை அன்பு இல்லமே மேற்கொண்டு வருகின்றது. எனினும் அங்கு சிறுவர் பாராமரிப்பு திணைக்கள அதிகாரிகள் கடமையில் ஈடுபட்டுள்ளனர் என்று அறிய முடிகின்றது.

அன்பு இல்லத்தை எஸ்.சுந்தரலிங்கம் தனது தனிப்பட்ட முயற்சியில் 1985 ஆம் ஆண்டு முதல் நிர்வகித்து வந்தார்.

1990 ஆம் ஆண்டு இனக்கலவரத்தின் போது ஏற்பட்ட பாதிப்பு, எதிர்ப்புகள் ஆகியவற்றுக்கு மத்தியில் சிறப்பாக அது செயற்பட்டு வந்தது.

சிலசக்திகள் இவரை விலக்கி நிர்வாக சபையொன்றை அமைப்பதற்கும் இந்த இல்லத்தை அரசாங்கத்திடம் ஒப்படைப்பதற்கும் முயன்று வந்துள்ளன என்றும் இவை பயனளிக்காது போகவே வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டன என்றும் கூறப்படுகிறது.

தவறு நடந்தது என்றோ அல்லது நடக்கவில்லை என்றோ நாம் அடித்துக் கூறவில்லை. அப்படித் தவறு ஒன்று நடந்து இருந்தால் சம்மந்தப்பட்டவர்கள் தண்டிக்கப்புட வேண்டியவர்கள் தான். 'வேலியே பயிரை மேயும் செயல்' பொறுக்கக் கூடியதல்ல. அதில் இரண்டு கருத்துக்கள் இருக்க முடியாது.

ஆனால், அன்பு இல்லத்தின் எதிர்காலம் பயன்தரத்தக்கதாக இருக்க வேண்டும்.

அன்பு இல்லத்தில் 18 வயதுக்கு உட்பட்டவர்கள் நூறுபேரும், மேற்பட்டோர் 15 பேரும் உள்ளனர். இந்த 15 பேரும் அங்கேயே இருந்து படித்தவர்கள். வெளியில் சென்று வாழமுடியாதவர்கள். இவர்கள் நிர்வாகத்துக்கு பல வழிகளிலும் உதவி புரிந்து வருகின்றனர்.

1995முதல் இன்றுவரை சுமார் 600 பேர் இங்கு தங்கி கல்வி பயின்றுள்ளனர். இவர்களில் 36 பேருக்கு மேற்பட்டோர் தற்போது அரச உத்தியோகம் பார்க்கின்றனர்.

மொறட்டுவ பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடத்துக்கு தெரிவான அன்பு இல்ல மாணவன் (இப்போது விரிவுரையாளர்) புலமைப்பரிசில் பெற்று அவுஸ்திரேலியா செல்லவுள்ளார்.

இதுவரை 8 க்கு மேற்பட்டோர் பல்கலைக்கழகத்துக்குச் சென்றுள்ளனர். ஆண், பெண் இருபாலர்களையும் அன்பு இல்லம் ஆதரித்து இருக்கின்றது.

அன்பு இல்லப் பராமரிப்பு அரசிடம் போனால் பெரும்பான்மைச் சமூகத்தின் ஆக்கிரமிப்பும், அதிகாரமும் இடம் பெறலாம். இதற்கென வரும் நிதி உதவி வேறு இடங்களுக்கு வேறு தேவைக்கும் பயன்படலாம். தமிழர்களுக்கு இருந்த 'சுயம்' சிதைந்துபோகவும்கூடும். இதுவரை ஆதரவு நல்கியவர்கள் மறுக்கவும் கூடும். 18 வயதுக்கு மேற்பட்டோர், படித்து முடித்தோர் நிலை மோசமாகிவிடும். இவை மேலும் பல சிக்கல்களை ஏற்படுத்தும்.

இதனால்தான் அன்பு இல்லம் கேள்விக்குறியாகி இருப்பதாக உணரப்படுகின்றது.

சம்மந்தப்பட்டவர்களின் கைதை அடுத்து பல்வேறு வதந்திகள் பரப்பப்பட்டன. எதற்கும் ஆதாரம் கிட்டவில்லை.

கடந்த 14 வருடங்களில் நடைபெறாத தவறு இப்போது நடந்ததாக கூறுவதை நம்ப முடியவில்லை என்றும், இது இல்லத்துக்கு வெளியில் உள்ள எதிர்ப்புச் சக்திகளின் வேலை என்றும் சுமார் 16 வருடங்கள் இங்கிருந்து இப்போது பெண்தாதியாகப் பணிபுரியும் திருமதி யோ.சுதாகரன் ''சுடர் ஒளி''க்குத் தெரிவித்தார்.

பிள்ளைகளின் எதிர்காலம் பாதிக்கப்பட்டுள்ளது. எல்லாவற்றையும் இழந்து இல்லத்தையே நம்பி வாழ்ந்தவர்களுக்கு வந்த சோதனையில் இருந்து யார் அவர்களைக் காப்பது? பலரின் திட்டமிட்ட செயலே அன்றி சம்பவம் நடப்பதற்கு வாய்ப்பு இல்லை என்கிறார் மருத்துவ மாது தி.கௌரி.

குற்றம் செய்தவர் தண்டனை பெறவேண்டும். ஆனால், அன்பு இல்லக் குழந்தைகள் பாதிக்கப்படக்கூடாது என்பதே அனைவரினதும் எதிர்பார்ப்பு.

– எஸ்.எஸ்.ஆர் –

# வழக்கிறந்து வரும் நாட்டார் அரங்கு!

ஈழத்தமிழர்களின் தேசியக்கலை வடிவமான நாட்டுக் கூத்து இன்று வேகமாக வழக்கிறந்து வருவதனைப் பார்க்கக் கூடியதாக உள்ளது. நவீன நாடகங்களின் செல்வாக்கு, பரபரப்பான இன்றைய வாழ்க்கைமுறை, எமது பாரம்பரியக் கலைகளின் கையளிப்புக் குறைபாடுகள் எனப் பல்வேறு காரணங்களை இதற்குக் கூறலாம்.

நாட்டார் அரங்கத்துறையில் பயிற்சியுள்ள அண்ணாவிமார் சிலர் ஆங்காங்கே உயிர் வாழ்ந்து வருகின்றபோதிலும, அவர்களை நாடிச்சென்று கூத்துப்பழகுபவர்களின் தொகை குறைவடைந்தே வருகிறது. இன்றைய சூழலில் கூத்து ஒன்றை 'இணக்குவது' என்பது பெரும்பாடாகவே உள்ளது.

நாட்டார் அரங்கத்துறைக்கென்றே தம்மை அர்ப்பணித்துள்ள ஒருசில இளங்கலைஞர்கள் இத்துறையில் ஈடுபாடுகாட்டிவருவது மனநிம்மதியைத் தருகிறது.

ஆயினும், பல்கலைக்கழகம் மற்றும் கலை சார்ந்த நிறுவனங்கள் முதலானவை இக்கூத்துக்களை எம்மக்கள் மத்தியில் தக்க வைத்துக்கொள்வதில் உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும். கூத்தைப் பற்றி ஆராய்ச்சி செய்து 'பட்டம்' எடுக்கலாமே தவிர கூத்தை பயில்நிலைக்குக் கொண்டு வரமுடியாத நிலைமையே தற்போது காணப்படுகிறது.

தமிழர் பரந்து வாழும் பிரதேசங்களிலுள்ள பல்கலைக்கழகங்களும், உயர்கல்வி நிறுவனங்களும் எமது பாரம்பரியக் கலைகளுக்குப் போதிய முக்கியதுவம் கொடுக்க முன்வரவேண்டும். 'நாடகமும் அரங்கியலும்' பயில்கின்ற மாணவர்களின் பாடவிதானத்திலே பாரம்பரிய அரங்குக்குப் போதிய முக்கியத்துவமும், முன்னுரிமையும் தரப்பட வேண்டும். கண்ணுக்கு முன்னே எமது பாரம்பரிய அரங்கு வழக்கிறந்து வரக்கண்டும், மேலைத்தேய அரங்கின் மீதே எமது புலமைச்சிரத்தை குவிவது ஆரோக்கிய மானதாகப்படவில்லை.

குறிப்பிட்ட சமூகங்களிலிருந்தும், கலைக் குழுமங்களிலிருந்தும் இக்கூல மரபுகள் விடுவிக்கப்பட்டு, இன்றைய இளைய தலைமுறையினருக்கு அவற்றைப் பயிற்றுவிப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். பாடசாலைகளில் தமிழ்த்தினப் போட்டிகள் நடைபெறும் வேளைகளில் இவ்வாறான நாடகங்கள் சில மேடையேற்றப்பட்டு வருவது பாரட்டத்தக்கது.

இன்றைய நவீன படச்சட்டக மேடைக்குத் தகுந்தவாறு இம் மரபுவழி நாடகங்களை நெறிப்படுத்தி மேடையேற்றி இந்நாடகங்களையும் சுவைக்கச் செய்யலாம். மரபுவழி நாடகங்களில் இலங்கைப் பல்கலைக்கழகங்களின் தமிழ்த் துறைகளில் பணியாற்றிய பேராசிரியர்கள் மேற்கொண்ட ஆராய்ச்சிகளையும், மேடையேற்றங்களையும், பரிசோதனை முயற்சிகளையும் 'நாடகமும் அரங்கியலும்' துறைசார்ந்தவர்களும் மேற்கொள்ள முன்வரவேண்டும். முன்வருவார்களா?




*– கலாநிதி கி.விசாருபன் –*

# நூல் வெளியீடு

என். சிறிரஞ்சனின் ''பொருளாதார மேம்பாட்டுச் சிந்தனைகள்'' எனும் நூல் வெளியீடு இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணிக்கு கொழும்பு தமிழ் சங்கத்தில் உள்ள சங்கரப்பிள்ளை மண்டபத்தில் இடம்பெறுகின்றது.

மேற்படி விழாவில் யாழ். பல்கலைக்கழக மூதுநிலை புவியியற் பேராசிரியரும் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை விழாத்தலைவராகக் கலந்து கொள்கிறார்.

யாழ்.பல்கலைக்கழக முன்னாள் கலைப் பீடாதிபதி பேராசிரியர் என்.பாலகிருஷ்ணன் அறிமுகவுரை வழங்குபவராகவும் புனர்வாழ்வு மீள்குடியமர்த்துகை நல்லிணக்க அமைச்சின் மேலதிக செயலாளர் க. சண்முகலிங்கம் நூல் ஆய்வுரை வழங்குபவராகவும் கலந்து கொள்வர். விழாவின் சிறப்பு விருந்தினராக சுங்கப் பணிப்பாளரும் இலங்கை பேரதைப் பொருள் தடுப்புச் சங்கத்தின் தலைவருமாகிய எஸ் இராமச்சந்திரன் கலந்து கொள்கிறார்.

சிறிரஞ்சனால் எழுதப்பட்ட சமூக, பொருளாதார முகாமைத்துவம் மற்றும் நிதியியல் தலைப்புகளிலான 34 கட்டுரைகள் இந்நூலில் இடம் பெறுகின்றன.



மணிவிழா காணும் மலையக ஜீவாவின் மணிவிழாச் சிறப்பு நிகழ்வாக அந்தனி ஜீவா எழுதிய ''திருந்திய அசோகன்'' சிறுவர் நாவலின் வெளியீட்டு விழா அண்மையில் கண்டி ஸ்ரீ புஷ்பதான மண்டபத்தில் நடைபெற்றது. அ.அரியரத்தினம், அந்தனி ஜீவாவை கௌரவிப்பதையும், சமூகசேவகி திருமதி சேகரன் சோமபாலன் மாணவர்களுக்கு திருந்திய அசோகன், ஓடிப்போனவன் ஆகிய சிறுவர் நாவல்களை அன்பளிப்பாக வழங்குவதையும் படங்களில் காணலாம்.



பொப்பிசைச் சக்கரவர்த்தி ஏ.ஈ.மனோகரனின் ''ஒஸி பேபி'' (AUSIE BABY) ஸி.டீ ஒலி நாடாவின் வெளியீட்டு விழா கொழும்பு பிரைட்டன் ஹோட்டலில் நடைபெற்றது. முதல் ஒலி நாடாவை, நிகழ்வின் பிரதம அதிதி, இலங்கை கப்பல் கூட்டுத்தாபனப் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாஷிம் உமர் பெற்றுக்கொள்கிறார். அருகில் வெளியீட்டாளர் கே.டீ.பிரஸாத் மற்றும் நிகழ்ச்சி அமைப்பாளர் சிட்னி மோஹன், மற்றும் கலைஞர்கள் காணப்படுகின்றனர்

# சூரிய காந்திப்பூ அழகில் சொக்கிய சைக்கிள் வீரர்கள்



சூரிய காந்திப்பூ மிகவும் அழகிய தோற்றம் கொண்டது. அதிலும் பிரம்மாண்டமான தோற்றத்தில் வளர்ந்துள்ள சூரியகாந்திப்பூக்கள் காண்பவர் உள்ளங்களைக் கொள்ளை கொண்டுவிடும் தன்மை கொண்டவை. பிரெஞ்சு சைக்கிள் வீரர்கள் நீண்ட தூரப் போட்டியில் ஈடுபட்டபோது ஒரு சூரிய காந்திப்பூந் தோட்டத்தைக் கடந்து செல்லுகையில் சொக்கிப்போன காட்சியை இந்தப்படம் சித்திரிக்கிறது.


மசாலா மிக்ஸ்

# 9 ஜெட் விமானங்கள் பாரீஸ் விண்ணில் சாதனை



பாரீஸில் நடைபெற்ற பிரெஞ்சு விமானப்படையினரின் வருடாந்த கண்காட்சியில் இம்முறை பிரிட்டிஷ் விமானப்படையின் 9 ஜெட் விமானங்கள் விண்ணில் சீறிப்பாய்ந்து பரபரப்பை ஏற்படுத்தின. சிகப்பு – வெள்ளை – நீல வர்ணப்புகைகளைக் கக்கியவாறே அந்த 9 ஜெட் விமானங்களும் பாரீஸ் விண்ணில் பறந்து சாதனை நிலை நாட்டிய காட்சி இது.

# டொல்பின் குடும்பத்தை கண்டு ரசிக்க ஏற்பாடு



டொல்பின் மீனினம் ஆழமான கடல் பகுதியில் வாழும் தன்மை கொண்டது. டொல்பின் குடும்பம் ஒன்றின் வாழ்க்கை முறையைக் கண்டுரசிக்க வழி செய்து கொடுத்திருக்கிறார்கள் யோக்கொகாம நகரில். மீன்தொட்டியின் கீழ்சுரங்கப்பாதைஒன்றை அமைத்து பார்வையாளர்கள் டொல்பின் மீன்களின் நடமாட்டத்தை அங்கிருந்தே கண்டு ரசிக்க இவ்வாறு ஏற்பாடு செய்து தந்திருக்கிறார்கள்.

# சிட்னி துறைமுகம் மீது பறக்கும் இராட்சத பலூன்



சிட்னி துறைமுகத்தில் நிறுவப்பட்டுள்ள இசை அரங்கம் இயற்கை வளங்கள் மிக்கது. அங்கு அரங்கேறும் கலை நிகழ்வுகள் மிகவும் தெளிவாகக் கேட்கும் தன்மை கொண்டவை. விண்ணில் பறக்க விடப்பட்ட குழந்தை உருவம் கொண்ட இராட்சத பலூன் ஒன்று சிட்னி இசை அரங்கத்தைக் கடந்து செல்லும் காட்சியைப் படத்தில் காணலாம்.

# ஏமாற்றித் திரிந்த முதலைக்கு காவல்



சீனாவின் எல்லையிலுள்ள கழிவோடை ஒன்றில் தங்கியிருந்து பலரைப் பலியெடுத்த பயங்கர முதலை எவர் கையிலும் சிக்காமல் ஏமாற்றித் திரிந்தது. பல மாத காலமாக மேற்கொண்ட வேட்டையை அடுத்து ஹொங்கொங் வேட்டைக்காரர்கள் முதலையைப் பிடித்து விட்டார்கள். ஹொங் கொங் காட்சிச் சாலையில் மேற்படி முதலை காவலில் வைக்கப்பட்டிருக்கும் காட்சி இது.

# ஒளிந்திருக்கும் முகம் எது?



ஜூலை 19, சுடர் ஒளி மசாலா மிக்ஸ் பகுதியில் ஒளிந்திருந்த முகம் நடிகை மீனா. சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்களில் ஐந்து அதிஷ்டசாலிகளின் பெயர், விவரம் வருமாறு:

1. ச. ரவிதரன்; 137/10, பலாலி வீதி, யாழ்ப்பாணம்.
2. மீ. மீனாலோஜினி, பருத்தித்துறை வீதி, கல்வியங்காடு.
3. வ. யாமினி, புகையிரத நிலைய வீதி, வவுனியா.
4. அ. நிலாவிழி, அக்கரைப்பற்று. 5. இ. காந்தரூபன், பிரதான வீதி, புத்தளம்.

சரியான விடையைக் கண்டுபிடித்து எழுதி அனுப்பிய வாசகர்கள் அனைவருக்கும் பாராட்டுக்கள். அதிஷ்டசாலிகளுக்கு எமது வாழ்த்துக்கள்.

இந்தவாரம் ஒளிந்திருக்கும் இந்த முகம் யாருடையது?

இவர் ஓர் சிறந்த துடுப்பாட்ட வீரரும், சிறந்த தலைவருமாவார். அத்துடன் இவர் ஓர் இந்திய விளையாட்டு வீரர்?

இந்த முகத்திற்குரிய வீரரைக் கண்டுபிடித்து, அவர் பெயரைத் தபால் அட்டையில் எழுதி கீழ்வரும் எங்கள் புதிய முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.



'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

# உட்கட்சிப்பூசலின் உச்சத்தில் தமிழக காங்கிரஸ்

பழம்பெரும் காங்கிரஸ் கட்சி உட்கட்சிச் சண்டைக்குப் பேர்போன கட்சியாகும். என்றாலும் மற்றமாநிலங்களில் காங்கிரஸ் கட்சிக்குள் உள்ள பிளவுகளைவிட தமிழக காங்கிரஸில் பிளவுகளும், சண்டைகளும் இன்னும் ஒருபடிமேல் தான் இருக்கின்றன.

தமிழக காங்கிரஸ் தலைவர்களின் ஒரே தொழில்; பதவியில் இருக்கும் தமிழக காங்கிரஸ் கட்சித்தலைவரை அகற்றுவதுதான் என்று சொல்லுமளவுக்கு நிலைமைகள்


சோனியா

உள்ளன. மூப்பனார் என்ற பெரும் தலைவரினால் 1996 இல் கட்டி எழுப்பப்பட்ட தமிழ்மாநில காங்கிரஸ் இப்போது இல்லை. ஜெயலலிதாவுடன் பிரதமர் நரசிம்மராவ் கூட்டுவைத்ததால் அதிருப்தியுற்று மூப்பனார் இக்கட்சியை தொடங்கினார்.

எனினும் தி.மு.க, பாரதீய ஜனதாவுடன் இணைந்ததால் மூப்பனாருக்கு கூட்டாளிகள் இல்லாதுபோகவே மீண்டும் ஜெயலலிதாவுடன் 2001 சட்டசபை தேர்தலில் கூட்டணி வைத்துக்கொண்டார்.

ஜெயலலிதா பதவிக்கு வந்து சில மாதங்களில்மூப்பனார் காலமானார். த.மா.காவுக்கு மூப்பனாரின் மகன் வாசன் தலைவரானார். அதன்பிறகு த.மா.கா தாய்க்கட்சியான காங்கிரஸுடன் இணைந்தது. கடந்த லோக்சபாத் தேர்தலில் தி.மு.கவுடனான கூட்டணி அமோக வெற்றிபெற்று மீண்டும் மத்தியில் காங்கிரஸ் ஆட்சி அமைத்துவிட்டது.

2001 சட்டசபை தேர்தலில் தி.மு.க – பா.ஜ.க கூட்டணியை தோற்கடிப்பதில் ஜெயலலிதாவுடன் முன்னின்று பணியாற்றியவர்கள் மூப்பனாரும், அப்போதைய தமிழக காங்கிரஸ் தலைவர் ஈ.வி.கே.எஸ் இளங்கோவனும். முதல்வரானபிறகு ஜெயலலிதா த.மா.காவையும், காங்கிரஸையும் உதறிவிட்டு பாரதீய ஜனதா உறவை நாடினார்.

இந்தப் பின்னணியில் காங்கிரஸை த.மா.காவுடன் இணைப்பதில் முன்னின்று உழைத்தவர் இளங்கோவன். இணைந்த காங்கிரஸின் தலைவராக வாசனே இருக்கவும் இளங்கோவன் சம்மதித்தார். லோக்சபா தேர்தலில் காங்கிரஸுக்கு மிகக்குறைவான 10 இடங்களையே தி.மு.க ஒதுக்கியது. இதனால் வேட்பாளர் தெரிவில் வாசனின் அணியினருக்கும், மற்ற அணியினருக்கும் போட்டி ஏற்பட்டது. காங்கிரஸின் வேட்பாளர் பட்டியலை அறிவிப்பதில் பெரும் தாமதம் உண்டானது. முதலில் அறிவித்த வேட்பாளர்கள் வாபஸ் பெறப்பட்டு வாசனின் ஆட்கள் நியமிக்கப்பட்டனர். மத்திய அமைச்சரவை அமைக்கப்பட்டபோது வாசனின் ஆட்களுக்கு அமைச்சர் பதவி கிடைக்கவில்லை. தனித்து செயற்பட்ட சிதம்பரத்துக்கும், மூப்பனார் பிரிந்து சென்ற போது தொடர்ந்தும் காங்கிரஸிலேயே இருந்த மணிசங்கர் ஐயருக்கும் அமைச்சர் பதவிகள் வழங்கப்பட்டன.

மணிசங்கர் ஐயர் 1998 இல் பூஜ்யமாக இருந்த தமிழக காங்கிரஸ் எம்.பிக்களின் எண்ணிக்கையை 1999 இல் இரண்டாக உயர்த்திய இருவரில் ஒருவர். அவரது அரசியல்நேர்மையும், மக்கள் செல்வாக்கும் கேள்விக்கு அப்பாற்பட்டவை. சிதம்பரம் ஏற்கனவே மத்தியில் வர்த்தகம், நிதி ஆகிய அமைச்சுப் பதவிகளை வகித்தவர். இவர்களுக்கு பதவி தந்தது சரிதான். ஆனால், இணை அமைச்சர் பதவியாவது வாசன் அணியினருக்குத் தரவில்லை என்பதே ஆத்திரம். வாசன் அமைச்சராக்கப்படுவார் என்றே அவரது அணியினர் எதிர்பார்த்தனர். ஆனால், ஒரே ஒரு இணை அமைச்சர் பதவி கூட இளங்கோவனுக்குப் போய்விட்டது.

ஜெயலலிதாவை எதிர்ப்பதில் இளங்கோவனுக்குஈவுஇணையில்லை என்று பெருமை பெற்ற இளங்கோவன் அப்பதவிக்கு சரியானவர்தான். ஆகக் கூடிய சீக்கிரம் வாசனுக்கு அமைச்சுப் பதவி தரவேண்டும் என்பது அவரது ஆதரவாளர்களின் கோரிக்கை. அவ்வாறு செய்தால் தமிழக காங்கிரஸ் தலைவராக வாசன் அணியைச் சேர்ந்த எஸ்.ஆர்.பாலசுப்பரமணியம், பீட்டர் அல்போன்ஸ் ஆகியயோரில் ஒருவர் நியமிக்கப்படலாம் என்று தெரிகிறது.

ஆனால், பிரச்சினை வாசன் அணியோடு மட்டும் நின்றுவிடப்போவதில்லை. காலத்துக்குக்காலம் பதவியிலுள்ள தமிழக காங்கிரஸ் தலைவரை துரத்தியடிப்பதுதான் காங்கிரஸ் தமிழகத்தலைவர்களின் வேலை. ஆனால், அவ்வாறு விரட்டியபின் ஒன்று சேர்ந்து ஒரு தலைவரை தெரிவு செய்வது அவர்களுக்கு இயலாத காரியம். இதனால் முன்னாள் காங்கிரஸ் தலைவர்களினது ஒரு பெரும் பட்டாளமே கட்சியில் உண்டு.

குமரிஅனந்தன், கே.வி.தங்கபாலு, திண்டிவனம் ராமமூர்த்தி, ஈ.வி.கே.எஸ் இளங்கோவன் என்று இந்த எண்ணற்ற முன்னாள் மாநிலத்தலைவர்கள் தத்தமக்கென்று கோஷ்டிகளை உண்டாக்கி வைத்துக்கொண்டு ஒருவரை ஒருவர் வீழ்த்துவதில் குறியாக உள்ளனர். இவர்களைவிட முன்னாள் அமைச்சர் பிரபு, முன்னாள் நாகர்கோயில் எம்.பி.டெனிஸ், ஜெயந்திநடராஜன் என மேலும் பல இரண்டாம் நிலைத்தலைவர்களும் அமைச்சர்பதவி, எம்.பி பதவி என முண்டியடிக்கின்றனர். காங்கிரஸைப் பிடித்த இந்த உட்கட்சிச்சண்டை என்ற சாபக்கேடு தான் 1967 இல் இழந்த மாநில ஆட்சியை மீண்டும் கைப்பற்ற பெரும் தடை என்கின்றனர் நோக்கர்கள்.

காமராஜர் ஆட்சியை மீண்டும் அமைப்போம் என முழங்கித்தள்ளும் இந்த காங்கிரஸ் தலைவர்கள் அதற்கு முரணானதை செயலில் காட்டுகின்றனர். சமீபத்தில் கொண்டாடப்பட்ட காமராஜர் பிறந்த தினத்தைக் கூட இவர்களால் ஒற்றுமையாகக் கொண்டாட முடியவில்லை.

வாசன் அணியினர் தனியாகவும், மற்றவர்கள் தனியாகவும் விழா நடத்தியதிலிருந்து இது புலப்பட்டது. கட்சித்தலைமேயோ செய்வதறியாது தலையைப் பிய்த்துக்கொள்ள வேண்டிய நிலைமை. சமீபத்திய லோக்சபா தேர்தலில் தி.மு.க அணியில் போட்டியிட்ட சகல கட்சிகளும் போட்டியிட்ட சகல இடங்களிலும் வென்றாலும், காங்கிரஸின் சார்பில் வென்றவர்கள் தான் மிகக்கூடிய வாக்குவித்தியாசத்தில் வென்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

அதாவது நேருகுடும்ப அபிமானம் தமிழ் மக்களுக்கு இன்னும் மறையவில்லை. அத்துடன் பா.ம.க, ம.தி.மு.க போன்ற கட்சிகள் போலன்றி காங்கிரஸ்கட்சிக்கு சாதி, மதத்தை கடந்து தமிழகம் முழுவதும் பரவலான ஆதரவு இன்னும் இருந்துவருவதும் கடந்த தேர்தலில் தெரிந்தது.

பா.ம.க போன்ற கட்சிகள், வன்னியச் சமூகம் செறிந்து வாழும் சில இடங்களில் மாத்திரம் செல்வாக்கு உடையவை. ம.தி.மு.க தென் மாநிலங்களில் குறிப்பிடத்தக்க ஆதரவு உடைய கட்சி; தி.மு.க முக்கியமாக


மூப்பனார்

வடதமிழகத்து கட்சியாகும். அ.தி.மு.கவோ தென்தமிழ்நாட்டினை பிரதான ஆதரவுத் தளமாகக் கொண்டது.

ஆனால், காங்கிரஸோ ஈரோடு, திருச்சி, சேலம், நாகப்பட்டினம், தஞ்சாவூர், தூத்துக்குடி, திருநெல்வேலி, திண்டுக்கல் என தமிழகம் முழுவதும் பரந்துபட்ட பிரதேசத்தில் ஆங்காங்கு செல்வாக்குடைய கட்சியாக உள்ளது.

உட்கட்சிப்பூசல் இல்லை எனில் கட்சி எவ்வளவோ தூரம் முன்னேறியிருக்க முடியும். ஆனால், தமிழக காங்கிரஸ் தலைவர்களுக்கு இது சரிவராது என்பதே உண்மை.

– எஸ்.சுரேந்திரஜித் –

## சக்தி டி.வி. நிகழ்ச்சி நிரல்

| நேரம் | திங்கள் | செவ்வாய் | புதன் | வியாழன் | வெள்ளி | சனி | ஞாயிறு |
|---|---|---|---|---|---|---|---|
| 6.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | | |
| 6.59 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | நிகழ்ச்சி ஆரம்பம் | நிகழ்ச்சி ஆரம்பம் |
| 7.00 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.05 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 7.30 | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | எம்.டி.வி நிகழ்ச்சி | 7.55 அன்புமடல் சங்கீதமேடை | 7.55 அன்புமடல் குட்மோர்னிங் ஸ்ரீலங்கா |
| 8.00 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | ஒரு கதையின் கதை |
| 8.30 | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்மோர்னிங் ஸ்ரீலங்கா | குட்டி சுட்டி | சிறுவர் நிகழ்ச்சி |
| 9.00 | கோலங்கள் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கோலங்கள் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கோலங்கள் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கோலங்கள் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | கோலங்கள் இயற்கையுடன் ஒரு நிமிடம் 9.55 | ஹொலிவூட் மூவி | அரட்டை அரங்கம் |
| 9.30 | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | கொமடி டைம் | குட்டி சுட்டி | சமையல் |
| 10.00 | பெப்சி உங்கள் சாய்ஸ் | தில்லானா தில்லானா | பாட்டுக்கு பாட்டு | நம்மநேரம் | கொண்டாட்டம் | களம் | சப்த ஸ்வரங்கள் |
| 10.30 | நெஞ்சில் நின்ற ராகங்கள் | சுகமான ராகங்கள் | ஆடலும் பாடலும் | இனிய கீதங்கள் | இசைத் தென்றல் | திரைவிமர்சனம் | டொப் 10 மூவிஸ் |
| 11.00 | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | மெட்டி ஒலி | இப்படிக்கு நீங்கள் | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் |
| 11.30 | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | ஆனந்தம் | சினி சொய்ஸ் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.00 | நட்சத்திரம் | நிறைவானம் | சமையல் | பிரியும் சிறகுகள் | மங்கை | ரிலாக்ஸ் டைம் | சின்ன சின்ன ஆசைகள் |
| 12.30 | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | செய்திகள் (எம்.ரீவி) | ரிலாக்ஸ் டைம் | ஸ்டார் ஸ்பெஷல் |
| 1.00 | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | மதிய செய்திகள் | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 1.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | (12 B) | (திருடா திருடி) |
| 2.00 | (ரொமான்ஸ்) | (அர்ஜுன்) | (கொமடி) | (கிளாசிக்) | (பழிலி) | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 2.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.00 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 3.30 | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | சக்தி மேட்னி | வீக் என்ட் மேட்னி | வீக் என்ட் மேட்னி |
| 4.00 | டிஸ்னி வேல்ட் | டிஸ்னி வேல்ட் | ஒருகதையின்கதை | சக்தி மேட்னி | கில்லி | விக்கிரமாதித்தன் | ஜீ பூம்பா |
| 4.30 | கார்ட்டூன் நிகழ்ச்சி | கி—மேன் | தமிழ் கார்ட்டூன் | மலரும் மொட்டும் | தமிழ் கார்ட்டூன் | அன்புமடல் 4.55 விக்கிரமாதித்தன் | ஓப்போடு |
| 5.00 | கொண்டாட்டம் | சினி சொய்ஸ் | ஸ்டார் ஸ்பெஷல் | சுப்பர் சீன்ஸ் | என்றும் கலாட்டா | மிஸ்டர் பீன் | "24" |
| 5.30 | இசைத்தென்றல் | இசைத்தென்றல் | இசைத் தென்றல் | இப்படிக்கு நீங்கள | இசைத் தென்றல் | ஸ்டாருடன் ஒரு நாள் | அன்பு மடல் 5.55 "24" |
| 6.00 | களம் | இளைய கானம் | ஓப்போடு | பாடல்கள்/இளந்தளிர் 6.15 | கோல்டன் மொமன்ஸ் ஒப் கிரிகெட் | ஸ்டாருடன் ஒரு நாள் | மின்னல் |
| 6.30 | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 குங்குமம் | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 குங்குமம் | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 குங்குமம் | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 குங்குமம் | இயற்கையுடன் ஒரு நிமிடம் 6.55 குங்குமம் | திமிதக்க தா | மின்னல் |
| 7.00 | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | காவ்யாஞ்சலி | அலைபாய்ஸ் | வேலன் |
| 7.30 | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | நீ நான் அவள் | (அச்சன் சீரியல்) | வேலன் |
| 8.00 | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் | சக்தி செய்திகள் |
| 8.30 | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | அண்ணாமலை | ருத்ர வீணை | இளைய கானம் |

# மறக்க முடியாத



ஸ்ரீலங்கா அரச படைகளின் முதுகெலும்பான, அதி உயர் முதல்தரப் பாதுகாப்புக் கொண்ட கட்டுநாயக்க விமானப்படைத்தளமும், அதனோடு இணைந்திருந்த ஸ்ரீலங்காவின் ஒரேயொரு சர்வதேச விமான நிலையமான பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச விமான நிலையமும், நள்ளிரவு கடந்த ஓர் அதிகாலையில் ஆறே ஆறு மணி நேரங்களில் எவருமே கனவில்கூட எதிர்பார்த்திராத வகையில் மாபெரும் அழிவுக்குட்பட்டு உருக்குலைந்து போய்விட்டன. 2001 ஜூலை 24 ஆம் திகதி இடம்பெற்ற ஸ்ரீலங்கா அரசின் முதுகெலும்பையே உடைத்த இந்தச் சம்பவம் மறக்க முடியாத ஜூலைச் சம்பவங்களில் முக்கிய இடத்தைப் பெற்றுக் கொண்டுள்ளது.

2001 ஜூலை 24 ஆம் திகதி அதிகாலை, மிகத்துல்லியமான திட்டமிடலுடன் கனரக ஆயுதங்கள் சகிதம் சுமார் 14க்கும் 20 க்கும் இடைப்பட்ட வீரர்களைக் கொண்ட 'கொமாண்டோ' அணி ஒன்று இலத்திரனியல் பாதுகாப்பு வேலிகளை ஊடறுத்து விமானப் படைத்தளத்தினுள் நுழைந்தது.

இதற்கு ஏதுவாக விமானப்படைத்தளத்தின் சுற்றுப்புறங்களுக்கு மின்சாரம் வழங்கிக் கொண்டிருந்த மின்மாற்றிகளை ஏற்கனவே செயலிழக்கச் செய்தனர் தாக்குதல் அணியினர்.

குராண ராஜ் பெர்னாண்டோ விளையாட்டு மைதானத்தில் இருந்து தம்மைத் தாக்குதலுக்குத் தயார்ப்படுத்திக் கொண்ட தாக்குதல் அணியினர், விமானப்படையினரின் முகாமிற்கு இடதுபக்கமாக கம்பிவேலியை வெட்டி உள்நுழைந்து தமது தாக்குதலுக்கான நேரத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர்.

தாக்குதலின்போது எந்தவொரு பயணியோ, பொதுமக்களோ இலக்காகிவிடக் கூடாது என்பதில் தாக்குதல் அணியினர் மிகக் கவனமாக இருந்தனர். தாம் உள்ளே நுழைந்தவுடன் தாக்குதலைத் தொடுக்காது, பொறுமையாக இருந்து இறுதி நேரத்தில் வந்திறங்கிய ஓர் பயணிகள் விமானத்தையும் கவனத்தில்கொண்டு அதிலிருந்து சகல பயணிகளும் இறங்கிச் சென்ற பின்னரே அதிகாலை 3.50 மணிக்கு தமது தாக்குதலை ஆரம்பித்தனர்.

இதிலும் கவனிக்கப்பட வேண்டிய ஓர் முக்கிய விடயம் யாதெனில், தாக்குதல் அணியினர் முதலில் விமானப் படைத்தளத்தினுள்ளேயே தமது தாக்குதலை ஆரம்பித்தது மட்டுமன்றி, சுமார் 2 மணித்தியாலங்கள் வரை சர்வதேச விமான நிலைய வளாகத்தினுள் நுழைய முற்படவில்லை. காரணம் விமானப்படையினரின் விமானங்கள் தாக்கப்படுவதை உணர்ந்து அருகில் உள்ள பயணிகள் விமான நிலைய ஊழியர்கள் மற்றும் பயணிகள் யாவரும் பாதுகாப்பான இடங்களுக்குச் சென்று விட முடியும் என்பதையும் கருத்தில் கொண்டே தாக்குதல் நுட்பமாக ஆரம்பிக்கப்பட்டது.

முதலில் விமானப் படைத்தளத்தின் ஓடுபாதைக்கு அருகே தரிப்பிடத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மிக் – 27, கிபிர், எம்.ஐ.24, எம்.ஐ.17, கே.8, பெல் 412ரக யுத்த வானூர்திகள் மீது ஆர்.பி.ஜி. மற்றும் கனரக ஆயுதங்களைக் கொண்டு தாக்குதலை தொடுத்து மொத்தம் 8 வானூர்திகளை முற்றாக அழித்த தாக்குதல் அணியினர், பின் அங்கிருந்து இரு அணிகளாகப் பிரிந்து, ஒரு அணி, எதிர்ப்படும் இலக்குகளை அழித்தபடி சர்வதேச விமான நிலையத்தை நோக்கி, முன்னேறியது. மற்றைய அணி அவர்களுக்குப் பாதுகாப்பளிக்கும் கவச அணியாகச் செயற்பட்டது. அரச படையினரின் தாக்குதலை எதிர்த்துச் சமர் புரிந்த இவர்களில் இருவர் படையினரின் கண்காணிப்புக் காவல் கோபுரத்தில் ஏறி அங்கிருந்து படையினரின் விமானங்கள் மற்றும் ஆயுத வெடிபொருட்களஞ்சியம் என்பவற்றின் மீது தாக்குதலை மேற்கொண்டனர்.

இதன் போது, ஆயுதக் களஞ்சியங்கள் பாரிய சத்தத்துடன் வெடித்துச் சிதறியதோடு, பல விமானங்கள் அழிந்தும், சேதத்திற்கும் உட்பட்டன.

இதற்கிடையே சர்வதேச விமான நிலையத்தினுள் நுழைந்த தாக்குதல் அணியினர் தற்கொலைத் தாக்குதல் மூலமும் மற்றும் கனரக ஆயுதங்கள் கொண்டும் தாக்குதல் நடத்தி எயர்பஸ் ரக விமானங்கள் நான்கையும் மேலும் இரு பயணிகள் விமானங்களையும் அழித்தனர்.

நிலைமை இவ்வாறு இருக்க, விமானத் தளங்கள் மீது தாக்குதல் ஆரம்பித்த 20 நிமிடத்திற்குள் ஜனாதிபதிக்கு தகவல் அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதி உடனடியாகவே தனது வாசஸ்தலத்திற்கு அனைத்துப் படை உயர் அதிகாரிகளையும் வரவழைத்து தமது விசேட அணிகளை அனுப்பி தாக்குதலை முறியடிக்கும்படி கட்டளையிட்டார்.

இதுதவிர விடுமுறையில் சென்ற அனைத்துப் படை வீரர்களையும் உடனடியாகவே பணிக்குத் திரும்புமாறும் அழைப்புவிடுத்தார். சுமார் ஒரு மணிநேர காரசாரமான வாதங்களுக்குப்பின் ஜனாதிபதி மாளிகையே ஓர் போர்க்களமாக மாறி. தொலைபேசி வாயிலாக கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

சிக்கலான நேரங்களில் நிலைமையை கட்டுப்பாட்டில் கொண்டுவரவென அமெரிக்க விசேட பயிற்சி பெற்ற அணிகள் அரச படையிடம் உண்டு. இப் படைகள் தாக்குதல் களத்திற்குச் சென்ற போது, நிலைமைகள் யாவும் கட்டுமீறிப் போயிருந்ததுடன், தமது சகாக்களாலேயே தாக்குதலுக்கும் உட்பட்டனர். காரணம் தாக்குதல் அணியினரும் விமானப்படையினரின் சீருடையிலேயே இருந்ததினால் தமது சகாக்கள் யார், எதிரிகள் யார் என்று தெரியாமலே தாறுமாறாகத் தாக்குதல் நடத்தினர். இதன் போதே மேலும் ஆறு விமானங்கள் சேதத்துக்குள்ளாகின என்றும் கூறப்படுகின்றது.

விமான நிலைய பாதுகாப்புக்கென 1000ற்கும் மேற்பட்ட ஆயுதந்தாங்கிய வீரர்கள் இருந்த போதும், மேலதிகமாக விசேட பயிற்சி பெற்ற அணிகளும் களத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டும் சுமார் 6 மணி நேரங்கள் வரை நிலைமையை கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவர முடியவில்லை. 800 ஏக்கருக்கு மேற்பட்ட விமானத்தளப் பிரதேசத்தை விரல்விட்டு எண்ணக்கூடிய சில வீரர்கள் 6 மணிநேரம் தமது கட்டுப்பாட்டில் வைத்திருப்பதென்பது நினைத்துப் பார்க்கக்கூட முடியாத ஒன்றே.

நன்கு திட்டமிட்ட தாக்குதல் நடத்திய தாக்குதல் அணியினர் அதிகாலை நன்கு விடிந்த பிறகும்கூட, அதாவது, அரச படையினர் தளப் பிரதேசத்திற்குள் வந்துவிட்ட பிறகும் கூட மிக நிதானமாகச் சென்று படையினரின் மற்றுமொரு அன்ரனோவ் ரக இராணுவ விமானத்தை தற்கொலைத் தாக்குதல் மூலம் சிதறடித்தனர்.

ஆறு மணிநேரங்களுக்குள் மொத்தம் 27 விமானங்களையும், ஆயுதக் களஞ்சியம் மற்றும் எரிபொருள் தாங்கிகளையும் இழந்த நிலையில் வெற்றிகரமாகத் தாக்குதலை முறியடித்துவிட்டோம் என ஸ்ரீலங்கா அரச படைத்தலைமைப்பீடம் அறிவித்தது. இதில் கவனிக்க வேண்டியது யாதெனில் தாக்குதல் நடத்தியவர்களில் சிலர் தப்பியும் சென்று விட்டனர் என்பதே.

அரசு எவ்வளவோ முயன்றும் இழந்த விமானங்களின் தொகையை மறைத்துவிட முடியவில்லை. அவை படிப்படியாக வெளியே கசிந்துவிட்டன. இந்த எதிர்பாராத பேரிடியால் 4 கிபிர் விமானங்கள் (ஒன்று 3.8 மில்லியன் டொலர்) 2 மிக்–27 ரக விமானங்கள் (ஒன்று 2.8 மில்லியன் டொலர்), எம்.ஐ–24 ரக உலங்குவானூர்தி (ஒன்று 2.4 மில்லியன் டொலர்), எம்.ஐ–17ரக உலங்கு வானூர்தி (ஒன்று 2.2மில்லியன் டொலர்), கே–8 பயிற்சி விமானங்கள் 3 (ஒன்று 1 மில்லியன் டொலர்), பெல்–412 ரக உலங்கு வானூர்தி 2, அன்ரனோவ் ரக விமானம் – 1 என மொத்தம் 14 யுத்த விமானங்கள் முழுமையாக அழிந்தன.

மேலும் 4 கிபிர், 1 பெல் – 12, வி.ஐ.பி. உலங்கு வானூர்தி 2 என 7 படை விமானங்கள் இயங்கமுடியாத அளவு சேதத்தைச் சந்தித்தன.

இதைத் தவிர எயர்லைன்ஸுக்குச் சொந்தமான ஏ.340 ரக 'எயர்பஸ்' ரக விமானம் 2, ஏ. 330 ரக 'எயர்பஸ்' விமானம்–1, ஏ 320 ரக 'எயர்பஸ்' விமானம்–1, மேலும் இரண்டு பயணிகள் விமானம் உட்பட மொத்தம் 6 பயணிகள் விமானங்கள் அழிக்கப்பட்டன.

இதன்படி ஒட்டுமொத்தமாக 27 விமானங்களை ஸ்ரீலங்கா அரசு ஒரே தடவையில் இழந்துபோனது. இந்த இழப்பு ஸ்ரீலங்காவின் விமானங்களில் 50 சதவீதம் என்பது குறிப்பிடத்தக்கது.

இவ்விமானத் தளத் தாக்குதல்கள் மூலம் ஸ்ரீலங்கா அரசு தனது ஒரு வருட பாதுகாப்புச் செலவில் பாதிமடங்கிற்கு மேற்பட்ட தொகையை அதாவது, 4000 கோடி ரூபாய்களுக்கு மேற்பட்ட தொகையை 6 மணி நேரங்களில் இழந்துவிட்டதாக மதிப்பிடப்பட்டுள்ள போதும், இழப்பு இதைவிட அதிகம் என்றே ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.



இது ஒருபுறம் இருக்க விமானப் படையினரின் போரிடும் ஆற்றலில் 40 வீதம் இல்லாது ஒழிக்கப்பட்டு விட்டதென ஸ்ரீலங்கா அரசின் படை அதிகாரிகளே ஒத்துக்கொள்கின்றனர்.

# ஜூலை 24

கட்டுநாயக்க மீதான இந்தத் தாக்குதல் இரு இலக்குகளுடன் நடத்தப்பட்டிருக்கின்றது. ஒன்று ஸ்ரீலங்கா இராணுவத்தின் முதுகெலும்பான விமானப்படையினரின் பலத்தை மழுங்கடித்துவிடுவது. இரண்டு இலங்கையின் பொருளாதார மையத்தின் மீது அழிவை ஏற்படுத்தி பொருளாதார ரீதியில் அரசை ஆட்டங்காண வைப்பது.

இதனடிப்படையில் தாக்குதல் நடத்தியவர்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமான வெற்றியை பெற்றுவிட்டனர் என்றே கூறலாம். ஏனெனில் விமானப்படை பலத்தின் வேட்டைப் பற்களில் பாதியை வேருடன் பிடுங்கி எறிந்து விட்ட நிலையில், ஏற்கனவே குற்றுயிரும் குறையுயிருமாகவிருந்த ஸ்ரீலங்காவின் பொருளாதாரத்தை சேடமிழுக்கும் நிலைக்கும் தள்ளிவிட்டது இத் தாக்குதல். இது தவிர சங்கிலித் தொடராக பல கேள்விகளையும் எழுப்பிவிட்டதாகவே இத்தாக்குதல் அமைகிறது.

அதி உச்ச பாதுகாப்பு வலயத்தினுள் எவ்வாறு தாக்குதல் அணியினர் ஊடுருவினர்? கடுமையான வீதிப் பாதுகாப்புச் சோதனைகளையும் தாண்டி எவ்வாறு கனரக ஆயுதங்களை எடுத்தச் சென்றனர்? எங்ஙனம் துல்லியமாக வேவுத் தகவல்களைப் பெற்றனர்? என்பதுடன் வந்தவர்களில் சிலர் எவ்விதம் தப்பிச் சென்றனர்போன்ற கேள்விகளும் மிகச் சாதாரணமாகவே எழுகின்றன. அரச இராணுவ உளவியல் உட்கட்டுமானத்தை மிகப் பலமாகச் சிதைத்துவிட்ட இத்தாக்குதலானது, அரச புலனாய்வுத்துறையினரின் செயற்பாடுகளையும் கேள்விக்குறியாக்கி யுள்ளது.



அனைத்துலக இராணுவ வல்லுனர்களுமே இந்நுட்பமான தாக்குதலைக் கண்டு வியந்துபோயுள்ளதுடன், இத்தாக்குதலை, வியட்நாமில் 'வியட் கொங்' கெரில்லாக்கள் 1968 இல் தலைநகர் சைக்கோனுக்கு அருகே நடத்திய தாக்குதல் ஒன்றுக்கு ஒப்பிடுகின்றனர். இதுவே வியட்நாம் யுத்தத்தில் பெரும் திருப்புமுனையாகவும் அமைந்த தாக்குதல் என்பது குறிப்பிடத்தக்கது.

தாக்குதல் காரணமாக 5000 பேர் வேலை பார்க்கும் எயர்லைன்ஸ் நிறுவனம் தனது 195 விமானிகளில் 78 பேர் உட்பட ஏனைய பணியாளர்களில் சுமார் 2000 பேரை வேலையில் இருந்து நீக்க வேண்டிய கட்டாயத்திற்குத் தள்ளப்பட்டது.

காரணம் தனது உலக நாட்டு சேவையில் 12 சேவைகளை உடனடியாக இரத்துச் செய்தமையே. வெளிநாட்டு விமானிகளை பணியில் இருந்து விலகும்படி அறிவிக்கப்பட்டது இலங்கை வரலாற்றில் முதல்முறை என்பது குறிப்பிடத்தக்கது.

கட்டுநாயக்க தாக்குதலை அடுத்து சங்கிலித் தொடராக பல பிணக்குகள் எழத் தொடங்கின. வெளிநாட்டு விமானங்கள் ஸ்ரீலங்காவில் தரை இறங்குவதற்கான காப்புறுதிக் கட்டணங்கள் பல லட்சம் டொலர்களாக அதிகரிக்கப்பட்டன. இதே நிலையே ஸ்ரீலங்கா கப்பல் துறைமுக சபைக்கும் ஏற்பட்டது. இத்தாக்குதலின் எதிரொலி நாட்டின் சகல துறைகளிலும் எதிரொலித்தது எனலாம்.

உல்லாசப் பயணிகளின் வருகை திடீரென வீழ்ச்சியடைய அதை நம்பியுள்ள அனைத்து வருவாய்த்துறைகளும் வெறிச்சோடிப்போயின.

ஒட்டு மொத்தத்தில் சிங்களத் தேசியம் முழுவதையும் ஆட்டங்காணச் செய்துவிட்ட இத்தாக்குதல் ஸ்ரீலங்கா அரசிற்கும், வெளிநாடுகளுக்கும் பல செய்திகளைச் சொல்லி நிற்பதுடன் சிங்கள மக்களைச் சிந்திக்க வேண்டிய தேவைக்கும் தள்ளியுள்ளது.

இலங்கை இனப்பிணக்கிற்கு யுத்தம் ஒரு தீர்வல்ல என்பதும், வடக்கு கிழக்கு மட்டுமல்ல முழு இலங்கைத் தீவுமே எந்நேரமும் தாக்குதலுக்குட்படக் கூடிய யுத்தப் பிரதேசமே என்பதும், எவ்வளவுதான் இழப்பைச் சந்தித்தாலும் பேரினவாத அரசு யுத்தத்தையே தனது முடிவாகக் கொண்டு செயற்படுவதும் வெளிப்படை என்பதும் செய்திகளாக விரிகின்றன.

இதுதவிர ஸ்ரீலங்கா வான்படையின் அழிவில் தமிழ் மக்கள் எந்தளவு மகிழ்ச்சி கொண்டார்கள் என்பதன் அடிப்படையிலும் ஓர் செய்தி புலனாகின்றது. நவாலி, நாகர்கோயில், மாத்தளன் என நரபலி எடுத்த வானத்துக் கழுகுகள் அழியவேண்டும், தமது வானமும் மீட்கப்படவேண்டும் என்கிற ஆவலும் அவர்களுள் ஆழமாகப் பதிந்து கிடக்கின்றது என்கிற செய்தியே அது. இந்த விடிவின் ஓர் கட்டம் கட்டுநாயக்காவில் எழுதப்பட்டுவிட்டது. மிக விரைவிலேயே இது விரிவடைந்து வெற்றியின் உச்சத்தை தொடும் என்பதில் ஐயமில்லை.

சமாதானத்தின் தேவை பற்றிய செய்தியை சிங்களத் தேசியத்திற்கு மிக அழுத்தம் திருத்தமாக எடுத்துச் சொல்லியிருக்கிறது கட்டுநாயக்க மீதான இந்த அதிரடி. இனியும் சிங்களப் பேரினவாதம் சமாதானத்திற்கான யுத்தம் எனும் கோசத்தை எழுப்புமா? அல்லது தனது வேசத்தைக் கலைத்து சமாதானக் கரத்தை நீட்டுமா என்பதைப் பொறுத்தே ஸ்ரீலங்காவின் எதிர்காலம் குறித்த தலைவிதி நிர்ணயிக்கப்படும் என்பதில் சந்தேகமில்லை.

*–நன்றி, எரிமலை–*

*2001, ஜூலை*

# வெளிநாடுகளில் வேலைவாய்ப்பா?

இன்றைய நாட்டில் மனித வாழ்வுக்கு வளம் சேர்ப்பது பணமாகத்தான் இருக்கின்றது. பணம் இல்லாதவன் பிணம் என்று என்றோ சொல்லி வைத்தது போல், பணம் இல்லையெனில் வாழ்க்கையை ஓட்டுவது என்பது மிகவும் சிரமமான காரியம் ஆகிவிட்டது. அதனால் இந்தப் பணத்தைச் சம்பாதிக்க மனிதன் பல வழிகளில் அலைந்து திரிய வேண்டிய நிலையும் வந்து விடுகிறது.



எமது நாட்டில் தேயிலைக்கு அடுத்த படியாக பெரிய அளவில் ஏற்றுமதியாகும் பண்டம் பணிப் பெண்கள் என்று வேடிக்கையாகச் சொல்லப்பட்டதுண்டு. அந்த அளவுக்கு இலங்கையிலிருந்து பெருந்தொகையான பெண்கள் வெளிநாடுகளுக்குப் பயணமாகிவிடுகிறார்கள். புள்ளிவிவரங்களின்படி சவுதி அரேபியாவில் தான் அதிகமான இலங்கைப் பணிப் பெண்கள் இருக்கிறார்கள். இங்கு மாத்திரம் 420,000 பணிப்பெண்கள் இருக்கிறார்கள். அடுத்து வருவது குவைத். இங்கு 180,000 பெண்கள் பணிக்கு அமர்த்தப்பட்டு உள்ளார்கள். மூன்றாவது இடத்தை அரபு எமிரேட்ஸ் பெறுகிறது. இங்கு இருப்பவர்கள் 150,000 பணிப்பெண்கள். அடுத்து லெபனானில் 80,000 பேர் இருக்கிறார்கள்.

அண்மையில் பி.பி.ஸி இணையச் செய்தியொன்றில், இப்படி வேலைக்குச் செல்லும் பெண்களின் அவலம் பற்றிய தகவல் பிரபலமாகியிருந்தது. சவுதி அரேபியாவில் 3 மாதங்கள் பணியாற்றிய ஒரு பெண், தன் எஜமானனிடம் சம்பளத்தைத் தரும்படி கேட்டபோது, தனக்கு நேர்ந்த கொடுமையை விவரித்து இருக்கிறார். சூடாக்கிய இரும்பினாலோ அல்லது கத்தியினாலோ தனது உடம்பில் சூடு வைத்து தன்னைக் கொடுமைப்படுத்திய கதையை இவர் கூறியிருக்கிறார். தான் எந்தப்பிழையையும் செய்யவில்லை என்று பரிதாபத்தோடு கூறும் அந்தப் பெண், தன்னைக் கொடுமைப்படுத்திவிட்டு, விமானத்தில் ஏற்றி தாயகத்துக்கு அனுப்பிவிட்டார்கள் என்று அழுதபடி சொல்கிறாள்.

பணிப்பெண்களைக் கொடுமைப்படுத்தும் நபர்களை வேண்டப்படாதவர்கள் பட்டியலில் இட்டு லெபனான் அரசு நடவடிக்கை எடுத்தாலும், தன்னை வேலைக்கு அமர்த்திய முதலாளியின் 18 வயது மகன் தன்னைக் கற்பழித்த சோகக் கதையைக் கூறிக் கண்ணீர் வடிக்கிறார் இன்னொரு பெண். தான் அவனது படுக்கையறைக்குப் போனபோது, அறையைப்பூட்டிவிட்டு, தன்னைப் பலவந்தமாகக் கற்பழித்த கொடுமையை விவரிக்கிறார். உன் வயதொத்த மகன் எனக்கு இருக்கிறான். என்னை விட்டு விடு என்று கெஞ்சியும் தன்னை விட்டுவைக்கவில்லை என்று இவர் கூறி அழுகிறார். இதோடு அக்கிரமம் ஒழியவில்லை. இன்னொருநாள் அவனது நான்கு நண்பர்கள் அங்கு வந்து, தன்னை அறையில் பூட்டி வைத்து கற்பழித்தார்கள் என்று சொல்லும்போது, அவள் கண்களில் நீர் நிறைகிறது.

தான் இதுபற்றி அந்த இளைஞனின் தாயிடம் முறையிட்டபோது, வீட்டு வேலைக்கு அல்லாமல், ஒரு விபச்சாரியை வேலைக்கு அமர்த்தியதைப் போன்ற மனோபாவத்துடன் அவர்கள் பேசியிருக்கிறார்கள். தனக்குக் கருத்தடை மாத்திரைகளைத் தந்துவிட்டு விழுங்கச் சொல்லி, கர்ப்பமாகிவிடாதே என்று தன்னை அடித்ததாகவும் இந்தப் பெண்ணின் பரிதாபக்கதை தொடர்கிறது.

வேலை செய்யும் வீடுகளை விட்டு தப்பினோம், பிழைத்தோம் என்று ஓடி, நாடு திரும்பியிருக்கும் பெண்கள் தொகை இந்த வருடம், சென்றவருடத்தை விட அதிகமாகி இருக்கிறது. சென்ற வருடம் முதல் 8 மாதங்களில் 1,327 பெண்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பி இருந்தார்கள். இந்த வருடம் இதே கால கட்டத்தில் 1,492 பெண்கள் சொந்த மண்ணுக்குத்திரும்பி இருக்கிறார்கள். இப்படி வந்தவர்களில் 85 வீதமானவர்களுக்கு துன்புறுத்தல் அல்லது சம்பளம் கொடுக்கப்படாமையே காரணங்களாக இருக்கின்றன.

இலங்கை அரசு இந்தப் பணிப் பெண்களால் வரும் பெரிய வருடாந்த வருவாயை இழக்கவும் தயாராக இல்லை. என்னதான் பிரச்சினைகள் இருந்தாலும் வறுமையை நினைத்து, அங்கு படையெடுக்கும் பெண்கள் தொகையும் குறைந்தபாடாக இல்லை. பணிப்பெண்களுக்கு போதிய பயிற்சி அளிக்கப்படவில்லை என்றும் அரசு அபிப்பிராயப்படுகிறது. இங்கு நல்ல பயிற்சி அளிக்கப்பட்டால் பிரச்சினைகள் குறையலாம் என்றும் கருதப்படுகிறது. அடிப்படை அரபு மொழி அறிவும், சமையல் பணிகளில் நல்ல பயிற்சியும் அளித்து அனுப்பப்படுவது அவசியம் என்ற கருத்து நிலவுகிறது.

இந்தப் பயிற்சிகள் இருக்கட்டும். முக்கியமாகத் தற்பாதுகாப்புப் பயிற்சிகள் தான் இந்தப் பெண்களுக்குத் தேவைப்படுகிறது. ஆண்கள் தம் விருப்பப்படி கற்பழிக்க வரும் போது, அவர்களை ஒரே அடியில் மடக்கி முடமாக்கும் தற்பாதுகாப்புக்கலைகள் தான் இந்தப் பெண்களுக்கு இன்றைய நிலையில் அவசியம்தேவை. பணத்தின் தேவை இவர்களை பரிதவிக்க வைத்திருப்பது தான் சோகத்திலும் சோகமான விடயம்.

## வெந்தயத்தின் மருத்துவ குணங்கள்

பொதுவாக சமையலில் பெண்கள் சேர்த்துக்கொள்ளும் சுவையூட்டிகளில் வெந்தயமும் அடங்கும்.

பல்வேறு பாரம்பரிய மருந்துகளில் வெந்தயம் சேர்க்கப்படுகிறது.

வயிற்றுக்கோளாறுகளுக்கு வெந்தயம் சேர்த்து கொதிக்கவைத்த நீரைப் பருகலாம்.

ஆண்மைக்குறைவுக்கு வெந்தயத்தை அரைத்துக் குடிக்கலாம்.

வெந்தய இலையை குழம்புகளில் சேர்த்தால், மருத்துவச் சத்துகள் ஓரளவு கிடைக்கும்.

வெந்தயத்தில் புரோட்டீன், கார்போஹைதரேட், கரோட்டீன், போலிக் அசிட் போன்ற சத்துக்கள் உள்ளன. இவை அனைத்தும் உடல் சக்திக்கு அவசியமானவை.

வெந்தயத்துக்கு நீரிழிவைக் கட்டுப்படுத்தும் சக்தியும், கொழுப்பு வளர்ச்சியைத் தடுக்கும் சக்தியும் இருக்கின்றன. தினமும் 20 கிராம் வெந்தயம் சாப்பிட்டு வந்தால் இவைகள் கட்டுப்படும்.

மாதவிலக்கு பருவம் நிலைத்த பின்பு பெண்களுக்கு பல்வேறு உபாதைகள் ஏற்படுகின்றன. அ[illegible]ளை வெந்தயம் கட்டுப்படுத்தும்.

வெந்தயத்தை ஊறவைத்து அரைத்து தலையில் சேர்த்துக் குளித்தால் முடி நன்றாக வளரும். பொடுகுத் தொல்லையும் குறையும்.

### இவ்வார பொன்மொழி

தன்னால் எதையுமே செய்ய முடியுமென்று தன் மீது தளராத நம்பிக்கை கொண்டு எவன் கடுமையாக உழைக்கிறானோ அவனுக்கு எப்போதுமே வெற்றி கிடைக்கும் — பிராங்பா




## எந்த காயில் எந்தச் சத்து?

பொதுவாக ஒவ்வொரு காய்கறிகளிலும் ஒவ்வொருவிதமான சத்துக்கள் உள்ளன. ஆனால் புதிய காய்கறிகளாக நாம் அன்றாடம் வாங்கிச் சமைப்பதே சிறந்தது. காய்கறிகளை நறுக்கி வைத்து அதிக நேரம் கழித்து சமையலுக்கு பயன்படுத்துவது நல்லதல்ல. காய்கறியில் இருந்து கிடைக்கக் கூடிய சத்து இம்முறையில் வீணாகவே செய்கிறது.

எனவே, சத்துமிக்க காய்கறிகள் சிலவற்றை இன்று பார்ப்போம்.

வாழைக்காயில் இரும்புச் சத்துடன் மாவுச் சத்தும் அதிகம் உண்டு. அதனால் உடல் பருமனாகும் வாய்ப்பு அதிகம்.



கத்தரிக்காயில் சமைப்பதற்கு ஏற்றது பிஞ்சுக் கத்தரிக்காய் தான். தசைக்கும் இரத்தத்துக்கும் வலிமை தருகிற விட்டமின்கள் கத்தரிக்காயில் உள்ளன. இது வாய்வு, பித்தம், கபம் போகும்.

அவரைக்காயை சமைத்து உண்டால் உடலை உரமாக்கும். உஷ்ண உடம்புக்காரர்களுக்கு இது குளிர்ச்சி தர வல்லது. இரத்த அழுத்தம் உள்ளவர்கள் இதை தாராளமாக சாப்பிட்டு பலன் பெறலாம்.

பூசணிக்காயின் சுபாவமே குளிர்ச்சி தான். சிறுநீரைப் பெருக்கும். உடலை வலிமையாக்கும்.

வெண்டைக்காயின் சுபாவமும் குளிர்ச்சி தான். பிஞ்சுக்காயாக சமைத்து உண்டால் சத்து அதிகம். இதனுடன் சீரகம் சேர்த்து சமைக்கலாம். வறண்ட குடலை பதப்படுத்தும்.

சி, பி. வைட்டமின்களும் வெண்டையில் உள்ளன. உ[illegible] இருமல் குணமாகும். உடம்பில் அதிக வாயுவை கொண்டவர்களுக்கு இது வயிற்று வலியை ஏற்படுத்திவிடும்.

புடலங்காய் தேகத்தை வளப்படுத்தும். ஆனால் இது குளிர்ந்த உடம்பை கொண்டவர்களுக்கு ஆகாது. வயிற்றுப் பொருமல், வயிற்றில் பூச்சியையும் போக்கும்.

பாகற்காய் சூடு உண்டாக்கும் கறி வகையைச் சேர்ந்தது. இதில் கொம்பை பாகற்காய், மிதி பாகற்காய் என 2 வகைகள் உண்டு. இரண்டுமே நல்லவை. பருப்பு, தேங்காயுடன் சேர்த்துச் சமைத்தால் உண்பதற்கு சுவையாக இருக்கும். இது உணவுப் பையிலுள்ள பூச்சியை கொல்லும். பசியை தூண்டும், பித்தத்தைச் தணிக்கும், மலத்தை இளக்கும். நீரிழிவு நோயாளிகள் இதை அடிக்கடி உணவில் சேர்த்துக் கொள்வது நல்லது.

வாரத்துக்கு ஒரு தடவையாவது உண்ண வேண்டிய உணவுப் பட்டியலில் வாழைத்தண்டும் ஒன்று. உடம்பின் உஷ்ணத்தைப் போக்கும். வாதப் பித்தம், உஷ்ணம் தணிக்கும், கபம் நீக்கும். குடலில் சிக்கிய மயிர், தோல், நச்சுப் பொருட்களை வெளியேற்றி விடும்.

பலாக்காய்க்கு குளிர்ச்சி குணம் உண்டு. பலத்தையும், வீரிய புஷ்டியையும் தரும். மூளைக்கு வலு தரும்.

சத்துள்ள முருங்கைக் காய், உடலுக்கு வலிமை தரும். ஆனால் அதன் சுபாவம் சூடு ஆகையால் சூட்டுடம்புக்கு ஆகாது.

முருங்கை இலைகளில் இரும்பு, தாமிரம், சுண்ணாம்புச் சத்துக்கள் உள்ளன. இந்த இலைகளை நெய்யில் பொரித்து சாப்பிட்டால் இரத்தச் சோகை உள்ளவர்களின் உடம்பில் புது இரத்தம் ஊறும்.

காய்கறிகளில் மிகவும் எழுந்[illegible]விடுவது தக்காளி. உடம்புக்கு ஆரோக்கியம் தரும் மூன்று வித புளிப்புகள் தக்காளியில் உள்ளன.

விட்டமின் சி குறைவு காரணமாக சிலருக்கு உடலில் ஆங்காங்கே வீக்கம் காணப்படும். இதை சரி செய்யும் தன்மை தக்காளியில் உண்டு.

## நீண்ட நாள் வாழ...

நீண்ட நாள் வாழ யாருக்குத்தான் ஆசையில்லை?

ஆனால் ஆசைப்பட்டால் மட்டும் போதுமா? அதற்கான பயிற்சி முறைகளை எடுத்துக் கொள்ள வேண்டாமா?

ஆம். உடற்பயிற்சி செய்யுங்கள். கை, கால்களை மடக்கி உட்கார்ந்து செய்யும் பயிற்சிகளால் பசி தூண்டப்பட்டு அளவான சாப்பாட்டுக்கு மனம் தயாராகிவிடும்.

யோகாசனமும், உடற்பயிற்சியும் ஆயுளை அதிகரிக்கும். உடற்பயிற்சியினால் இதயம் பலம் பெறுகிறது. கொழுப்பால் சேர்ந்துள்ள அதிக கலோரி எரிந்து, மூட்டுக்களில் வலியும் ஏற்படாமல் தவிர்த்து விடலாம்.

மாரடைப்பு, இரத்த அழுத்தம் ஆகியவற்றால் இறப்பவர்கள் எண்ணிக்கை 33 சதவீதமாக உள்ளது. உடற்பயிற்சி செய்வதால், கொழுப்பு சரீரம் உருவாவது தடுக்கப்படுகிறது. உடற்பயிற்சி தொடரும்போது முற்றிலுமாக இது தடுக்கப்படும் வாய்ப்பு உள்ளது. இம் முறையில் நீரிழிவும் கட்டுப்படும். இரத்தக்கொதிப்பும் குறையும்.

கார், மோட்டார் சைக்கிள் போன்றவற்றாக[illegible] பயணம் செய்கிறவர்கள் மறவாமல் 'வாக்கிங்' போவதையும் வழக்கத்தில் வைத்திருங்கள். சைக்கிளில் தினமும் அரை மணி நேரப் பயணம் கூட ஆரோக்கியத்தின் திறவுகோல் தான்.

உடற்பயிற்சியானது நிமிர்ந்த கம்பீர தோற்றம் தரும். உடல் ஆரோக்கியத்தில் இயல்பாகவே ஒரு தன்னம்பிக்கை வந்துவிடும்.

குழந்தைப்பருவம் முதலே சின்னச் சின்ன உடற்பயிற்சி என தொடங்கி [illegible]பவர்களுக்கு உடல் பலவீனம் என்ற வார்த்தைக்கே அர்த்தம் தெரியாமல் போய்விடும். அந்த அளவுக்கு எப்போதும் சுறுசுறுப்பாக இருப்பார்கள்.

பிறகென்ன? ஆரோக்கியத்தின் விளைவு நீடித்த ஆயுள் தானே?

## வீட்டிலேயே நக ஒப்பனைக்கு...



பொதுவாக தம்மை அழகுபடுத்துவதில் மிகவும் அக்கறையோடு செயற்படுபவர்கள் பெண்களாகத்தான் இருப்பார்கள். அந்த வகையில் இது அழகோடு ஆரோக்கியத்தையும் பேணும் ஒரு வழிமுறையாகும். எனவே இன்று நக ஒப்பனை மூலம் கைகளை மேலும் எவ்வாறு அழகாக்கலாம் என்று பார்ப்போமா?

முதலில் நெயில் பொலிஷ் ரிமூவர் மூலம் நகப் பூச்சை அகற்றவும்.

கியூட்டிக்கல்களை வலுவாக்க கிரீமால் பொலிஷ் செய்யவும்.

ஒரு பாத்திரத்தில் வெந்நீர் எடுத்து அதில் ஷாம்பூவைக் கொஞ்சம் கலக்கவும். அதில் விரல் நகங்களை 5 நிமிடம் வைத்திருக்கவும். இதனால் கூடுதலான கிரீம் இருந்தால் அகன்றுவிடும். கைகளைத் துடைத்துக்கொள்ளவும்.

நகத்தை வெட்டி பைலை கொண்டு நகம் நெளிவு, வளைவாக இல்லாமலிருக்க நகத்தின் ஒரு முனை [illegible] தேய்க்கவும். [illegible] தேய்க்கவும்.

சூடான சவர்க்கார நீரில் கைகளை நனைக்கவும். பின் [illegible] கொண்டு நகத்தையும், விரலையும் சுற்றித் தேய்த்து அழு[illegible] நீக்கவும்.

நகங்களில் [illegible] கோட் தடவவும். பின் [illegible] பிடித்த நகச் சாயத்தைப் பூசவும். காய்ந்த பிறகு இரண்டாவது, மூன்றாவது தடவை பூசவும். பேஸ்கோட் பூசுவதால் நகச்சாயம் விரைவில் உரியாது.

[illegible] மென்மையாக காக்க [illegible] மறக்காமல் கிரீம் தடவவும்.

நகங்களை வலுவாக வைக்க புரோட்டீன் மற்றும் சத்துள்ள உணவைச்சாப்பிடவும்.

வெயிலில் செல்வதற்கு முன்பு முகத்துக்குத் தடவும் சன்ஸ்கிரீம் லோசனை கையிலும் மறக்காமல் தடவவும்.

# சிறார்களின் கைவண்ணம்




## அறிந்து கொள்ளுங்கள்

* மனிதனுடைய உயர வளர்ச்சி 22 வயதோடு நின்று விடுகிறது.
* பறக்க முடியாத பறவை வகையைச் சார்ந்தது நெருப்புக் கோழி.
* நமது உடலில் 230 மூட்டு இணைப்புக்கள் உள்ளன.
* எலியின் ஆயுட்காலம் 6 ஆண்டுகள் ஆகும்.
* நாள் தோறும் நம் கண்களில் இருந்து 13 சொட்டுக் கண்ணீர் சுரக்கிறது.
* புல் வகையைச் சார்ந்த மிகப் பெரிய முட்செடி மூங்கில் ஆகும்.
* நிமோனியா எனும் நோயினால் நுரையீரல் பாதிக்கப்படுகிறது.
* மனித உடலில் மிகப் பெரிய சுரப்பி மண்ணீரல்
* தலை மட்டும் பெரிதாக உள்ள பிராணி எறும்பு
* தெரு விளக்கில் படித்து விஞ்ஞானி ஆனவர் எடிசன்

*ந.சுஜந்தி, தரம் 8, மு/விசுவமடு மகா வித்தியாலயம்.*

## உங்கள் சிந்தனைக்கு

| | |
|---|---|
| மிக நல்ல நாள் - இன்று | நம்பக் கூடாதது - வதந்தி |
| மிக பெரிய வெகுமதி - மன்னிப்பு | ஆபத்தை விளைவிப்பது - அதிக பேச்சு |
| மிகவும் வேண்டாதது - வெறுப்பு | செய்யக் கூடாதது - உபதேசம் |
| மிகக் கொடிய நோய் - பேராசை | செய்ய வேண்டியது - உழைப்பு |
| கீழ்த்தரமான விசயம் - பொறாமை | உயர்வுக்கு வழி - உழைப்பு |
| மிகவும் சுலபமானது - குற்றம் காணல் | நழுவ விடக் கூடாதது - வாய்ப்பு |

**பிருந்தா ஜெகராசா, தரம் 9, கிளி/வட்டக்கச்சி மகா வித்தியாலயம்.**

## படித்துச் சுவைத்தவை

* கிடைக்கும் புகழைவிட விமர்சனத்தையே நேசி. அது எம்மை உயர்த்தும்.
* கால் இடறினால் காயம் ஏற்படும். வார்த்தை தவறினால் வம்பு விளையும்.
* சோம்பேறியாயிருப்பவன் வாழ்வில் என்றும் இன்பம் காண முடியாது.
* சத்தியம் தனியாகச் செல்லும். பொய்க்குத் துணை வேண்டும்.
* நல்லவர்களை நேசி கெட்டவர்களுக்கு உபதேசி.
* பணத்தைத் தேடு அதற்காக பாசத்தை அடகு வைக்காதே.
* அளவோடு உபதேசம் செய். அதிகமாய் உபதேசத்தைக் கேள்.
* அடுத்தவன் நல்லவனா என்பதை விட நான் நல்லவனா என பார்ப்பதே மேல்.

*வி.சுபாசினி, தரம் 10,*
*பொ/ஹெவன்/பி/த/க/வித்தியாலயம்.*

## சரித்திர ஆண்டுகள்

* பிரான்சியப் புரட்சி — 1719
* இரத்தம் சிந்தாப் புரட்சி இங்கிலாந்தில் எப்போது நடைபெற்றது — 1688
* கெபியஸ்கோப் உரிமை சாசனம் — 1689
* அமெரிக்கப் சுதந்திரப் பிரகடனம் — 1776
* வாட்டலூ யுத்தம் — 1815
* நெப்போலியன் இறப்பு — 1821
* நெல்சன் பிரான்சிய ஸ்பானிய கடற்படையை வெற்றி கொண்ட ஆண்டு — 1805
* வேர்செயில்ஸ் உடன்படிக்கை — 1919
* ஐ.நா (1 ஆவது) தோற்றம். இதற்கு சர்வதேச சங்கம் என பெயர் வழங்கப்பட்ட ஆண்டு — 1920
* சுயெஸ்கால்வாய் எகிப்திய பிரதம மந்திரி நாசரினால் தேசியமயம் ஆக்கப்பட்ட ஆண்டு — 1956
* முதலாவது செயற்கை கோளை உலகுக்கு ரஷ்யா ஏவியது எப்போது — 1957

***பா.பிரமிளா, யா/ உடுப்பிட்டி மகளிர் கல்லூரி.***

## வாழ்வில் உயர்ந்திட

* ஒருவன் உன்னைக் குழப்பவோ, வேதனைப்படுத்தவோ முடியாது நீ இடம் கொடுக்காதவரை.
* பணிவு என்பது தாழ்மையின் சின்னமல்ல. உயர்ந்த பண்பின் அறிகுறி.
* உன்னைப்பற்றி முதலில் நீயே அறிந்து கொள்.
* எந்த அவசரத்திலும் நிதானமாகச் செயற்படு. அப்பொழுதுதான் நேரான பாதையில் செல்வாய்.
* அதிகாரத்தினால் சாதிக்க முடியாததை அன்பினால் சாதிக்கலாம்.
* அன்பை வை ஆனால் அன்பின் விலையை கேட்பவனிடம் அல்ல.
* தோழமைக்கு உரிமை கொடு, கடமை நேரத்தில் தவிர்த்துக் கொள்.
* கற்றோர் சபையில் மற்றோர் மதிக்கத்தக்க வகையில் நடப்பதே நம் பெற்றோருக்கு செய்யும் கைமாறாகும்.

***த.ஷோபனா***
***தரம் 11,***
***மு/மல்லாவி மத். கல்லூ.***

## பொது அறிவு

1. முதலில் உலகத்தை சுற்றியவர்?
   மகலன்
2. உலகிலே மிக உயர்ந்த சிலை?
   தாய் நாட்டின் சிலை வோல் கிராட்
3. முதலில் எவரஸ்ட் சிகரத்தை எட்டியவர்?
   டென்சிங் (இந்தியா)
4. முதல் இயற்கைக் கோள்?
   ஸ்புட்னிக்
5. கடல் வழியாக முதலில் இந்தியாவை அடைந்தவர்?
   வாஸ்கொடகாம

***பூலோசன்.***
***கிளி/ புதுமுறிப்பு வி.ம.வித்தியாலயம்***

## கண்டு பிடியுங்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | 4 | 6 | 8 | 0 | 5 |
| 8 | 5 | 3 | 24 | 3 | 2 |
| 11 | 12 | 8 | 32 | 0 | 10 |
| 2 | 22 | 5 | 39 | 13 | 3 |
| 8 | 6 | 24 | 6 | 3 | 2 |
| 16 | 48 | 8 | 3 | 18 | 6 |

*அருகே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது போன்று [ 5 X 2 = 10, 11 X 2 = 22] உங்களால் உருவாக்கக் கூடிய பெருக்கங்களை ஒரு தபால் அட்டையில் எழுதி எமது கீழே உள்ள முகவரிக்கு அனுப்பி வையுங்கள். அவற்றில் அதிக கூடுதலான பெருக்கங்களை எழுதி அனுப்பும், ஐந்து பேரின் பெயர் விபரம் இப் பகுதியில் பிரசுரிக்கப்படும்.*

*ஜூன் 28, ஜூலை 04 ஆம் திகதி சுடர் ஒளி கண்டுபிடியுங்கள் பகுதியில் அதிக இலக்கங்களை எழுதி அனுப்பியவர்களின் பெயர்விபரம் வருமாறு:-*

*1. அ.அன்ரனிகுலிற், தரம் 8, யாழ்/ நாவாந்துறை வடக்கு றோமன் கத்தோலிக்க வித்தியாலயம். 2. கே.பிறூபா, தரம் 8 மட்டக்குளி பாத்திமா தேசிய பாடசாலை. 3. இ தினேஸ், தரம் 5, கம்புக்குளம், சல்மடுநகர். 4 இ.சிவப்பிரியா, தரம் 9, யாழ். வேம்படிக்குளி மகளிர் கல்லூரி. 5. சி. சுதன், சாவகச்சேரி இந்துக் கல்லூரி.*

*அனுப்பவேண்டிய முகவரி:-*

சுடர் ஒளி
"சிறுவர் பகுதி"
83, ஜெயந்த மல்லி மாரச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## ஊர் போற்றும் உத்தமன்

முன் ஒரு காலத்தில் அந்நீபம் எனும் நாட்டில் சேரன் என்ற ஏழை இருந்தான். அவனுக்கு மனைவியும், நிறையக் குழந்தைகளும் இருந்தனர். வறுமையில் வாடிய அவாகள் பசியும் பட்டினியுமாகவே காலத்தை கழித்தனர். தன்னிடம் உள்ள ஒரே மாட்டைவிற்று விட வேண்டும், அதில் வரும் தொகையைக் கொண்டு குடும்பத்தினர் சில மாதங்கள் பசி இல்லாமல் வாழலாம் என்று சேரன் நினைத்தான்.

மாட்டை நகரத்துக்கு கொண்டு சென்றான். அதை ஆயிரம் பணத்துக்கு விற்றான். நல்ல விலை கிடைத்தது என்ற மகிழ்ச்சியில் அந்த நகரத்தின் வழியே வந்து கொண்டிருந்தான். அப்போது அங்கொரு மேடையில் ஒருவனை தூக்கிலிட்டு கொல்வதற்காக அரசவீரர்கள் ஆயத்தமாகிக் கொண்டிருந்தனர். வேடிக்கை பார்க்க அங்கே பலர் கூடினர். அந்தக் கூட்டத்தில் சேரனும் இருந்தான்.



"அரண்மனையில் திருட முயன்ற திருடன் இவன். இவனைத் தூக்கிலிட்டுக் கொல்லுமாறு கட்டளை. யாராவது ஆயிரம் பணம் இழப்புத் தொகையைக் கொடுத்தால் இவன் விடுதலை பெறுவான். இது அரசரின் கட்டளை." என்று உரத்த குரலில் சொன்னான் ஒரு வீரன். அங்கிருந்து எவருமே அவனின் விடுதலைக்கு பணம் தர முன் வரவில்லை. அவனை தூக்கில் ஏற்ற வீரர்கள் தயாராகினார். அவனைப் பார்த்து இரக்கப்பட்டான் சேரன். தன் குடும்ப நிலையை மறந்தான்: மாடு விற்ற பணம் ஆயிரத்தைக் கொடுத்து அவனை விடுவித்தான்.

சேரனின் இச் செயல் ஊர் முழுவதும் பரவிவிட்டது. "எப்படிப்பட்ட முட்டாளா இவன் இருக்கிறான்" என்றெல்லாம் ஊர் சனத்தினர் அவன் காதுகளில் விழுமாறு பேசினர். வீட்டை நெருங்கினான்: வாசலில் நின்றிருந்த அவன் மனைவி "பசியுடன் இருக்கும் நம் குழந்தைகளுக்கு கொடுக்க என்ன செய்யப் போகிறீர்கள்? நம் குடும்ப நிலை தெரிந்தும் இப்படிச் செய்யலாமா? எனி நாம் என்ன செய்வோம்? சாவதைத்தவிர வேறு வழியில்லை" என்று கதறி அழுதாள.

"அழாதே என் கண்முன் ஒரு உயிர் பறிக்கப்படுவதை நான் விரும்பவில்லை" என்றான் அவன்.

அப்போ அந்நீப நாட்டு அரசன் சேரன் வீடு தேடி வந்து கொண்டிருந்தான். சேரன் பயந்தான்.

"என் நாட்டின் பிரஜையே பயப்பிடாதே! நீ உன் குடும்ப நிலையைக், கூட எண்ணாது பிற உயிரை காப்பாற்றி இருக்கிறாய். உன்னுடைய நல்லெண்ணத்துக்காக பரிசாக ஆயிரம் பொன் தந்தோம்" என்று அரசன் சேரனை புகழ்ந்து பரிசை அளித்துச் சென்றான்.

சந்தோசப்பட்ட சேரனும் பின்னாளில் அப் பொன்னை முதலாகக் கொண்டு வியாபாரம் செய்து பெரிய பணக்காரனாகி பிறருக்கும் உதவிகள் செய்து ஊர் போற்றும் உத்தமனாய் தன் குடும்பத்தோடு மகிழ்வாய் வாழ்ந்தான்.

***த.வினிதா***
***யா/மல்லாகம் மகா வித்தியாலயம்.***

# 3D D D D...



இந்த படம் வித்தியாசமானது. அதாவது நீங்கள் வழமையாகப் பார்க்கும் படங்கள் எல்லாம் நீளம் - அகலம் என்று இரு பரிமாணங்களைக் கொண்டவை. ஆனால் இது கொஞ்சம் முன்னேற்றகரமான படம்.

அதாவது நீளம் - அகலம் - ஆழம் என்பனவற்றை கொண்ட முப்பரிமாணப் படம் இது. ஆனால், இதனைப் பார்க்க வேண்டுமானால் கொஞ்சம் உங்கள் கண்களின் வில்லைகளை மாற்றிக் கொள்ள வேண்டும்.


மாற்றிக் கொள்வது என்றால் ஏதோ சத்திர சிகிச்சை செய்து மாற்றிக் கொள்வது அல்ல. மிகவும் சாதாரணமாக மாற்றிக் கொண்டால் போதும். அதாவது உங்கள் பார்வையை சுமார் 10 அடி தூரத்தில் உள்ள ஒரு சுவரை நோக்கித் திருப்புங்கள். அங்கே பார்த்தபடியே உங்கள் கைகளில் உள்ள இந்தப் படத்தை உங்கள் கண்ணுக்கு சுமார் ஒரு அடி தூரத்தில் வையுங்கள். ஆனால், உங்கள் கண்வில்லை 10 அடி தூரத்தையே பார்த்தபடி இருக்க வேண்டும். அதே பார்வையில் பார்த்தால் இந்த படத்தில் உள்ள 3Dஅமைப்பு தெரியும்.

அல்லது உங்கள் கண் இரண்டையும் திருப்பி உங்கள் மூக்கு நுனியைப் பாருங்கள். (அதாவது குழந்தைகளுக்கு உம்மாண்டி என்று சொல்லி மிரட்டுவோமே) அதே போல் உங்கள் கண்கள் இரண்டையும் மூக்குப் பக்கமாக திருப்பி - அப்படியே பாருங்கள். நாய்களும் - சேவல்களும் முன்னே நிற்க பின்னே கொஞ்சம் தொலைவில் ஏனைய காட்சிகள் தெரிகின்றன.

நீங்களும் கொஞ்சம் முயற்சி பண்ணிப் பாருங்கள். 3D தோற்றம் தெரிந்தால் எமக்குத் தெரிவியுங்கள் எமது கைவசம் உள்ள மேலும் பல 3D படங்களைத் தருகிறோம். தெரியவில்லையா? சரி... நாங்கள் உருப்படியான வேறு வேலையை பார்த்துக் கொண்டு போய்விடுகிறோம்.

# ஒளிந்திருக்கும் ஓவியம்

அருகே ஒரு நீர் வீழ்ச்சி ஓவியம். ஸ்பஷ்டமாகத் தெரிகிறது. பார்க்க அழகாக இருக்கிறது. ஆனால் இந்த நீர் வீழ்ச்சி ஓவியத்தின் உள்ளே அழகான பெண் ஒருத்தியுடன் ஒநாய் ஒன்றும் ஒளிந்திருக்கிறதே.... தெரிகிறதா? தெரியவில்லையா? கொஞ்சம் கூர்ந்து பாருங்கள் தெரியும். இப்போதும் தெரியவில்லையா? Sorry நீங்கள் பேப்பர் பார்ப்பதை நிறுத்திவிட்டு... உடனடியாக ஒரு கண் டாக்டரைப் பார்ப்பது மிகவும் நல்லது.



# ஓவியச் சிரிப்பு



வீதியிலே போக்கு வரத்து நெரிசல் அதிகம் போல் இருக்கிறது. அதனால்தான் கண் தெரியாத எனக்கு பாதை காட்டும் ஜிம்மி வீதிக்கு அந்தப்பக்கம் செல்ல.... நீண்ட நேரமாகிறது போலும்...

# கைங்கரியம்






கையை வைத்து நாமெல்லாம் ஒவ்வொரு கைங்கரியம் செய்து வருகிறோம். சாப்பிடுகிறோம், எழுதுகிறோம், உடம்பு அரித்தால் சொறிகிறோம், கோபம் வந்தால் யாருக்காவது நாலு சாத்து சாத்துகிறோம். இதுபோல் எத்தனை காரியங்கள் செய்கின்றோம்.


ஆனால் இதே கைகளுக்கு கொஞ்சம் வர்ணம் தீட்டி யானைபோல, குதிரை போல, நாய் போல, சிறகு விரித்துப் பறக்கும் பறவை போலவெல்லாம் விளையாட்டுக் காட்ட முடியும்.

கீழே உள்ள படங்களைப் பாருங்கள் அடடா.... கைகளைக் கொண்டு இத்தனை காட்சிகளா என்று பிரமித்துப் போவீர்கள்.













பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# முஸ்லிம் தனித்தரப்பு விவகாரத்தில் தனி வழி செல்லும் அதாவுல்லா

இலங்கையில் புரையோடிப்போயுள்ள இனப்பிரச்சினைக்கு, சமாதான வழி முறைகளில் தீர்வு ஒன்றைக் காண்பதற்காக, காலத்திற்குக் காலம் முயற்சிகள் எடுக்கப்பட்டு வந்தபோதிலும், கடந்த ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சிக்காலத்தில் மேற்கொள்ளப்பட்ட சமாதான முயற்சிகள் மிகவும் முக்கியமானவையாக அமைந்திருந்தன.

இந்த சமாதான முயற்சிகளை தற்போதைய ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசும் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கான நடவடிக்கைகளில் அக்கறை காட்டி வருகின்றது.

2001 டிசம்பரில் பதவிக்கு வந்த ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான ஐக்கிய தேசிய முன்னணி அரசு, இனப்பிரச்சினையில் பிரதான பாத்திரம் வகிக்கின்ற தமிழ் சமூகத்தின் ஏக பிரதிநிதிகளான தமிழீழ விடுதலைப்புலிகளுடன் போர் நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொண்டது.

அதனால் நீண்ட காலமாக வடக்கு – கிழக்கில் இடம் பெற்று வந்தயுத்தம் முடிவுக்கு வந்தது. அத்துடன் நாடு முழுவதும் அமைதிச் சூழல் ஒன்று ஏற்பட்டது. கடந்த இரண்டரை வருடங்களுக்கு மேலாக, இன்று வரை அந்த அமைதிச்சூழல் நீடித்து – நிலைத்திருப்பதானது, மக்கள் மத்தியில் நிம்மதிப் பெருமூச்சையும், நம்பிக்கையையும் உருவாக்கி இருக்கிறது.

முன்னைய சமாதானப் பேச்சுக்களின் போது முஸ்லிம் தனித்தரப்பு விவகாரம் பல்வேறு மட்டங்களிலும் பேசப்பட்டு வந்தது. சமாதான முயற்சிகளில் ஏற்பட்ட சர்ச்சைகளுள் தனித்தரப்பு விடயம் முன்னிலை வகித்தது.

அரசு – புலிகள் பேச்சுக்களுக்கு முஸ்லிம் தனித்தரப்பு கோரிக்கை இடையூறாக – குந்தகமாக அமைந்திருக்கிறது என தமிழ் தரப்பினால் குற்றம் சுமத்தப்பட்டது. சமாதானப் பேச்சுக்களைக் குழப்புவற்காகவே முஸ்லிம் தலைவர்கள் தனித்தரப்பு கோரிக்கையை முன்வைத்திருக்கின்றனர் என தமிழ் தலைவர்களுள் சிலர் பகிரங்கமாகக் கண்டித்தனர்.

தாய்லாந்து முதல் நோர்வே வரை இடம் பெற்ற ஆறுசுற்று சமாதானப் பேச்சுக்களிலும் அரசு தரப்பும் புலிகள் தரப்பும் நேரடிப் பேச்சுக்களில் ஈடுபட்டன. முஸ்லிம் சமூகமும் ஒரு தரப்பாகப் பேச்சுக்களில் கலந்து கொள்வதற்கு அனுமதி கிடைக்கவில்லை.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், அமைச்சர் என்ற வகையில் அரசு தரப்பில் பேச்சுக்களில் பங்குபற்றியிருந்தார். ஆனால், அதனை முஸ்லிம்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அரச பிரதிநிதியாகக் கலந்து கொள்கின்ற ரவூப் ஹக்கீமால் முஸ்லிம்களின் பிரச்சினைகள் மற்றும் உரிமைகள் தொடர்பாக காத்திரமான பங்களிப்பை வழங்க முடியாது என முஸ்லிம் சமூகம் கருதியது.

சமாதானப் பேச்சுக்களில் அரசு, புலிகள் தரப்புகளுக்கு நிகராக முஸ்லிம் பிரதிநிதிகளும் சமத்துவத்துடன் பங்குபற்றுவதையே முஸ்லிம்கள் விரும்பினர். அதற்காக ஏகோபித்த நிலையில் முஸ்லிம் தலைவர்களும், அமைப்புக்களும் குரல் எழுப்பி வந்தனர்.

அந்த விவகாரமே ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் உடைவதற்கும் காரணமாக அமைந்தது.

சமாதானப் பேச்சுக்கள் ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னதாக தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நேரடிப் பேச்சு நடத்துவதற்கு ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. புலிகளே அதற்கான அழைப்பை விடுத்தனர்.

அதன் அடிப்படையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம், அரசியல்துறைத் தலைவர் சு.ப. தமிழ்ச் செல்வன் உள்ளிட்ட தலைவர்களை முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான குழுவினர் 2002 ஏப்ரல் 13 ஆம் திகதி, கிளிநொச்சியில் சந்தித்துப் பேசினர்.

அப்போது இருதரப்பினரும் இணைந்து கூட்டறிக்கை ஒன்றையும் வெளியிட்டனர். அதில் முஸ்லிம் தனித்தரப்பு விடயமும் உள்ளடக்கப்பட்டிருந்தது. சமாதானப் பேச்சுக்களின்போது முஸ்லிம் பிரதிநிதிகளும் ஒரு தரப்பாக பங்குபற்றுவர் என கூட்டறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனினும் முதலாம் கட்ட சமாதானப் பேச்சுக்கள் தொடக்கம் ஆறாம் கட்டப் பேச்சுக்கள் வரை முஸ்லிம் பிரதிநிதிகள் தனித்தரப்பாகப் பங்குபற்ற முடியவில்லை.

இதனால் முஸ்லிம் சமூகத்துக்குள் கொந்தளிப்பு நிலைதோன்றியது. பல்வேறு ஆர்ப்பாட்டங்கள் மற்றும் கண்டனக் கூட்டங்கள் என பல வழிகளிலும் முஸ்லிம் தனித்தரப்பு கோரிக்கை வலியுறுத்தப்பட்டது.

முஸ்லிம் தனித்தரப்பு கிடைக்காததையிட்டு முஸ்லிம் காங்கிரஸ் மீதும், அதன் தலைவர் ஹக்கீம் மீதுமே கண்டனக் கணைகள் பாய்ந்தன. அதனைக் கட்சிக்குள் இருந்த சில சிரேஷ்ட உறுப்பினர்களும் தமக்கு வாய்ப்பாகப்பயன்படுத்தி கொண்டனர்.

அப்போது கட்சியின் தவிசாளராகப் பதவி வகித்த அமைச்சர் அதாவுல்லா, முஸ்லிம் தனித்தரப்பு விடயத்தில் தலைவர் ஹக்கீமைக் கண்டிப்பதில் முன்னிலை வகித்தார்.

முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், ஐ.தே.க.அரசுக்கும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் சோரம் போய்விட்டார் என அதாவுல்லா தலைமையிலான குழுவினர் குற்றஞ்சாட்டி வந்தனர்.

– அஸ்லம் எஸ்.மௌலானா –

சமாதானப் பேச்சுக்களில் தனித்தரப்பாக பங்குபற்றும் அங்கீகாரத்தைப் பெற முடியாத ஹக்கீமினால், முஸ்லிம்களின் உரிமைகளை எவ்வாறு பெற்றுத்தர முடியும் என அவர்கள் கேள்வி எழுப்பினர்.

அதனால், கட்சித்தலைவர் ரவூப் ஹக்கீம் ஒஸ்லோ பேச்சுக்களில் பங்குபற்றிக் கொண்டிருந்த வேளையில் அதாவுல்லா கட்சிக்குள் கிளர்ச்சியை ஏற்படுத்தினார்.

முஸ்லிம் காங்கிரஸின் எம்.பிக்களில் ஏழு பேரையும், அரசியல் அதியுயர்பீட உறுப்பினர்களில் 13 பேரையும் தன்பக்கம் ஈர்த்துக் கொண்டு, அதிரடிக் கூட்டம் ஒன்றை நடத்தி, ஹக்கீமை, அப்பதவியிலிருந்து வெளியேற்றினார்.

பின்னர் ரவூப் ஹக்கீம், நீதிமன்றம் சென்று, கட்சியை மீளப்பெற்றுக் கொண்டார். எவ்வாறாயினும் கட்சி பிளவுபடுத்தப்பட்டதும், அஷ்ரப் காங்கிரஸ் என்று பெயரில் புதிய அமைப்பு ஒன்று உருவானதும் தனித்தரப்பு விவகாரத்தின் எதிரொலியே.

அதாவுல்லா அணியினர் ரவூப் ஹக்கீமுக்கு எதிராக சுமத்தியிருந்த 36 குற்றச்சாட்டுகளுள் முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பிலும், தனித்தரப்பு விடயத்தில் அவர் விட்ட தவறுகளே சுட்டிக்காட்டப்பட்டிருந்தன.

ஆனால், ஐக்கிய மக்கள் சுதந்திரக்கூட்டமைப்பு அரசில் முக்கிய அமைச்சுப் பொறுப்புக்களை வகிக்கும் அதாவுல்லா தற்போது தனித்தரப்புக்கு புதிய அர்த்தம் கற்பித்துக் கொண்டிருக்கிறார்.

''அரசும், புலிகளும் பேச்சு நடத்தும் மேசையில் முஸ்லிம் பிரதிநிதிகள் அமர வேண்டிய அவசியம் இல்லை. அரசுடன் மட்டும் பேசினால் போதுமானது'' என அமைச்சர் அதாவுல்லா இப்போது கூறி வருகின்றார்.

''அரசும், புலிகளும் என்ன பேசுகிறார்கள் என்பதோ, புலிகளுக்கு அரசு எதனைக் கொடுக்கப்போகிறது என்பதோ எமக்கு முக்கியமல்ல. அதேவேளை புலிகளுடன் பேச வேண்டிய அவசியமும் முஸ்லிம்களுக்குக் கிடையாது'' எனவும் இவர் தெரிவிக்கின்றார்.

அதாவுல்லாவின் இப்புதிய நிலைப்பாடும், அறிவிப்பும் தன்னைத் தற்காத்துக் கொள்வதற்கான யுக்தி என்றே உணர முடிகின்றது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரத்துங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில், முஸ்லிம் தலைவர்களுள் ஒருவராக இருக்கின்ற அமைச்சர் அதாவுல்லாவே இன்றைய நிலையில் முஸ்லிம் சமூகத்துக்கு பதிலளிக்கும் கடப்பாட்டில் இருந்து கொண்டிருக்கிறார். அதனால் தன் மீதான விமர்சனங்கள் எழ முன்னரே, அவர் பரிகாரம் தேட முற்படுகிறார்.

தற்போது இடைநிறுத்தப்பட்டிருக்கின்ற சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிப்பதற்கான முயற்சிகள் இடம்பெற்று வருகின்றன. புலிகளுடன் மட்டுமே அரசாங்கம் பேச்சு நடத்தும் என ஜனாதிபதி அறிவித்தும் விட்டார்.

அதேவேளை, முஸ்லிம் தனித்தரப்புக் கோரிக்கையும் மீண்டும் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் முஸ்லிம் தனித்தரப்புக்கான அங்கீகாரத்தைப் பெற வேண்டிய தார்மீகக் கடமை அரசில் அங்கம் வகிக்கும் அமைச்சர்களான பேரியல் அஷ்ரப்பையும், அதாவுல்லாவையுமே சாரும்.

ஆனால், இருவருமே அக்கோரிக்கையை வென்றெடுப்பதற்குத் தயாராக இல்லை. அவர்கள் நழுவல் போக்கினையே கடைப்பிடித்து வருகின்றனர். அரச தரப்பில் கூட ஒரு முஸ்லிம் பிரதிநிதியை இடம்பெறச் செய்வதற்கும் அவர்களால் முடியாது.

முஸ்லிம்களின் உரிமைகள் தொடர்பில் ரவூப் ஹக்கீம் ஐ.தே.மு. அரசில் அங்கம் வகித்த போது செய்த பணிகளைக் கூட இவர்களால் செய்ய முடியாதிருப்பதையே இன்று அவதானிக்க முடிகின்றது.

அந்த வகையில் தன் மீதான குற்றச்சாட்டுக்களை மூடி மறைத்து, அப்பிரச்சினையை திசை திருப்புவதற்காகவே அமைச்சர் அதாவுல்லா தனித்தரப்பு விவகாரத்தை மறுதலிக்க முற்படுகிறார். அதனாலேயே அரசு – புலிகள் பேச்சுக்களில் முஸ்லிம்கள் கலந்து கொள்ளத் தேவையில்லை எனப் புதுக் கதை சொல்கிறார்.

அதாவுல்லாவின் இந்த நிலைப்பாடு சரி எனக் கருதினால், அதனைக் கடந்த அரசாங்க காலத்தில் சொல்லியிருக்கலாம். அதன் மூலம் பல்வேறு அனர்த்தங்களைத் தடுத்திருக்க முடிந்திருக்கும். முஸ்லிம் காங்கிரஸும் பிளவு பட்டிருக்காது.

## வயசு வந்தாச்சு

(04 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மூன்று பாடங்களிலுமே சாதாரண சித்தி தான் பெற்றிருந்தாள். அதுவே அவளுக்குப் போதுமென்றிருந்தது.

வவுனியாவிலுள்ள மாமாவின் உதவியுடன் தனியார் வங்கி ஒன்றில் வேலைக்குச் சேர்ந்தாள். அவளுக்கும் யாழ்ப்பாணத்தில் இருப்பதை விட வவுனியாவில் இருப்பது மனதிற்குப் பிடித்திருந்தது.

அங்கிருந்து லீவு நாட்களில் யாழ்ப்பாணம் வருவதும் போவதும் அவளுக்கு சாதாரணமாகிவிட்டது.

* * * *

பஸ் ட்ரைவர் பிரேக் போட்டதும் அவளது சிந்தனை கலைந்தது. தனது பைகளைத் தூக்கிக் கொண்டு இறங்கி சோதனைகளை முடித்துக் கொண்டு யாழ்ப்பாணம் செல்லும் பஸ்ஸைப் பிடித்து ஒருவாறு வீடு போய்ச் சேர்ந்தாள். அங்கே எல்லோரும் அவளைக் கண்டதும் கூடி விட்டனர்.

''என்ன தணி இப்பதானே வந்திட்டுப் போனே அதுக்குள்ள மறுபடியும் வந்திருக்கிறாய். ஏதாவது உடம்பு சரியில்லையா'' என அம்மா அக்கறையுடன் நெற்றியைத் தொட்டுப் பார்த்து கவலையுடன் வினாவினாள்.

''அதெல்லாம் ஒன்றும் இல்லையம்மா. உங்களையெல்லாம் பார்க்க வேண்டும் போல் இருந்தது அதுதான் வந்திட்டன். ஆமா அப்பா எங்கம்மா?''

''அவரு வெளில போயிருக்கிறார். நீ குளிச்சிட்டு வா சாப்பிடலாம்''

அவள் வந்து இரண்டு நாட்கள் ஆகிவிட்டன. மூன்றாம் நாள் எல்லோரும் உறவினர் ஒருவருடைய திருமணத்திற்குச் சென்று விட்டனர். தணிகா தனக்கு தலைவலிப்பதாக கூறி வீட்டிலே நின்றாள். உண்மையில் அவளுக்கு அப்போது தனிமை தேவைப்பட்டது.

இன்னுமா ராஜ் மனம் மாறவில்லை. ஒரு வேளை அவர் வேற யாரை யாவது காதலிக்கிறாரோ. சீச்சீ அப்படி ஒன்றும் இருக்காது என யோசித்துக் கொண்டிருக்கும் போதே வாசலில் மோட்டார் சைக்கிள் சத்தம் கேட்டது.

யாரென்று கதவைத் திறந்தவள் வாசலில் ராஜ் நிற்கவும்தலையைக்குனிந்த படியே ''வீட்டில யாரும் இல்லை'' என்றாள்.

''தெரியும் நான் உன்னைப் பார்க்கத்தான் வந்தேன்'' என அவன் கூறியதும் சட்டென நிமிர்ந்து அவனைப் பார்த்தாள்.

''ஆமா தணி உன்னோட வைராக்கியம் எனக்குப் பிடிச்சிருக்கு. உன் காதலையும் நான் புரிஞ்சுக் கிட்டேன். நீ ஜெயிச்சிட்டே தணி. அன்னிக்கு நான் உங்கிட்ட அப்படி பேசினதுக்கு மன்னிப்புக் கேட்டுக்கிறேன்'' என்றான் அவன். அவள் கண்களில் கண்ணீர் மல்கியது.

''ராஜ் நீங்க என்னைப் புரிஞ்சுக்க நான்கு வருடம் தேவைப்பட்டிருக்கு. இப்பவாவது எனக்கு காதலிக்கிற வயசு வந்தாச்சா?'' என கண்களில் குறும்புடன் அவனைப் பார்த்தாள்.

''ஆமா தணி'' என்றவாறே அவளை மெதுவாக மார்பில் அணைத்துக்கொண்டான்.

சுபம்!!!

## உங்களுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எப்பேர்ப்பட்ட வியாதியானாலும் சரி, உடனே என்னை வந்து சந்தியுங்கள்



K. சிவசுப்பிரமணியம்
M.I.H.Ind-S.M.P.

எவ்வளவு நாட்பட்ட வியாதியானாலும் சரி, காலதாமதம் செய்யாமல் கீழ்க் கண்ட வியாதிகளுக்கு நேரில் கண்டு ஆலோசியுங்கள். நேரில் வரமுடியாது போனால் கடிதமூலம் தெரிவித்துக் கொள்ளுங்கள்.

ஆஸ்மா, க்ஷயம், இளைப்பு, பீனிசம், தலைவலி, மலேரியா, கண்டமாலை, சொறி, சிரங்கு, பாண்டு, சோகை, காக்கை வலிப்பு, வாதம், நீரிழிவு, மூலரோகங்கள், இருதய நோய்கள், இடுப்புவலி, நெஞ்சு எரிவு, குடல் வாய்வு, நரம்புத்தளர்ச்சி, வீரியக்குறைவு, இரத்தமின்மை, சொப்பன ஸ்கலிதம், பெண்களுக்கு ஏற்படும் சூதக வாய்வு, மாசம் முன், பின் காணுதல், சூதகவலி, பிள்ளை இல்லாமலிருத்தல் மற்றும் குழந்தைகளுக்கு ஏற்படும் சகல வியாதிகளுக்கும் உத்தரவாத சிகிச்சை அளிக்கப்படும்.

RAJA BAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜ வஜீகரண (ரசாயன) லேகியம்

(முஸ்லிம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)



சாலாமிசிரி, பாதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்துத் தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுதுணையானது. ஸ்திரி, புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி, தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி, சுறுசுறுப்பையும், தேகாந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும், மூலச்சூட்டைப் போக்கும், இருமல், மார்பு, இடுப்பு வலி, கால், கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட்பிரஷர் உள்ளவர்களுக்கும் சிறுவர், சிறுமியருக்கும் சிறந்தது.

நாட்பட்ட பீனிசம், இளைப்பு, இருமல், மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம். பத்தியமில்லை.

500 gram 300/-, 250 gram 150/-
வி.பி.பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.

வார நாட்களில் காலை 9 மணி முதல் மாலை 6 மணி வரையிலும் விடுமுறை தினங்களில் காலை 9 மணி முதல் 12 மணி வரையிலும் வைத்தியரைச் சந்திக்கலாம்.

Ayur Dr. K. Sivasubramaniam, முருகானந்தா வைத்தியசாலை
G/02, கொழும்பு மத்திய சுப்பர் மார்க்கட், மீன்கடை மேல் (நிலமாடி)
கொழும்பு – 11. Tel: 2384645.

# இலங்கை வீரர் வெத்தமுனிக்கு 'கிரிக்கெட் ஒஸ்கார்' விருது!

லண்டனில் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் வழங்கப்படவுள்ள 'கிரிக்கெட் ஒஸ்கார்' விருதுகளுக்கான வீரர்களின் பட்டியலில் இலங்கையின் முன்னாள் வீரர் சிதத் வெத்தமுனி இடம்பெற்றுள்ளார்.

உலகின் தலைசிறந்த கிரிக்கெட் வீரர்களைக் கௌரவிக்கும் முகமாக சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையினால் வழங்கப்படும் இவ்விருதுகளுக்கு கிரிக்கெட் அரங்கின்தலை சிறந்த 10 வீரர்களின் பெயர் அறிவிக்கப்பட்டுள்ளது.

இவ்விருதுகளுக்காக அறிவிக்கப்பட்டுள்ள 10 முன்னாள்கிரிக்கெட் வீரர்களின் விவரங்கள் வருமாறு:—

சிதத் வெத்தமுனி (இலங்கை), சுனில் கவாஸ்கர்(இந்தியா), கப்பில்தேவ் (இந்தியா), இயன்ஹீலி(அவுஸ்திரேலியா), மார்ட்டின் குறோஷ்(நியூஸிலாந்து), டேவிட் ஹன்டன் (ஸிம்பாப்வே), கிரஹம்பொலக்(தென்னாபிரிக்கா), பெரி ரிச்சட்ஸ் (மேற்கிந்தியத்தீவுகள்) ஆகியோருடன் இரு பிரபல பத்திரிகையாளர்களான ராஜன் பாலா (ஏசியன் ஏஜ் – இந்தியா), ரொனி கொஸியர் (ஊடக வர்ணனையாளர் மேற்கிந்தியத்தீவுகள்) இக்குழுவில் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

அத்துடன், கிரிக்கெட் ஜாம்பவான்கள் மற்றும் ஊடகத்தை உள்ளடக்கிய முதன்மைக் குழுவினருடன் மொத்தமாக 25 பேர் இக்குழுவில் இடம்பெறவுள்ளனர். அவர்களில் முதல் கட்டமாக இந்த 12 பேரும் சேர்க்கப்பட்டுள்ளனர்.


இவ்விருது வழங்கும் நிகழ்வில் வருடத்தின் சிறந்த கிரிக்கெட் வீரர், வருடத்தின் சிறந்த ஒரு நாள் வீரர், வருடத்தின் சிறப்பாக வளர்ந்து வரும் வீரர், வருடத்தின் சிறந்த டெஸ்ட் அணி, வருடத்தின் சிறந்த ஒரு நாள் அணி மற்றும் சிறந்த ஆட்ட நடுவர்களுக்கும் விருதுகள் வழங்கப்படவுள்ளன.

மேலும், இவ்விருது வழங்கும் விழா லண்டன் அலெக்ஸாண்ட்ரா அரண்மனையில் செப்டெம்பர் 7 ஆம் திகதி நடைபெறும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இவ்வைபவத்தில் சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் அனைவரும் அழைக்கப்படுவதுடன், விருது வழங்கும் வைபவம் உலகம் முழுவதும் நேரடி ஒளிபரப்புச் செய்யப்படும் என சர்வதேசக் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபை தெரிவித்துள்ளது.

# ஏதென்ஸ் ஒலிம்பிக்குக்கு குறிவைக்கிறார் விம்பிள்டன் நாயகன் ரோஜர் பெடரர்!

விம்பிள்டன் டெனிஸ் தொடரில் இந்த ஆண்டு ஒற்றையர் இறுதி ஆட்டத்தில் சுவிட்சர்லாந்தில் ரோஜர் பெடரர் சாம்பியன் பட்டம் வென்றார். அவரிடம் உங்களின் அடுத்த இலக்கு என்ன என்று கேட்டபோது... 'ஏதென்ஸ் ஒலிம்பிக்ஸ்' தான் தனது அடுத்த இலக்கு என்று கூறினார்.

மேலும், தொடர்ந்து அவர் கூறியதாவது:— கடந்த சிட்னி ஒலிம்பிக் போட்டியில் அரையிறுதி வரை முன்னேறினேன். எனவே, ஏதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வெல்லும் வாய்ப்பு கிடைக்கும்மென உறுதியாக



நம்புகிறேன். அங்கு வெல்லும் வாய்ப்பு எனக்கு கிடைக்காவிட்டாலும் என் தோழியை சந்திக்கும் வாய்ப்பு கிடைக்கும். நாங்கள் இருவரும் சேர்ந்து மகிழ்ச்சியாக இருக்க திட்டமிட்டுள்ளோம். இந்த கொண்டாட்டங்களோடு பதக்கம் பெறவும் முயற்சி செய்வேன் என்றார் பெடரர்.

மேலும், விம்பிள்டன் டெனிஸ் தொடரின் ஆரம்ப நிலையிலேயே வெளியேறிய முன்னணி வீராங்கனை மார்டினா நவரத்திலோவாவும், ஏதென்ஸ் ஒலிம்பிக் போட்டியில் இரட்டையர் ஆட்டத்தில் தங்கம் வெல்வதன் மூலம் தனது டெனிஸ் சாதனையைத் தொடர விரும்புவதாக தெரிவித்துள்ளார்.

# பாக். அணித் தலைவராகும் ஆசையில் சொயிப் அக்தர்

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான சொயிப் அக்தருக்கு தற்போது அணித் தலைவராகும் ஆசை வந்துவிட்டது.



ஆசியக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் கலந்து கொள்ளும் பாகிஸ்தான் அணியில் அக்தர் இடம் பெறுவதே கேள்விக்குறியாக இருந்தது. அவரது உடல்தகுதி மற்றும் பந்து வீசுவதில் அவரின் திறமைகள் போன்றவை காரணமாக பாகிஸ்தான் அணியில் அவரை இணைத்துக் கொண்டனர்.

இத்தனை சிக்கல்கள் இருந்த போதிலும், அவருக்கு பதவி ஆசை மட்டும் குறையவில்லை. இது குறித்து அவர் கருத்துத் தெரிவிப்பதாவது:—

பாகிஸ்தான் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச்சபை விரும்பினால் பாகிஸ்தான் அணியின் தலைவராக பதவியேற்கத் தயார். அதற்காக நான் பதவி ஆசை பிடித்து அலைவதாக நினைக்கக் கூடாது. எனக்கு அணித்தலைவர் பதவிமீது ஆசைகிடையாது. அதேநேரத்தில் எனக்கு அணித் தலைவர் பதவி கொடுக்கப்பட்டால் சிறப்பாக ஆடி அணிக்கு வெற்றியைத் தேடித்தருவேன். அனைத்து வீரர்களுடனும் சுமூகமான முறையில் பழகி அணியை வெற்றிப் பாதையில் அழைத்துச்செல்வேன் எனக் கூறினார்.

மேலும், எனக்கு அணித்தலைவராக ஆகும் தகுதி இருக்கிறது. எனவேதான் இந்த கருத்துக்களை நான் அடக்கமாக கூறுகிறேன் என்கிறார் சொயிப் அக்தர்.

## சொற்சிலம்பம் போட்டி இல.118

**சொற்சிலம்பம் 118 போட்டிக்கான விடைகளை எழுதி அனுப்பி வைக்க வேண்டிய கடைசித் தினம் ஆகஸ்ட் 02ஆம் திகதி ஆகும். விடைகள் ஆகஸ்ட் 09 ஆம் திகதி சுடர்ஒளியிலும், வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் ஆகஸ்ட் 16ஆம் திகதி சுடர் ஒளியிலும் பிரசுரமாகும். சொற்சிலம்பம் போட்டி இல.116க்கான விடைகள் அருகே தரப்பட்டுள்ளன.**

**தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டுமே ஏற்றுக்கொள்ளப்படும். தபாலட்டை கிடைக்காத பட்சத்தில் தபால் அட்டையின் அளவில் ஒரு கடதாசி அட்டையை வெட்டி, அதில் கூப்பனை ஒட்டி அனுப்புங்கள். முதலாவது பரிசாக 250 ரூபாவும் இரண்டாவது பரிசாக 150 ரூபாவும் மூன்றாவது பரிசாக 100 ரூபாவும் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.**

அனுப்பவேண்டிய முகவரி:
'சுடர் ஒளி'
85, ஜெயந்த மல்லி மாராச்சி மாவத்தை,
கொழும்பு - 14.

## சொற்சிலம்பம் போட்டி இல.118

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | | 3 | 4 | | ■ | 5 |
| 6 | | ■ | 7 | | ■ | 8 | |
| 9 | | 10 | | ■ | 11 | | |
| | ■ | | ■ | 12 | | | |
| 13 | 14 | | 15 | | | ■ | |
| ■ | 16 | | | | ■ | 17 | |
| 18 | | ■ | | ■ | 19 | | ■ |
| | ■ | 20 | | | | | |

## சொற்சிலம்பம் போட்டி இல.116

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 ஒ | வ் | 2 வா | 3 மை | ■ | 4 அ | ம் | 5 பு |
| ப் | ■ | 6 க | ய | வ | ன் | ■ | த் |
| 7 பு | 8 வ | ன | ம் | ■ | 9 ப | 10 கு | தி |
| 11 வி | ட | ம் | ■ | 12 க | ன் | னி | ■ |
| ■ | க் | ■ | 13 மு | ழி | ■ | 14 த | 15 க |
| 16 ந | கு | 17 த | ல் | ■ | 18 அ | ல் | ல |
| வ் | ■ | 19 க | லை | 20 வா | ணி | ■ | வ |
| 21 கு | ண் | டு | ■ | 22 வி | ல் | ல | ன் |

## சொற்சிலம்பம் போட்டி இல.118

**இடமிருந்து வலம்**

1. தில்லை. இந்திய நிதியமைச்சரும் கூட.
6. ஒரு திக்கின் சுருக்கம்.
7. பாய்.
8. உயிரின் ஆரம்பம்.
9. கணவன் – மனைவி.
11. படிக்க வேண்டியது.
12. வயலின் எல்லையில்கட்டுவது.
13. இதற்குத்தான் போராட்டமே.
16. சம பக்கங்களில் ஆனது.
17. உணவை அரைப்பது.
18. தந்தையின் சகோதரி.
19. பயிருக்கு பசளையாகும் சாணம்.
20. சூரியன் அஸ்தமிக்கும் கரை.

**மேலிருந்து கீழ்**

1. சீதையை அடைய இராமர் உடைத்தவில்.
2. கண்ணணி / அடையாளம்.
3. ஒன்றின் பங்கு.
4. அழகி. மன்மதன் மனம் கவர்ந்தவள்.
5. ஆசைப்படுதல்.
8. ஒரு தோல் வாத்தியம்.
10. ஒரு பறவை.
11. நிறை/எடை
12. கடவுள் தருவது / அருளுவது
14. பத்தாம் நாள் திதி.
15. ஒன்றாகச் சேர்ந்து வருவது.
17. அருந்த / குடிக்க.
18. பெண்.
19. சுயநலம் பிறப்பது இந்த எண்ணத்தால்.

## சொற்சிலம்பம்-114 பரிசு பெறுவோர்.

1. செல்வி. கே.ஆர்.ரூபா
33, ரீவ சைட் றோட், களுதாவளை,
மாத்தளை.
2. செல்வி. அ.அங்கையற்கண்ணி
25, வெலிங்ரன் வீதி,
திருகோணமலை.
3. செல்வி. எஸ்.சுபாஜினி
இல 71/9, காலி வீதி,
தெஹிவளை.

### பாராட்டுப் பெறுவோர்

1. எஸ்.வி.ஜெகநாதன்,
18 – 2/5, கூலிங் வூட் பிளேஸ்,
கொழும்பு – 06.
2. ச.ஷதுர்ஷிகா,
இல. 66, ஸ்கந்தபுரம்,
கிளிநொச்சி.
3. கீதவாணி விஜய, குமார்
அணிஞ்சில் ஒழுங்கை,
துன்னாலைதெற்கு, கரவெட்டி.
4. இ.இராஜேந்திரா,
21", கனகரட்னம் வீதி,
அரியாலை, யாழ்ப்பாணம்.
5. அகல்யா அல்போன்சஸ்,
இல. 4, ஓடக்கரை வீதி,
யாழ்ப்பாணம்.
6. சுசி.அழகையா,
301, அன்புவழிபுரம்,
திருகோணமலை.
7. நா.சிவலிங்கம்,
எம்.ஓ.எச். விடுதி ஒழுங்கை,
கல்முனை.
8. கே.அரசேஸ்வரன்,
கலைமகள் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.
9. பொன்.இராசரத்தினம்,
மே/பா எஸ்.என் ராஜா 'ராஜபுரம்',
மல்வம் குறுக்கு வீதி, உடுவில்.
10. க.ராஜசந்திரன்,
42, கண்ணாபுரம்,
நாவாந்துறை/தெ,
யாழ்ப்பாணம்.

சுவிஸில் உங்கள் அபிமான

**சுடர் ஒளி**

விளம்பர முகவர்
சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (கணா)

MILITAR STR.84
8004 - ZURICH
SWITZERLAND
Telephone :- 0041 - 043. 3179137 - 9

**இந்தியத் தமிழ் சினிமாவில்**
நடிக்க விரும்புவோர்
உடன் விண்ணப்பிக்கவும்
(இலங்கையில் படப்பிடிப்பு)

**Director**
9/2, Hamdan Lane,
Wellawatta,
Colombo - 06

வவுனியாவில்
**காணி விற்பனைக்கு**
வவுனியா வைரவப் புளியங்குளம்
புகையிரத நிலைய வீதியில்
குருமன்காட்டுச் சந்திக்கு
அருகாமையில், பிரதான வீதியில்
அமைந்துள்ள 4 பரப்புக் காணி
விற்பனைக்கு உண்டு.
நேரடியாகத் தொடர்பு கொள்ளவும்
தொடர்புகளுக்கு:
**0777 585922**


# இரண்டாம் ஆண்டு நினைவு நாள்



| ஜனனம் | அஸ்தமனம் |
|---|---|
| 1928 - 03 - 14 | 2002 - 07 - 18 |

எம் உயிரில் கலந்து-நித்தம் எம்
உணர்வில் நிறைந்து வாழும் அன்னையே!
சராண்டுகள் என்ன
எத்தனை ஆண்டுகள் மறைந்தாலும்
என்றும் நீ எமக்குள்
அழியா ஓவியமே!

**திருமதி. சதாசிவம் யோகம்மா**
திதி-26.07.2004

மேழிச்செல்வம்,
மடத்தடி வீதி,
சாவகச்சேரி.

கணவர், பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரக்குழந்தைகள்.


# வீட்டு யுத்தம் தீர்ந்தது!

வளரும் சிறுபிள்ளைகளின் பசியைத் தூண்டும்
சுவைமிக்க விட்டமின் பானம்

**Hungry Plus**



வளரும் பருவத்திலுள்ள சிறுபிள்ளைகளுக்கு உணவு ஊட்டப்போனால் வீடே யுத்த களமாகும். அதட்டியும் மிரட்டியும் அடித்தும் அவர்களுக்கு உணவு ஊட்டுவதற்குள் தாய்மாருக்கு உயிரே போய்விடும்...ஆனால், இப்போது இப் பிரச்சினைக்குச் சிறந்த பரிகாரம் கிடைத்துள்ளது. அதுதான், ஹங்ரி பிளஸ் விட்டமின் பானம்!

சிறுவர்களின் பசியுணர்வை இயற்கையாகத் தூண்டும் லைசின் மற்றும் விட்டமின்கள் அடங்கிய சுவைமிக்க ஹங்ரி பிளஸ் பானம், பிள்ளைகளின் நலமான வாழ்வுக்கும் உற்ற துணையாகும்.

**ஹங்ரி பிளஸ்**
பசியைத் தூண்டும்...

இப்போது, முன்னணி மருந்தகங்களிலும் சுப்பர் மார்க்கட்டுகளிலும் வாங்கலாம்.

Marketed by: ARKEM PHARMACEUTICALS Tel: 011- 2470290


திருகோணமலையில்...
**சுடர் ஒளி** **உதயன்** **விளம்பர பணிமனை**

எமது பத்திரிகைகளில் உங்களது விளம்பரங்களை பிரசுரிக்க விரும்பினால் அவற்றினை திருகோணமலை 39, அருணகிரி வீதியில் அமைந்திருக்கும் எமது விளம்பர பணிமனையில் கையளிக்கலாம்.

மேலதிக விபரங்களுக்கு:-
விளம்பர முகாமையாளர்
'உதயன்' 'சுடர் ஒளி' விளம்பரப்பிரிவு
65, ஜெயந்த மல்லி மாரச்சி மாவத்தை, கொழும்பு - 14.
011 4734401 - 3, 011 2399666 - 70

திருகோணமலையில் தொடர்புகளுக்கான
தொலைபேசி இலக்கம் 026 2220783, 026 2221670

உங்கள் வாழ்நாள் முழுவதும்
நிலைத்து நிற்கக்கூடிய அழகிய நிறங்களுடனும்
பலவித சித்திர வேலைப்பாடுகளுடனும் கூடிய
உயர்ரக சுவர் / தரை ஓடுகள்




.... இன்னும் பல அளவுகளில்!

யாழ் நகரில்
பின்வரும் விற்பனை நிலையங்களில்
பெற்றுக்கொள்ளலாம்.

**NEW KAMAAL CERAMICS,**
இல. 37 ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 2085

**JAFFNA CERAMICS,**
இல. 2C ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 3667

**VENKE IMPEX,**
இல. 27/3 மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே. 021 222 6738

கொடுக்கும் பணத்திற்குப் பெறுமதி

LWL **லங்கா வோல்டைல் லிமிரெட்,**
215, நாவல வீதி, கொழும்பு-5.
தொ.பே: (011) 2 805460/(011) 2 806450

நீடித்து நிலைக்கும் அழகுமயம்

**EXPOAIR எக்ஸ்போ எயார்**
your friend in the skies... வானில் உங்கள் நண்பன்...

யாழ் பயணத்தின் போது
றோல்ஸ் றொய்ஸ் இயந்திரத்தின் சொகுசுப் பயணத்தினை
அனுபவியுங்கள்!

யாழ்ப்பாணம்: 021 2223891, 021 2226297, 077 2349999
கொழும்பு: 0112372952/3 Fax: 011 2372954
வெள்ளவத்தை: 011 2360290, 2360291
e-mail: jaffna@expoavi.com, reservations@expoavi.com

இலங்கையின் நம்பத்தகுந்ததும் முன்னணியுமான யாழ் – கொழும்பு விமான சேவை

**PROFESSIONAL COMPUTER COURSES**

DIPLOMA IN MULTI MEDIA (With Video Mixing)
DIPLOMA IN DESKTOP PUBLISHING
DIPLOMA IN HARDWARE (Online)
DIPLOMA IN COMPUTER PROGRAMMING
DIPLOMA IN INTERNET TECHNOLOGY
DIPLOMA IN AUTOCAD ( With New South Wales University Syllabus And Guide Books)

அனைத்து மாணவர்களுக்கும்
FREE HANDOUTS
FLOPPY DISKETTE
SOFTWARE CD & FREE COMPUTER CONSULTING
இவை அனைத்தையும் ஒன்றாகப் பெற்றிட நாங்கள் உதவுகின்றோம்

**eTouch COMPUTER SYSTEM**
The right way to touch IT
UDUVIL ROAD, MARUTHANARMADAM, JAFFNA
T.P :- 021 4 590222

Comfortable A/C, Non A/C Rooms
Quality & Tasty Food
Take Away
Comfortable A/C Dining Rooms



**Hotel Swarkka & Restaurant**
#33, Soosaipillaiyarkulam Road, Vavuniya. Tel: 0242221291 Mobile: 0777563991 E.mail:hotelswarkka@hotmail.com



இப்பத்திரிகை கொழும்பு – 06 வெள்ளவத்தை, பெரக்கும்பா பிளேஸ், 1/5ஆம் இலக்கத்தில் உள்ள லாண்ட்மார்க் எண்டர் பிறைசஸ் ஸ்தாபனத்தினால் 2004 ஜூலை 26 ஆம் திகதி வெளியிடப்பட்டது.